# புத்துணர்ச்சி

## டால்ஸ்டாய்

UNIVERSITY LIBRARY
3 1 MAY 1957
MADRAS

தழுவல் :

**விருதை ந. இராமசாமி**

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

**ஸ்ரீமகள் கம்பெனி**
22, வரதா முத்தியப்பன் தெரு: சென்னை. 1

*Univ. Grants Commission.*

முதற்பதிப்பு: ஜூன் 1955
உரிமை உடையது.

•

விலை. ரூ. 2-0-0

1346

விற்பனை நிலையம்:
**எம். எஸ். ராமுலு கம்பெனி**
**286, சைனு பஜார், சென்னை-1**

# பதிப்புரை

பொதுவாகப் பேரறிஞர்கள் அனைவருமே உலகுக்குப் பொதுச் சொத்துக்களாவார்கள். அறிஞர் டால்ஸ்டாய் இரஷ்ய நாட்டிற்கு மட்டுமே அல்ல, உலகிற்கே பொதுவானவர்.

டால்ஸ்டாய் தலைசிறந்த தத்துவஞானி —நாடெங்கும் புகழ்பெற்ற நாவலாசிரியர்— பொழுது போக்கிற்கான கதைகள் புனைபவரல்ல, பயனுள்ள கருத்துக்களை வழங்குவதிலே வல்லுநர். அத்தகைய பெரும் இலக்கிய கர்த்தாவான டால்ஸ்டாய் உருவாக்கிய புத்துணர்ச்சி (**Resurrection**) என்னும் நாவலைத் தமிழ்ப் பண்பாட்டிற் கேற்றவாறு தழுவி எழுதி நூல்வடிவாக்கித் தமிழகத்திற்கு தருவதிலே பூரிப்படைகின்றோம். டால்ஸ்டாயின் கதையிலுள்ள 'மூலக்கரு'வை எடுத்துக் கொண்டு தமிழகத்திற் கேற்ற வாறு தனது சுய கற்பனையை, தேன் தமிழோடு கலந்து இப் 'புத்துணர்ச்சி'யை விருதை. ந. இராமசாமி நமக்குத் தந்துள்ளார்.

எங்களின் பயனுள்ள முயற்சியைத் தமிழ் மக்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக் குண்டு.

**பதிப்பாளர்கள்.**

# வாருங்கள்

"நான் போற்றிப் புகழும் குருவாக லியோ டால்ஸ்டாயை மதிக்கிறேன்" என்று உலக உத்தமர் காந்தியடிகள் பன்முறை பேசினார்கள்.

அத்தகைய பெரும்புகழுக்குப் பாத்திரமான லியோ டால்ஸ்டாய் எழுதிய "புத்துணர்ச்சி" (**Resurrection**) என்னும் நாவலைக் கண்ணுற்றேன். கருத்துடன் கற்றுணர்ந்தேன். அதன் விளைவாக "புத்துணர்ச்சி" நூல் வடிவாக உங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது இன்று. இது முழுக்கவும் டால்ஸ்டாய் புத்துணர்ச்சியின் மொழிபெயர்ப்பல்ல, அடிப்படை மட்டும் நழுவாதழுவல் தான்.

கதாபாத்திரங்களின் பெயர்களையும்—சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும்—பூராவுமே நம் நாட்டிற்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துள்ளேன். கதையின் இறுதிப் பகுதியைச் சிறிதளவு மாறுதல் செய்து, மூலக்கதையின் அடிப்படை சிதைவுறுவண்ணம் எனக்கே உரித்தான நடையில் எழுதியிருக்கிறேன்.

இரஷ்ய ஞானி டால்ஸடாயின் மனப்பாங்கினை நம் நாட்டவருக்கு நமது பாணியிலேயே உணர்த்த வேண்டும் என்ற ஒரே ஆவல்தான், இந்நாவலை இடையிடையே எனது சொந்தக் கருத்துக்களையும் விதைத்து எழுதுமாறு என்னைப் பணித்தது.

நல்லாதரவு தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு டால்ஸ்டாயின் இலக்கிய மாளிகைக்கு அழைத்துச் செல்கிறேன் வாருங்கள்.

சென்னை-1.
7—5—55.

அன்பன்,
**விருதை. ந. இராமசாமி.**

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# 1

வசந்த காலம் வனப்பை வாரி இறைத்து விளங்கிற்று.

பல்லாயிரக்கணக்கான மக்கள், பரந்து கிடக்கும் இப்பூமண்டலத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்துப் பிளவு பண்ணினர்—ஒரு சின்னஞ்சிறு பகுதியையும் சின்ன பின்னப் படுத்திச் சிதைக்க, தங்களாலானதை யெல்லாம் செய்து பார்த்தனர்!

இயற்கையின் லாவண்யத்தை இல்லாதொழிப்பதற்காக செயற்கையின் உதவியை பக்கமாக்கிக் கொண்டதில் மனிதர்களின் தெம்பு—திடம்— வேகம் எப்படிப் பார்த்தாலும் எல்லை கடந்தவையே யாகும்!

செடிகொடிகளைச் சிரமம் பாராது அழித்தனர்—நெடுமரங்களை நெடுகிலும் வெட்டினர்—விரட்டியடித்தனர் வேகமாகப் புல்லினங்களையும்—விலங்கினங்களையும்—! தரையைக் கற்களினுல் மூடி தங்களுக்காக வசதி பண்ணிக் கொண்டனர்—வாழ்ந்தனர்—வாழ்கின்றனர்—வாழவும் போகின்றனர்.

இருந்தாலும் நகரின் நடுவே கூட—**“வசந்த காலம்”**—வசந்த காலமாகவே விளங்கியது. இயற்கையானது எடுத்து வீசும் எழிலை எதிர்ப்பு சக்தியால் முறியடிக்க முடியவில்லை போலும்.

அங்கும் இங்கும் என்றில்லாதவாறு எங்கும் எழிலரசியின் இன்ப நடனம்!—தங்கும் இடமெங்கும் தளிர் நடை கொண்ட மகிழ்ச்சித் தென்றலின் மாண்பு.

செடிகொடிகள்—சிற்சிறு புற்பூண்டுகள்—பூச்சிகள்—புழுக்கள்— பறவைகள்— மிருகங்கள்— இவைகளில் பற்பல பகுதிகள்— பண்புகள்—பவுசுகள் இருக்கலாம். என்றாலும் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டவை தானே. ஆயினும் மகிழ்ச்சி எனும் மது உண்டு— வசந்தம் கண்டு—ஏற்றம் கொண்டு— இனிமையிலே ஆழ்ந்திருந்தன. நன்மை—தீமை என்று பகுத்துப் பார்க்கும் பக்குவம் பெறாத குழந்தைகளும் வசந்தகாலப் புதுமையிலே புத்துணர்ச்சி பெற்றுத் தவழ்ந்தன.

ஆனல் மனிதர்கள் மாத்திரம்— பகுத்தறிவால்—பண்பின் புகழ்வழியால்—பன் மொழியின் திரு நலத்தால்—தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதையும்,—ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதையும் விடவில்லை,

வசந்த கால உதயப் பொழுது—காலை நேரம், மனித இனத்துக்கு முக்கியமானதாகவோ— புனிதமானதாகவோ— ரசிக்கத் தக்கதாகவோ— நளினம் மிக்கதாகவோ—புலப்படவுமில்லை—புரியவுமில்லை—. உலக உயிரினங்கள் அனைத்துக்கும் ஊட்டமளிக்கும் இவ் உன்னதகாலம் இவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை—.இதய தாகத்திற்கு இனிப்புச் சுவை ஈந்து இங்கிதமாக்கும் இயற்கை அழகில் இவர்களுடைய மனம் இலயிக்கவில்லை.

ஒருவரை மற்ருெருவர் அடக்கி ஆள வேண்டும், பிறருக்கு எதிரே தாம் உயர்ந்து வாழ வேண்டும். இத்தகைய ஆவலின் துடிதுடிப்பில்—பிறவி லட்சியத்தின் பெருமதிப்பில், அவர்களது கவனம் சென்றது—கலந்தது—கனத்தது.

**இதுவே தான் மனிதன் பிறவியோடு கொண்டுவந்த சுரண்டிக் கொழுக்கும் தத்துவமோ?**

காணி நிலம் வேண்டும் எனும் தனிவுடமையைப் பேணும் தாபம் தீராமல் தானே மனிதன் வாழ்கிறான்.........!

வெளியுலக வேடிக்கையே இவ்வாறு என்றால்........?

நகர சிறைக் கூடத்திலே அடைபட்டுக் கிடப்போர்--வசந்தகால இனிமையைச் சுவைத்தார்கள்--சுகம் கண்டார்கள்—என்று கருதுவதே தவறல்லவா........'

"இரு பெண்கள்—ஒரு ஆடவன்—ஆகிய மூவரும் ஏப்ரல் இருபத்தி எட்டாம் தேதி கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட வேண்டும்" என்ற அரசாங்க அறிவிப்புத் தாள் அங்கே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. இம் மூவரும் அங்கே குமுறிக் கிடக்கும் கைதிகள் பலருள் மிக முக்கியமானவர்கள்—பிரசித்தமான வழக்கொன்றின் எதிரிகள்.

அன்றுதான் ஏப்ரல் இருபத்தி எட்டாம் தேதி........!

இன்றும் சற்று நேரத்திலே வந்துவிடுவான்—கதவைத் திறப்பான்—"உம்......! நட......" என்று அதிகாரத்துடன் கூறுவான். வெறி நாயைப் போல தன்னை வீதியிலே இழுத்துச் செல்லுவான்— இப்படியாகத்தானே அவள் சிந்தனை சுழன்றிருக்க வேண்டும். சிந்தனை சுழலச் சுழல சோகம் அவளது சுந்தர முகத்தில் கருமையைப் படர விட்டது. வாளிப்பான

தேககட்டுடன் விளங்கிய அவ்வனிதையின் வடிவழகு பூராவும் வேதனையின் விளையாட்டால் வாடி வதங்கிப் போயிருந்தது.

தன்னை ஜெயிலர் வந்து கூட்டிக் கொண்டு போவதற்குள்ளாக கழிந்த நாட்களின் நிகழ்ச்சிகள்—வரலாற்று ஏடுகள்—அனைத்தையும் கோர்வைப் படுத்திப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் ஏனோ பிறந்தது அவளுக்கு.

அதனாலாவது மனப்பளுக் குறையாதா......? இந்து துக்கத்தினால் பீடித்தோருக்கு இயற்கையாக எழும்பும் இதய ஏக்கமல்லவா........?

அவள் இவ் உலகை உணர்ந்த நாள்முதல்—உலகத்தைத் துறந்து வாழ வேண்டிய நாள்வரை சென்று போன நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்ருக எண்ணிப் பார்த்தாள்—நெசவுப் பொறியிலே நகர்ந்து செல்லும் நூல் இழையின் லாவகத்தைப் போல அவளது சிந்தனை சக்தி சிறப்பு மட்டுமல்ல பலமானதும் தான். எல்லோருக்கும் இவ்வளவு தூரம் வரிசைக் கிரமம் தவருமல் வாழ்க்கை ஏடுகள் சிந்தனைத் திடலில் தீர்க்கமாகப் பதிவதில்லை. ஆனல்........அவளது சிந்தனையில் கடந்த காலப் பதிப்புகள் ஒழுங்கு முறையாகப் புரண்டன.

விசித்திரத்தின் நிறைவு—விபரீதத்தின் விளைவு சமுதாயச் சிறப்பின் சரிவு—மௌடீகத்தன்மையின் மலிவு—இவற்றைப் பிரதிபலித்தது அவளது பிறப்பு.

வரலாற்றுப் பாதையிலே அவளொரு அவமானச் சின்னம்—சமுதாயச் சாக்கடையில் நெளியும் புழு

கதிகெட்ட மனித வாழ்வின் களங்கம்—இவை சமுதாய அகராதி அவளைக் குறித்துத் தந்துள்ள விமர்சனம்.

பண்ணையிலே பணிபுரிந்து பசியோடு போராடிமாயும் பாட்டாளி வர்க்கத்தின் வாரிசு அவளது தாய். அந்த அம்மாவின் வயிற்றிலே கருவாய் உதித்து இப்பூமியிலே பெண்ணாய்ப் பிறந்தாள் அவள். ஆனால் திருமணமாகாத தாய்க்கு—உலகறிய ஒருவனை மணந்து கொள்ளாத அம்மாவுக்கு—பலபேர் முன்னிலையிலே கலியாணச் சடங்கு என்ற விளம்பரம் பெறாத வழுக்கி விழுந்த வனிதைக்கு—மகளாகப் பிறந்தாள் அவள்.

கருவிலேயே சிதைக்கப்பட வேண்டிய சின்னம்—ஆனாலும் பிறந்து விட்டது. இவ்வாறு தப்பித்தவறிப் பிறந்த அவமானச் சின்னங்கள் எத்தனை எத்தனையோ அழிக்கப் பட்டிருக்கின்றன. அரை நாள் என்ன அரை விநாடி உயிர்வாழ்வைக்கூட அவைகளைப் பெற்ற அம்மாக்கள் அனுமதிப்பதில்லை.

அவ்வாறு அனுமதித்தால் அமைதி இல்லை—ஆனந்தமில்லை! அலைகடல் துரும்புகள்போல சமுதாய சாகரத்திலே இங்குமங்கும் அடித்துப் புரட்டப்படுகிறார்கள். அதற்காக அஞ்சி கழுத்தை நெறித்துக் கொன்று குப்பைத் தொட்டியிலே தூக்கியெறிப்பட்டவை—பாழ் கிணற்றிலே வீசப்பட்டு மிதந்தவை—குழி தோண்டி பூமியிலே புதைக்கப் பட்டவை—பலப்பல.

இப்படிப்பிஞ்சிலே உதிர்ந்து போகாமல் உயிர் பிழைத்தவள் அவள்.

மாளிகையில் பூத்து மணம் பரப்பிய மலர் அல்ல அவள்! பிறந்த இடமோ மாட்டுக் கொட்டகை! வளர்ந்த

இடமும் அதுதான். தாதிமார் தாலாட்டத் தங்கத் தொட்டிலில் தவழ்ந்து கண்ணயர்ந்து தூங்கும் வர்க்கத்திலா பிறந்தாள்...? "பாவப்படைப்பு—கர்மவினையின் கை கண்ட பலன்—உயிர்வாழ யோக்கியதையற்ற பிராணி" என்ற ஊராரின் கண்டனத்துக்கும் கேலிக்கும் இலக்கான குழந்தைக்கு பஞ்சு மெத்தையில் துயிலும் பாக்கியமாகிட்டும்? வைக்கோல் போர்தான் அவளுக்கு மெத்தென்ற படுக்கை! இரை உண்ணும்போது—மாடுகள் கழுத்தை அசைக்கும் சமயம்—எழும்பும் மணியோசைதான் அவளுக்குத் தாலாட்டுப் பாட்டு!

இங்கே தான் வளர்ந்தாள். 'மேரி' என்னும் பெயரிடப்பெற்று அழைக்கப்பட்டாள். பிள்ளைக்கனி அமுதாய் வந்திட்ட செல்வம்—"மேரி—மேரி"—என்று வாய் இனிக்க ஆயிரம் முறை அழைத்து ஆலிங்கனம் செய்து உச்சி போந்து முத்தங்கள் பல ஈந்து உவகைப் பெருக்கில் மிதக்க வேண்டுமென மாதாவுக்கு அலை மோதும் ஆவல்தான். ஆனால் வீட்டு எஜமானியின் கோபக்கனலுக்கு இரையாக நேரிடுமே என்ற பயம் பின்னுக்கு இழுக்க — பிள்ளைப்பாசம் முன்னுக்குத் தள்ள—அவதி கொண்டாள் அந்த அம்மா!

பிரசவக்காலம் வரையிலே வீட்டு சீமாட்டி எறிந்து எறிந்து பேசினாள்—இடித்து இடித்துக் காட்டினாள். இழிவான சொல் என்று.

பிரசவம் ஏற்பட்டு—மேரி பூமியில் தவழ்ந்த பெருமிதத்தை பார்த்ததன் பின்னர் மாட்டுக் கொட்டகையிலாவது வாழ்ந்து தொலையட்டும் என்ற கருத்தில் இடம் ஒதுக்கித் தந்தாள் வீட்டு எஜமானி. அந்த

அளவுக்கு கருணையங்கடலாக அவள் மனமாறியதற்குக் காரணம் 'மேரி'யின் **குறுகுறுத்த கண்களே......!**

உலக அழகுப்பொருட்களின் கூட்டுச் சேர்க்கை போல அழகின் மணிமுடியாய் 'மேரி' பிரகாசித்திருப் காவிடில் ஒரு வேளை பிஞ்சியிலேயே உதிர்ந்திருப் பாள் அல்லது பெற்ற தாயாருடன் துரத்தி அடிக் கப்பட்டு உலகின் கடைக் கோடியில் தள்ளப் பட்டி ருப்பாள்.

இந்த மட்டுக்கும் மாட்டுக் கொட்டகையாவது கிடைத்ததே என்பதில் ஒருவிதத் திருப்தி மேரியின் தாயாருக்கு.

மேரியின் குவளை மலர் அதரத்திலே—கண்ணாடிக் கனனங்களிலே—பிறையைப் பழிக்கும் நுதலிலே—எட்டிப்பூவை எள்ளி நகையாடும் நீள் மூக்கிலே—கருத்தை ஈர்க்கும் காந்தக் கண்களிலே—மலரின் மென்மையை இகழும் தளிர் மேனியிலே—அந்தத் தாய்மை பூரித்தது—ஆனால் தலை நிமிரத்தான் முடிய வில்லை.

மகிழச் செய்த அந்த சிசுவால் **மாதாவின்** மனக் கவலையை நீக்க முடியவில்லை.

**மகிழ்ச்சியைக் குலைப்பது மனக்குறை!—அது இதயத் திலே உராய்கிறவரை நீடித்த மகிழ்ச்சி கானல் நீர்தானே!**

**"ஞான ஸ்நானம்"** செய்வித்து, பரமண்டலத்தின் படைப்புப்பட்டியலில் மேரியையும் ஒருத்தியாக்க எவ் வளவோ பிரயத்தனம் பண்ணினாள். மாதாக்கோவி லில் மண்டியிட்டு மன்றாடினாள். கண்ணீர் சிந்திக் கதறினாள் தன் திருவருள் செல்வத்தை பரிசுத்தமாக்

குமாறு. 'ஞான ஸ்நானம்' என்னும் மதச்சடங்கை செய்தருளுமாறு வேண்டினாள். ஆனால் அவளது பரிதாபக் குரல் கேட்டு பாதிரியார் பதைபதைத்துப் போகவில்லை. பாவப் படைப்புக்கு மதச்சடங்கு செய்யும் பழக்கமே கிடையாதென்று கண்டிப்பாய்க் கூறி விட்டார்.

மேரியைத் தோளில் சுமந்து கொண்டு சர்ச்சிலிருந்து வீடு திரும்பிய அந்தத் தாய் தட்டுத் தடுமாறித் தரையிலே சாய்ந்தவள்—பின்னர் எழுந்தாளில்லை. **பையூரிலே உதித்து — பொய்யூரிலே உழன்று — மெய்யூரை நாடிப் போனவர்களின்** பட்டியலில் இடம் பெற்றாள்.

ஆனால் அந்த கசங்கிய மலருக்கு சுவர்க்கம் சிந்தித்தா......? அன்றி நரகம் கிட்டியதா......? இது பற்றி பாதிரியாருக்குக்கூட பரமண்டலத்துப் பிதாவிடமிருந்து தகவல் வரவில்லையெனில் பாமரருக்கு எப்படித் தெரியும்......?

மேரி இப்பரந்த உலகில் தனிமையாக விடப்பட்டத் தருணத்திலே பண்ணைச் சீமாட்டி அவளைத் தத்துப் புத்திரியாகச் சுவீகாரம் செய்து கொண்டாள்—அன்புடன் வளர்த்தாள்—குழவிப் பருவத்து மேரியை குமரியாக ஆக்கிக் கண்குளிரக் காண, சீமாட்டிக்கொரு தீவிர ஆசை—வீட்டு வேலைக்காரி பெற்ற குழந்தை தானே எனும் அருவெறுப்பின்றி ஆளாக்கினாள்.

இப்போது மேரி பூத்துக் குலுங்கும் **புதுமலர்!**—மது நிரம்பிய **குடம்!**—வண்ண நிறங்காட்டி வண்டுகளை வாவேன்று அழைக்கும் **பருவ பூம்பொழில்!—வாழ்வாவது மாயம்—மண்ணாவது திண்ணம்**" என்னும்,

மாய உலக தர்மத்தை மண்ணோடு மண்ணாக்கி "**வாழ்வே எல்லாம்**" என்ற மயக்கத்தை யூட்டும் **மோகன நிலா!**—'முன்னேறிவா' என ஆடவரை முடுக்கி விடும் மூல மந்திரத்தின் **கலாநிதி.**

**காண்பவர்,** கண் பார்வையை **இழுக்கும் சக்தியை பருவம் தன்னோடு கூடவே கொண்டுவரும் விந்தை தான் என்னே!**

பண்ணைச் சீமாட்டிக்கு உடன்பிறந்த அண்ணா ஒருவர் உண்டு. அவருடைய குமாரன், கல்லூரியில் படித்தவன். அவன் பெயர் சேகர்.

அவன் கோடை காலத்தை உல்லாசமாய்க் கழிக்க அத்தை வீட்டுக்கு—பண்ணை மாளிகைக்கு வந்தான்.

மேதையைப் போன்ற முகவிலாசம்—எடுப்பான உயரம்—கட்டு மஸ்தான உடல்— எதையும் கூர்ந்து நோக்கும் கண்ணோட்டம்—வானத்தை நிகர்த்த வள் ளல் தன்மையுள்ள புன்முறுவல் பூத்த உதடுகள்—ஒழுங்கான பல் வரிசை—உயர்ந்து ஒய்யாரம் கொண்ட நாசி—சுறுசுறுப்பான கரங்கள்—இவற்றிற்கு உடமை யுள்ளவன் **சேகர்.**

புத்தகமும்—கையுமாக சர்வ சதாவும் அமர்ந்திருப் பான்—இரவு வேளைகளில் மாடி உச்சிக்குச் சென்று ஒரு ஈசிசேரில் சாய்ந்தவாறு வான வெளியைப் பார்த் துக் கிடப்பான்.

வானத்துக்கு அப்பாலே ஏதோவொரு உலகம் இருப்பதாகவும்—அங்கே ஆண்டவனின் ஆட்சி நடப் பதாகவும்—அவன் அருளால் தான் பூமி அணுக்கள் யாவும் அசைவதாகவும்—பேசுகிறார்களே, அந்த

வானத்து ராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதா என்ற ஆவலுடன் இப்படி வானத்தை வெறி வெறித்துப் பார்க்கிருனே என்னமோ?—பார்ப்பதற்கு பித்தனைப் போல தோன்றினன்—ஆராயும் திறன் மிக்க விஞ் ஞானிபோல—ஆரும் பொறுப்புள்ள அரசியல்வாதி போல—காட்சி தந்தான்—உலவினன்.

நிலங்களை பகிர்ந்தளித்து பாகுபாடுகளைப் போக்கி புதியதோர் உலகைப் படைப்பது எவ்வாறு என்ற ஆராய்ச்சியிலே முழுக்க முழுக்க அவன் ஈடுபட்டி ருந்தான் என்பதும் உண்மைதான்!

மனித வாழ்வின் ஜீவாதாரமான அப்பிரச்னை யில் அவனுக்கு அளவுக்கு மிஞ்சிய **ஆவல்—அக்கரை!** உயர்வு தாழ்வு பேதமற்ற உயரிய **சமுதாயத்தை**—உன் னதமான மக்கள் **கூட்டுறவை**—ஒப்பற்ற **வாழ்வு முறையை**- உருவாக்க **'நிலப் பங்கீடு'** முறை அவசியம் என்ற பரந்த கொள்கையை **பகுத்து உணர்ந்தான்—பயனெனப் போற்றினன்—பாடுபட துடித்நான்.**

இப்பேர்ப் பட்ட பெரும் திட்டங்களை உருவாக்கும் செயலில் மூழ்கி உலகை மறந்த நிலையில் பித்தனுக நடமாடிய அவன் கூட.........?

அவனுமென்ன **மனிதன்** தானே......! **உண்பவனுக்கு உடலிலே ஊட்டம்!—உடனடி பயனே உணர்ச்சியோட்டம்!— இனி ஏற்படும் நாட்டமெல்லாம் பெண்மையின் மீதுதானே!**

இயற்கையோடு இணைந்த **இயல்பு**— இதுவாகத் தானே இருக்கிறது......?

கூவும் குளிலின் குரலினிமையை ரசிக்காத—விரும்பாத—ஜீவனை இயற்கை என்றாவது—எங்காவது தன்னுடன் வைத்துக் கொண்டது உண்டா.....?

அத்தை வீட்டிலே **அழகு ராணியாக—அல்லி மலராக—அத்தர் மணமாக—அள்ளித்தரும் ஒளி வைரமாக**—ஜொலிக்கும் 'மேரி' மீது அவன் பார்வை திரும்பிற்று. போகிற வருகிற சமயங்களில் கட்டுப்பாட்டையும் மீறி—கருத்தைவிட்டு கண் காணு களிவுலகிற்குத் தாவி—அவள் மீது பாய்ந்து பறக்கும் பார்வையை மீட்க முடியாது தவித்தான்.

புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்ப்பதை—இரவு நேரத்திலே வானத்தை நோக்கிக் கிடப்பதை—எப்போதும் அரசியல் ஆராய்ச்சியில் ஆழ்ந்து விடுவதை—எல்லாம் இப்போது விட்டுவிட்டான் அவன்.

தண்ணீர் அருந்தவரும் பாவனையில் சமையற் கட்டுக்குள் நுழைவது— மாலையின் போது மலர்ச் சோலையிலே அலைவது— மேரியின் நிழல் நடமாடும் இடமெங்கும் சுற்றித் திரிவது இப்போது அவனது அன்றாட அலுவல்! **அரை விநாடிப் பொழுதின் அருமையைக் கூட நன்கறிந்திருந்தான் அவன் இப்போது!**

ஒரு நாள் அவன்..........................................
.........................?

* * *

இதற்குமேல் மேரியின் சிந்தனைக் கயிறு சடக்கென்று அறுந்தது—மேலும் கடந்த கால வரலாற்றைக் கருத்தோவியமாகக் காண அவனுக்கு போதிய தைரியம் பிறக்கவில்லை.

பிறந்த கதை—சிறு பிராயத்திலே வளர்ந்த வரலாறு—இவை பிறர் கூற அவள் கேட்டவை.

இதற்குப் பின்னர்—அதுவும் அந்த ஒரு நாளுக்குப் பிறகு—நடந்தவை அனைத்தும் அவளுக்கு உலகம் உணர்த்தப் பட்ட நேரத்திலே நிகழ்ந்தவை யல். ஆகவேதான் மேற்கொண்டு எண்ணிப் பார்க்க **அஞ்சினுள்—அசூயை கொண்டாள்—அல்லற்பட்டாள்.**

அதே சமயம் சிறைக் கதவின் இரும்புப் 'பாட்லாக்கை'க் குலுக்கித் திறந்தான் வார்டர்—அவனைப் பின் தொடர்ந்து பேசாது போனுள் மேரி.

# 2

விடிந்து வெகுநேரமாகியும், அன்று ஏனோ படுக்கையை விட்டே எழுந்திருக்காமல் இப்படி அப்படிப் புரண்டு புரண்டு படுத்தவாறு கிடந்தான் சேகர்.

உயர்ந்த—ஒயிலான—மஞ்சத்தில், ஸ்பிரிங் படுக்கையின் மீது மயில் இறகும்—மாறிமாறிக் கடைந்த இலவம் பஞ்சும்—அடைத்த மெத்தையில் இப்படிப் புரண்டு கொள்வதால், அவனுக்கு உடற்களைப்பு நீங்குவது போலப் பட்டது. காலை நேரத்து ஊதல் காற்று அவன் அணிந்திருந்த கம்பளி உடையினூடே நுழைந்து உணர்வு ஊட்டியது. இதற்கு மாற்றாக சிகரெட்டைப் புகைத்துக் கொண்டே படுத்திருந்தான்.

ஜான் குடும்பத்தினரோடு தான் கழித்த மாலை நேரங்களைப் பற்றி நினைத்துப் பார்த்தான் அவன்.

அவர்கள் வீட்டுப் பெண்ணைத் தான் அவன் மணம் புரிந்து கொள்ளப் போவதாக எல்லோருமே கருதினர். “ஏன் இப்படி நினைக்கிறார்கள்?” என்று தனக்குள் தானே ஒரு வினவை எழுப்பிக் கொண்டான்.

அப்போது அந்தப் பெண்—அவள்தான் ‘எலிசபெத்’—அவளின் சுந்தரமயமான தோற்றம்—சோம்பல் அறியா அந்த மின்வெட்டுப் பார்வை— அவன் மனக்கண் முன்னே நர்த்தன மாடின.

அவன் பெருமூச் செறிந்தவாறே, சிகரெட்டை வீசி எறிந்துவிட்டு மற்ருெரு சிகரெட்டை எடுக்கப் போனுன்—'**செயின் சுமோகிங்**' செய்யும் சிங்காரலோலனு அவன்? அதே நிமிடம் அவனது சித்தம் வேறு திக்கில் திரும்பியது. படுக்கையைவிட்டுப் பரட்டென்று இறங்கி, உடை தரிக்கும் அறைக்குப் பூமி அதிரும்படி நடந்து சென்ருன்.

பல்பொடியை எடுத்துப் பல்லைத் துலக்கிக்கொண்டு, மணக்கும் தண்ணீரால் வாயைக் கொப்புளித்தான். கைகளையும்—முகத்தையும்—வாசனைச் சோப்பினுல் தேய்த்துக் கழுவினுன். நகங்களையும்—நாசித்துவாரங்களையும்—காதுகளின் சந்து இடுக்குகளையும்—சுத்தம் செய்து கொள்வதில் கூடத் தனிக்கவனம் செலுத்தினுன்.

மெல்லிய ஆடைகளை அணிசெய்து கொண்டு—நிலைக்கண்ணுடியின் முன் நின்று கிராப்பை வாரிவிட்டு—தனது அழகின் அம்சத்தைப் பார்த்தான்—பரவசமடைந்தான்.

அவன் உபயோகித்த எல்லாப் பொருள்களும் விலை வாட்டத்தில் உயர்ந்தவை—ஆனுல் கண்ணைப் பறிக்கும் பகட்டுக்கும் அவைகளுக்கும் வெகு தூரம்—இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்பு அவன் உல்லாசபுரியின் தலைவனுக வீற்றிருந்து அரசாண்டிருப்பான் என்பதை அறையில் அங்குமிங்கும் விரவிக் கிடக்கும் பொருள்களே எடுத்துக் காட்டின—அவை அத்தனையும் இன்றும் அவனுக்காகவே உள்ளன—ஆயினும் அப்பொருள்களில் பல இன்று அவனுக்கு அலட்சியமாகப் பட்டன

பாவம்! அலுப்பின் எல்லைக்கு வந்துவிட்டானா? ஆகவேதான் **'அல்வா'வின் 'இனிமையில் கூட அவனுக்குக் குமட்டல் வருகிறது போலும்!**

பார்வைக்கு சிங்கத்தின் கால்கள்—ஆனால் எண்ணிக்கையில் மட்டும் மூன்று—மேலே உருவத்தில் வட்டவடிவம்—ந க ர சு வேலையில் நற்சாட்சிப் பொருளாக நளினம் கொண்டாடிய அந்த மேஜை சாப்பாட்டு அறையில் நடு நாயகமாக நின்றது—தரை சுத்தமாகக் கழுவப்பட்டு பளபள வென்றிருந்தது—மேஜைமீது தனி அழகு கொண்ட பீங்கான் கெண்டியில் காபி **'டிக்காசனும்'**—கண்ணாடித்தட்டில் **'அஸ்காவும்'**—வடிய விடும் மூக்குள்ள கண்ணாடிக் கோப்பையில் சூடான ஆவியைப் புகைக்கும் காய்ச்சிய பாலும்—வைக்கப்பட்டிருந்தன.—அகன்று வட்டவடிவமான வட்டிலில் வெளுமையான சல்லாத்துணி விரிக்கப் பட்டு சுவைமிக்க பலகாரங்கள் படைக்கப் பட்டிருந்தன—, நீருக்கும்—கிளாஸுக்கும் நிறபேதமில்லா முறையில் பளபளத்த தனியான டம்ளரில் தண்ணீர் வைக்கப் பட்டிருந்தது.

சிற்றுண்டி அருந்தினான் சேகர்—கவனமாக—தயாரிக்கப் பட்டிருந்த உண்டியின் சுவையை உணர்ந்து அருந்துபவனாகத் தெரியவில்லை பார்வைக்கு—ஏதோ வொரு சலசலப்பு—சதங்கை கட்டிய மயிலை மாட்டு இணையின் வில்வண்டி ஓட்டத்தின் ஒலி—அவன் இதயத்தின் அதல பாதாளத்தில் அருவியெனப் பாய்வது போல—அவனது முகம் தென்பட்டது—தெளிவு தேய்ந்தது.

ஒப்பனைக்காகச் சிற்றுண்டியை உள்ளே தள்ளி வைப்பவனாகவே காணப்பட்டான்.

கச்சேரியில் கண்ணயர்ந்து போனவன்—கைதட்டல் ஒலிகேட்டு உறக்கம் தெளிந்து தானும் 'ஊரோடு ஒக்க ஓடு' என்பதுபோல சேர்ந்து ஒப்பனைக்குக் கைதட்டிவிடுகிறான் அல்லவா......?

மட மடவென்று மத்திய ஹாலுக்கு வந்தான். சோபாவில் சாய்ந்தான். சுருள் சுருளாக சிகரெட்டின் புகை லீலா விநோத மந்திரங்கள் காட்டி மறைந்தன. எதிரே அந்தச் சிறிய மேஜையில் பத்திரிகையும், சில கடிதங்களும் அவன் பார்வைக்காக வைக்கப் பட்டிருந்தன.

"எலிசபெத்தின் விவாகத்தை உடனே முடித்து வைக்கலாமென்று அம்மா ஆவலோடு இருக்கிறார்கள். தங்கள் கருத்துரை அறிய ஆசையுடன் காத்திருக்கிறோம்."

இது ஜான் எழுதிய கடிதத்திலே கண்ட வாசகம். அக்கடிதத்தின் சாரம் அவனை நோக்கிச் சிரித்தது. அவனுக்கோ ஆத்திரம். இந்தக் கற்பனை அவனுக்கு எரிச்சலூட்டியது. "திருமணம் எலிசபெத்திற்கு என்றால் எனக்கென்ன?" என்று அவனது அகம் முணுமுணுத்தது.

"அன்பரே! **மடல் விரித்து மலர்ந்து மணம் பரப்பும் மலர் —தன்னகத்தே தேன் துளிகளைச் சொட்டுகிறது!—அள்ளிப் பருகக் கருவண்டு எங்கே?** உங்கள் வருகைக்காக இரவு பூராவும் **என் மெத்தைப் படுக்கையிலே சரிபாதி இடம் காலியாகவே விடப்பட்டிருக்கிறது!**—வருகை நோக்கும் விழி

யுடன் வாசலின் அருகே வீற்றிருப்பேன்—வருக ........!" இது மற்றொரு கடிதத்தின் வசனமழை! எலிசபெத் எழுதியது!—ஜான் குடும்பப் பதிப்பகத்தாரின் வெளியீடு!—இதுவும் அவன் இதயத்தைத் தொட்டுத் துளிர்க்க வைக்கவில்லை.

வாட்டி வதைபுரியும் பருவத்து வாதனைக்கு—காதலின் சாதனைக்கு—விடையளித்து வழி அனுப்பி வைத்து விட்டவன் மாதிரி நடந்து கொண்டான்—எலிசபெத்தின் கடிதத்தையும் அலட்சியமாக அப்படியே போட்டு விட்டான்.

"நிலங்களை நிர்வகிப்பது பற்றியும்—நெற் களஞ்சியத்தை எந்த விகிதத்தில் குத்தகைதாரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பது என்பது குறித்தும்—தங்களுடன் பேசி முடிவு செய்ய வேண்டியதிருப்பதால் தாங்கள் புறப்பட்டு வாருங்கள்."

இது அவனுடைய பண்ணைக் காரனிடமிருந்து வந்தது. அதிருப்தி—மகிழ்ச்சி ஆகிய இரண்டையும் மாறி மாறித் தந்தது இக்கடிதம்.

தனக்கு இத்தனை ஏக்ரா நிலங்கள் இருக்கிறதே என்ற நினைப்பிலே மகிழ்ச்சி உதித்தது, மறுகணம் 'பொதுவுடமை' பேணும் தன் சித்தாந்தத்தை எண்ணும்போது தாமும் ஒரு நிலப்பிரபுவாக இருக்கிறோமே என்ற அதிருப்தி பிறந்தது அவனுக்கு.

தன் பெயருக்குள்ள நிலங்களை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்து விடுவதா? அன்றி தான் கொண்டிருக்கும் கருத்துக்கள் தவறு என்பதை ஒப்புக்

கொள்வதா?--என்ற இரண்டில் ஒரு முடிபுக்கு வரா மல் அவன் அறிவு திணறியது. இதே சிந்தனையில் சற்றுநேரம் தவநிலையில் அமர்ந்திருந்தான்.

அடுத்த கடிதத்தை எடுத்துப் பிரித்தான்—அது கோர்ட்டிலிருந்து வந்துள்ள 'சம்மன்'—அதில்......?

அன்று கோர்ட்டில் நடைபெற இருக்கும் கொலை வழக்கில் ஜூரியாக வந்து ஆஜராகும்படி கோர்ட்டார் கையொப்பமிட் டிருந்தார்.

கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்தாகிவிட் டது. கோர்ட்டுக்குக் குறித்த நேரத்தில் ஆஜராக இப்போதே புறப்பட வேண்டியதுதான் எனத் தீர்மா னித்துக் கொண்டான்.

அவன் தனது அறைக்குள் சென்றான். அங்கே பூர்த்தி பெறுமல் ஸ்டாண்டில் தொங்கிய ஓவியத்தை ஏறிட்டுப் பார்த்தான். இந்தக் கலையை அபிவிருத்திசெய் யமுடியாமல் போய்விட்டதே என மனம் புழுங்கினன். கோர்ட்டுக்கு ஜூரியாகப் போய் அமருவதற்கு ஏற் றவாறு கௌரவம் சிந்தும்—கியாதி சிதறும்—உடை அணிந்து கொள்ள வேண்டாமா என்ன?

இந்த மாதிரியான அர்த்தமற்ற கௌரவத்திலெல் லாம் அவனுக்கு நம்பிக்கை கிடையாதுதான். ஆன லும் உலகம் சுயநலத்தால் சுழற்றப்படுகிறவரை **புறக் கடை மதிப்பு—போலிக் கௌரவம்—பாசாங்கு நடை—பகட்டான பேச்சு—பாவனையான பார்வை—பகல்வேட நடிப்பு —** இவை தானே **பெரிதாகப் போற்றப்படும்—ஏற்றமாகப் பேசப்படும்—எழிலாகப் பின்பற்றப்படும்—எடுப்பான வாழ்வில் மிதிக்க விரும் புகிற எல்லோராலும்!**

சுழன்றடிக்கும் சூறாவளியிலே, சுற்றிச் சுற்றிப் பறக்கமாட்டேன் — சொன்னாலும் பதறமாட்டேன்— என்று ஊதி ஒரு கட்டுப் போட்டு உயரத்திலே விடப் பட்ட 'ரப்பர் பலூன்' ஒரேயடியாக அடம் பிடித்தால் ஆவது என்ன?

ஆக வாழ்வின் சுழற்சியிலே சிக்காமல் தப்பிக்க அவனால் முடியுமா என்ன.........?

அவன் வீட்டை விட்டு வெளியே வந்தபோது ஒரு ரிக்ஷா தயாராக நின்றது. அவனைக்கண்டவுடனே "ஜான் ரிக்ஷா அனுப்பினாரு—நீங்க இன்னிக்குக் கண்டிப்பா வரணுமாம்" என்றான் ரிக்ஷா வாலா.

"மாலையில் வர்ரேன்—இப்போ நான் அவசரமா கோர்ட்டுக்குப் போறேன்—என்னைக் கோர்ட்டுக்குக் கொண்டுபோய் விட்டுட்டு ஜானிடம் இந்த விபரத் தைச் சொல்லிவிடு" என்று கூறியபடி ரிக்ஷாவில் ஏறி அமர்ந்தான் அவன்.

"ஜான் குடும்பத்தோடு எனக்கு உள்ள தொடர்பு இந்த ரிக்ஷாக்காரப் பயலுக்குக்கூடத் தெரியும் போல இருக்கிறதே" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான், உதடுகள் அசையாமல் உள்ளத்துக்குள் ளாகவே.

**ரிக்ஷாவின் ஓட்டத்திலே உடல் குலுங்கியது போல—சிந் தனையின் சிறகடிப்பிலே அவனது உள்ளமும் ஆடியது.**

"சரி! எலிசபெத்தை மணந்து கொண்டால் என் னவாம்!" என்றொரு எண்ணம் எழுந்தது.

அவளை விவாகம் செய்து கொள்வதற்கு சாதக மாக எவ்வளவு காரணங்கள் இருந்தனவோ, அவ்

வளவு காரணங்கள் எதிராகவும் இருந்தன. சாதக—பாதகங்கள் தராசுமுள் பார்வையிலே சமமாக நிற்பது போல அவனுக்குத் தோன்றியது. தன் நிலையை உணர்ந்து அவனே சிரித்துக் கொண்டான்.

இரண்டு புல் கட்டுகளில் எதன் பக்கம் திரும்பி மேய்வது என்று திண்டாடும் மாடு மாதிரி..........! **தவித்தது—தள்ளாடியது**—அவனது மனம்........!

வண்டி கோர்ட்டு வாசலை நெருங்கியவுடன் "இதையெல்லாம் பிறகு பார்ப்போம்" என்று தானே முடிவு கட்டினன்.

பொதுக்கடமை யொன்றை நிறைவேற்றும் சாதனையில்—அதனுல் ஏற்பட்ட பூரிப்பு உந்தித்தள்ளும் பாவனையில்—கோர்ட்டு ஹாலுக்குள் பிரவேசித்தான் அவன்.

•

# 3

**உயர் நீதி மன்றம்—உண்மை தேடும் திருவிடம்—உரை யாடல் பெருத்த இடம்—உன்னத அறிஞர்களின் விவாத பீடம்—உண்டான சட்டங்களை எல்லாம் அலசிப்பார்க்கும் ஒலியற்ற ஊர்ச் சந்தை.**

அன்றைக்குக் கோர்ட்டில் **அலாதிக்கூட்டம்-பரபரப்பு-அலைமோதும் பேரொலி.**

சேவகர்கள் ஏதேதோ காகிதக் கட்டுக்களைச் சுமந்துகொண்டு அவசர அவசரமாக—குறுக்கும் நெடுக்குமாய்—அங்கும் இங்குமாகப் போனார்கள்—வந்தார்கள்-மொத்தத்தில் அலைந்தார்கள், அசதியும் அலுப்பும் அறியாதவராக!

காவலில் இல்லாத 'வாதிகளும்'—'பிரதிவாதிகளும்' துயரத்தோடு கோர்ட்டு வராந்தாவில் கூட்டங் கூட்டமாய்க் குழுமிக் கிடந்தனர். சிலர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். இவர்களெல்லாம் இன்று தீர்ப்பை எதிர்நோக்கி யிருப்பவர்கள் போலும்!

காவலில் உள்ள கைதிகளோ போலீஸ் வானில் கொண்டு வரப்பட்டு இன்னும் இறக்கப் படாமலேயே இருந்தனர். இரும்புக்கம்பி வலையின் துவாரத்து வழியாகக் கோர்ட்டையும் — கூட்டத்தையும் — வெறிக்க வெறிக்கப் பார்த்தனர் இவர்கள்.

இதே சமயத்தில் கோர்ட்டுக்கு வெளிப்புறத்தே மற்றொரு வேடிக்கை நடந்து கொண்டிருந்தது. கை

ரேகை பண்டிதரைச் சுற்றிக் கலகலப்பான கூட்டம். சிறிது நேரத்திற்கு முன்பு நடந்த விநோதச் செயலைக் குறித்து உள்ளூறச் சிரித்துக் கொண்டேயிருந்தார் பண்டிதர். அவரும் மனிதர் தானே..........! சிரிப்பு வராமல் எப்படி யிருக்கும்........?

அன்றைக்குத் தீர்ப்பளிக்கப்படும் கேஸில் கொஞ்சம் முன் பின்னுக வந்த வாதிக்கும்—பிரதி வாதிக்கும்—வெற்றி அவருக்குத்தான் என்று ஓங்கியறைந்து கூறிவிட்டார்!. இதனுல் அன்று சாயந்திரம் "ஸ்பெஷல்" வருமானம் வருவது உறுதியல்லவா? தோல்வியடைந்தவன் அவன் போகிற வருத்தத்தில் இவரை நினைத்தா பார்க்கப் போகிருன்? அப்படிப் பார்த்தால் தான் என்ன......? ஏதோ முணு முணுத்துப் போவான்; அவ்வளவுதானே!

கோர்ட்டு பியூன் தீர்ப்பைக் கேட்டு வந்துதான் சொல்லி விடுவான் அல்லவா? ஜெயித்தவன் வெளியே வர வேண்டியதுதான். வளைத்துக் கொண்டு பணம் பறிக்கலாமல்லவா! இனி அவருக்கென்ன கவலை......?

ஆனல் இந்த ஒன்றில் மட்டும் அவர்—பண்டிதர்—இம்மியும் விட்டுக் கொடுக்க மாட்டார். "வட துருவத்தில் வாழ்பவர்கள்—அதுதான்—"**எஸ்கிமோக்கள்**"—கைகளில் ரேகைகள் கிடையாது—கோடுகள் விழும் கூடத்தெல்லாம் இப்படியான வெப்பப் பிரதேசங்களில் தான்—வருடத்திற்கு ஒன்பது நாட்கள்—ஒன்றிரண்டு மாதங்கள்—சிற்சில மணிநேரங்களுக்கு ஆதவன் வந்து மீண்டும் கீழே போய்விடுகிற பகுதிகளில் பிறக்கிற குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு சூரிய உதயம் முதல் அறுபது நாழிகைகளைக் கணக்கு வைத்து எப்படி

சோதிடச் சக்கரம் போடுவது?—கூட்டல் கழித்தல் போட்டு 'பரல்' காண்பது எவ்வாறு?'' என்று கல்லூரி 'சயன்ஸ்' மாணவன் "**கனக சுப்பு ரெத்தினம்**'' போல யாராவது கேட்டு விட்டால்—"இது நாஸ்தீகப் பேச்சு—கடவுள் சித்தம் இப்படி இருக்கிறது—கடவுள் உண்டான காலத்திலே இப்படிப் பேசுகிற உங்களைப் போன்றவர்களையும் படைத்து வேடிக்கை பார்க்கிறார்—இதெல்லாம் அவன் "லீலா விநோதம்'' என சமரச சன்மார்க்கப் பேச்சு நிகழ்த்தி வைப்பார் பண்டிதர்.

ஜூரிகள் தங்கும் அறையினுள் நுழைந்தான் சேகர். அங்கே ஊரில் பற்பல துறைகளில் உள்ள பட்டாடைப் பாக்கியவான்கள் பத்துப்பேர் வீற்றிருந்தனர்.

**விதவிதமான ஆடைகள்—வேறு வேருன அணிரகங்கள்—ஒருவரை ஒருவர் மிஞ்சும் முறையிலே உடை அலங்கார ஒய்யாரங்கள்—இப்படிக்கான போட்டி மனப்பான்மைக்குக் காரணம் ஒருவேளை மாறுவேடப் போட்டி வைத்திருப்பதாக நினைத்துக் கொண்டார்களா?—இல்லை உடை அழகு மேன்மைக்கு உன்னத பரிசளிப்பு விழா என்று பாவித்துக் கொண்டார்களா......?**

புத்தம் புதிதாகப் பார்க்கிறவர்களுக்கு ஒருசமயம் இப்படித் தெரியலாம். ஆனல் உண்மையில் இவர்களது ஆசையெல்லாம் இதுதான். போன வருடத்திற்கு இவ்வருடம் பொருளாதார நிலை எனக்கு உயர்ந்துள்ளது என்பதை எடுத்துக் காட்ட வேண்டுமென்றுதான் இத்தனை பாடுகள் பட்டிருக்கிருர்கள்!

இங்கேயும் பார்வைப் பரிகாரமாக ஒன்று இருக்கத்தான் செய்தது! ஒரே ஒருவன் மட்டும் சாதாரணக் குடியானவன் உடை உடுத்தி யிருந்தான்.

மற்றென்றில் மட்டும் இவர்களுக்குள் மங்காத ஒற்றுமை இருந்தது—எல்லாருமே சலசலவென்று பேசினர்.

இந்தச் சம்பளமில்லாத ஜுரி வேலைக்காகத் தங்கள் பெரும் பெரும் வேலைகளையெல்லாம் விட்டு விட்டு, வர வேண்டியிருந்தது என்று பெருங் குறையாகப் புகார் செய்து கொண்டனர் ஒருவரிடம் ஒருவராக.

ஆயினும் இந்த "ஜுரி"ப் பதவியினுல் அவர்கள் பெருமையும் படுகின்றனர் என்பது அவர்களது பேச்சிலே தொனிக்காமலில்லை.

நாக்குதான் இந்தக் காலத்து மனிதர்களுக்கு நேர்மையுடன் அசைவதில்லையே!—உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித்திரியும் இப்புண்ணிய பூமியில் பிறழ்ந்து, பிறழ்ந்து பேசினுல்தானே **நாவன்மை மிக்க நாவலன்** என்று புகழ்பெற முடியும்!

இந்த விசித்திரமான மனித பிம்பங்களைப் பார்த்துக்கொண்டே—அவர்களின் முன்னுக்குப் பின் முரணுன பேச்சுக்களைக் கேட்டவாறே—உட்கார்ந்திருந்தான் அவன்.

ஜுரிப் பதவிக்கு அவனே புதிது—ஆதலால் இங்கே கூத்தாடும் சம்பவங்கள் யாவும் புதுமையாகத் தோன்றின அவனுக்கு!—இப்படிப்பட்ட மகான்களின் கரங்களிலே தானே நீதி ஒப்படைக்கப் பட்டிருந்தது என்பதை நினைக்குந் தோறும் அவன் **உடல் புல்லரித்தது**.

கோர்ட்டுச் சேவகன் ஜுரிகள் அறைக்குள் வந்தான். இவன் மிகவும் யோக்கியமானவன். மது அருந்

தும் பழக்கத்தினல் கெட்டுச் சீரழிந்தவன். கல்லூரிப் படிப்பு இருந்துங்கூட கோர்ட்டுப் பியூனுக சேவகம் பண்ணுகிருன்.

"எல்லாரும் வந்திருக்கிறீர்களா......?" என்று கேட்டவாறு மூக்குக் கண்ணுடியை மாட்டிக் கொண்டு சுற்றி வளைத்துப் பார்த்தான். தன் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து ஜூரிகளில் ஒவ்வொருவருடைய பெயராகப் படித்தான்—யாவரும் தாம் வந்திருப்பதை அறிவித்து ஆஜர் கோடுத்தனர்.

ஸ்கூல் ரைட்டர் **'அட்டன்டென்ஸ்'** எடுக்கும் முறை கூடத் தோற்றுப் போக வேண்டும் இவனிடம்!

"சேகர்" பெயரைப் படித்தவுடன் "நான்தான்" என்ருன் அவன். சேவகன் மூக்குக் கண்ணுடியின் மேல்புறத்து வழியாக அவனைப் பார்த்து விட்டு பிரத்யேகமாக அவனுக்கு வணக்கம் தெரிவித்தான். "தயவு செய்து எல்லோரும் கோர்ட்டுக்கு வாருங்கள்" என்று கூறிவிட்டுச் சேவகன் நகர்ந்தான்.

ஜூரிகள் அனைவரும் பின்தொடர்ந்து சென்றனர்.

பெரிய ஹாலில் நீதி மன்றம் அமைந்திருந்தது. ஹாலின் வடக்குப் புறத்து மேடை மீது நீண்ட மேஜையொன்று போடப் பட்டிருந்தது. அதைப் பச்சைத்துணி மூடியிருந்தது.

மேஜைக்குப் பின்னல் மூன்று நாற்காலிகள் கிடந்தன. அவைகள் நீதிபதிகள் உட்காருவதற்கென்றே தனி அழகுடன் தயாரிக்கப்பட்டவை போலும். மேடைக்கு வலது புறத்தில் ஜூரிகளின் ஆசனங்கள். இடது பக்கம் குற்றவாளிகள் நிறுத்தப்படும் கூண்டு.

எதிரே சின்னஞ்சிறு மேஜை. இரண்டு நாற்காலிகள், கோர்ட்டுக் குமஸ்தாக்களுக்காக. இதற்குத் தள்ளி நீள மேஜைக்கு இருபுறங்களிலும் **கருஞ்சட்டைக் கூட்டம்—கருத்தாளர்கள்** ஆமாம்! **வழக்கறிஞர் குழு.** அதற்கப்பால் பார்வையாளர்கள் அமரும் பேக் பெஞ்சுகளின் வரிசைகள்.

நீதிபதிகள் வருகிறார்கள் என்பதைத் தனக்கே உரித்தான கனைப்புக்குரலில் அறிவித்தான் சேவகன். அவன் யாரையோ என்ன யாவரையும் பயமுறுத்துவதாகவே எண்ணிக் கொண்டானோ என்னவோ?

எல்லோரும் எழுந்து நின்றனர். மேடைமீது ஏறினர் மூன்று நீதிபதிகளும்.

தனது கட்டுக்குலையாத உடலையும் முறுக்கி விட்ட கிருதா மீசையையும் விளம்பரப் படுத்திக் கொள்ளும் தோரணையில் வந்து அமர்ந்தார் தலைமை நீதிபதி. மற்றொரு நீதிபதி அன்றைக்கு வீட்டுக்காரியின் கோபத்துக்கு இலக்காகி சோகக்களையுடன் காட்சி தந்தார். இன்னொரு நீதிபதிக்கு வயிற்றுக் கோளாறு—என்று புதுமருந்து சாப்பிட்டிருக்கிறார்—"ஏன் கோர்ட்டுக்கு வந்தோம்?" என்ற சலிப்புணர்ச்சியுடன் வீற்றிருந்தார்.

பிரதம நீதிபதி சில தஸ்தாவேஜிகளைப் பார்த்து விட்டு, குமாஸ்தாவையும்—சேவகனையும் சில கேள்விகள் கேட்டு சாதகமான பதில் பெற்றபின் எதிரிகளை உள்ளே அழைத்துவர உத்தரவிட்டார்.

அங்கொரு மூலையிலிருந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு இரு போலீசார் மூன்று கைதிகளு

டன் பிரவேசித்தனர். இரண்டு பெண்கள் ஒரு ஆடவன்—ஆகிய இம் மூன்று எதிரிகளையும் ......கோர்ட்டில் குழுமியிருந்த கூட்டம் பூராவும் கூர்ந்து நோக்கியது. அவர்களுள் ஒருத்தி ........**விழிக்கேற்ற விருந்தாக—தாகத்திற்கு உரிய இளநீராக—இதயத்தைத் தொடும் எழில் உருவாக** காட்சி தந்தாள்.

அவளைக் கண்டு களிப்பெய்திடக் கூடியவர்களோ என்னமோ?—தகுதி தராதரம் இதைப் பற்றியெல்லாம் யோசித்ததாகத் தெரியவில்லை—ஓ......! அதுவெல்லாம் திருமண காரியத்திற்குத் தானே......!—அத்தனை பேருமே அவள்மீது செலுத்திய பார்வையை மீட்க முடியாது மனமிளகினர்—வேனல் நேரத்தில் கசிந்து உருகும் கருப்புக்கட்டிபோல.

சேகரின்......பார்வை எதிரிகள் பக்கம் பாய்ந்தது.-அங்கே......**மேரி!**—அவன் தலை கிறுகிறுத்தது—இருதயத்தின் வேகம் இறக்கையடித்தது—தலைகிறுகிறுப்பும்—இருதய வேகமும்—அவனை மயக்க நிலையில் அசைவற்று நிறுத்தின. அவன் வாய் "மேரி" "மேரி' என இசைத்தது, ஒலி கிளப்பா உன்மத்த நிலையில்.

இளமைப் பருவத்துச் செறுக்கினால்—லட்சை கெட்ட இச்சையின் பெருக்கினால்—தன்னால் தீண்டப் பட்டுத் துவண்டு போன **மலர் மேனியாள்**—வண்ணப் புறாவே என்று வர்ணிக்கப் பட்ட **வடிவழகுடையாள்**—களிப்புக் கடலில் கூத்தாட இசை கூட்டும் வீணையாகக் கிடைத்த **கனி இதழாள்**—விரும்பும் வகைக் கெல்லாம் இடமளித்த கரும்பினும் **இனியாள்**—இன்று குற்றவாளிக் கூண்டிலே எதிரியாக நிற்கின்றாள்.

கொலைகாரி என்று கூறுகிறது துறைத்தனம்—இதற்குத் துணை நிற்கிறது •சட்டம்.

அவளைத் தண்டிப்பதா விடுவிப்பதா என்ற வழக்கு விசாரணையிலே காதலனாகிய நாம் நீதியை நல்கிடும் ஜூரியாக ஏன் வந்தோம்?—இந்த விஷ வழக்கில் எந்த வகையில் இவளுக்குச் சம்மந்தமுண்டு? எவ்வாறு எதிரியானாள்— இவ்வாறெல்லாம் எண்ணித் துடித்தான் இன்னலால்.

தர்ம சங்கடமான நிலை ஏற்பட்டு விட்டதே எனத் தவித்தான். அவளை ஏறெடுத்துப் பார்க்கவும் கூசினான். குடலை அறுத்துக்கொண்டு வாந்தியாக வருவதுபோல வருத்தம் தலை விரித்தாடியது.

இன்னும் தன்னை அவள் பார்க்கவில்லை யென்பதையும் அறிந்து கொண்டிருந்தான். இது எவ்வளவு நேரத்திற்குத்தான் சாத்தியப்படும்?—பார்த்து விடுவாளே இன்னும் சற்று நேரத்தில்......!—நாடி நரம்பெல்லாம் பதறித் துடித்தன அவனிடம்.

பாலின் ருசி பழுதற்றது என்று பக்காவுக்கு நாலுபடியை உள்ளே தள்ளிவிட்டு பேதியாகிக் கையைப் பிசைந்து—ஐயோ! அம்மா! என்று பேந்தப் பேந்த விழித்தானும் ஒருவன்......! அவனைப் போல......!

தன்னைப் பார்த்து விட்ட—அடையாளம் கண்டு கொண்ட—அதே நேரத்தில் என்னென்ன எண்ணுவாளோ? எவ்வாறு துடிப்பாளோ?........“இன்று குற்றவாளிக் கூண்டிலே கேள்வி கேட்பாரற்ற அபலையாக நிற்கிறேனே! ஏன்......? யாரால் எனக்கு வந்தது இந்த வினை? ஏதோ நீதியை நிர்மாணிக்க வீற்றி

ருக்கிறாரே அவர்தான் என்னை இக்கதிக்குக் கொண்டு வந்த மூலமனிதர்'' என்று புலம்பி விட்டால், என் செய்வது? தன்னைப்பற்றி—தன் மிருகத்தன்மையைக் குறித்து—எவ்வளவு மட்டமாகப் பேசுவர் மக்கள்.

அலைகள் ஆர்ப்பரிக்கும் கடலானான்—அல்லல்கள் வர்சிக்கும் அக்கினித் திரவமானான்—அவன்......!

நெஞ்சுத் திடலை ஒருமுறை தடவிக் கொடுத்தான். மிஞ்சிய வேக்காட்டு உணர்ச்சியில் நெற்றியில் முத்து முத்தாகக் கோர்த்து நின்ற வியர்வைத் துளிகளைக் கைக்குட்டையால் துடைத்துக் கொடுத்தான்.

**மேல் பிரயேகத்தினால் குணமாகக் கூடிய சுளுக்கு நோயா அது?—அல்லவே அல்ல!—ஆத்மாவின் உயிர் தளத்திலே அடிவிழுந்து சீழ்வடியும் ஆறாத ரணமல்லவா!**—கரத்தினால் நெஞ்சைத் தடவினால் மட்டும் **தொல்லை தீர்ந்து விடுமா?**—இல்லை துடைத்து விட்டால் மட்டும் **துயரம் தூய்ந்து விடுமா?**

இப்படி இடர்களால் சுற்றிச் சூழச் சிந்தனைத் திடலால் முற்றுகையிடப்பட்டுஅவன் துடித்துக்கொண்டிருந்தபோது பிரதம நீதிபதி விசாரணையை ஆரம்பித்தார்.........

"பக்கிரி சாமி எழுந்திரு......!'' என்று கூண்டிற்குள் — மூலையில் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்துக் கட்டளையிட்டார்.

பக்கிரிசாமி துள்ளி எழுந்தான்—அவனது உதடுகள் வேகமாகத் துடித்துக் கொண்டன.

"உன் பெயர்.........?''

எதிரிக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்து விட்டது போலும்!—உதட்டைக் கடித்து உள்ளுக்கே அடக்கிக் கொண்டான்.

"ஆமாங்க......! பக்கிரிசாமி......'

"நீ எந்த வகுப்பைச் சேர்ந்தவன்......?

"விவசாயி........"

"உன் வயது........?"

"மூப்பத்தி மூன்று—பிறந்த வருஷம் ஆயிரத்தி........"

"போதும்!......விவாகமாகி விட்டதா?"

"இல்லை........"

"உனக்குத் தொழில்......?"

"மினர்வா ஹோட்டலில் எடுபிடி ஆளாக இருந்தேன்......"

"உன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை அறிவாயல்லவா......?"

"தெரியும்......ஆனல் குற்றவாளியில்லீங்க......"

"நீ உட்காரலாம்......" என்று நீதிபதி கூறியவுடன் அவன் எவ்வளவு வேகமாக எழுந்தானே, அவ்வளவு வேகமாக உட்கார்ந்து விட்டான். அவன் உதடுகள் சப்தம் இன்னமும் செய்யாமல் அசைந்து கொண்டிருந்தன.

"பாக்கியம்" என்ற பெயரை பிரதம நீதிபதி உச்சரித்தவுடன், பதறிப்போய் எழுந்து நின்ருள்—எதிர் மூலையில் அடிக்கடி கொட்டாவி விட்டபடியே இருந்தவள்.

வாடிக்கையான வினுக்களை வரிசைக் கிரமமாய் அவளிடம் கேட்டார். பாக்கியம் என்றால் பலே கைகாரி என்றே பொருள் அப்பகுதி பூராவும். அவள் தான் அவ்வூரிலேயே பிரபலமான விபச்சார விடுதியின் சொந்தக்காரி!

புதியவை—பழையவை என்றும்—பகட்டுச்சரக்கு—திகட்டும் ரகம் என்றும் பல்வேறு நாட்டின் பாவையர், பரத்தைகளாக அவள் கைவசமுள்ளனர். எதிலும் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பிவிடுவதில் தந்திரக்காரிதான். ஆனாலோ........இந்த விஷ வழக்கில் வகையில்லாமல் மாட்டிக் கொண்டாள்.

நீதிபதி கடைசியாகக் கேட்ட கேள்விக்குத் தானும் குற்றவாளியல்ல எனக் கூறினாள் பாக்கியம்.

"உன் பெயர்......?" என்று மூன்றாவது கைதியைப் பார்த்துக் கேட்டவாறு திரும்பினார் நீதிபதிகளில் முதல்வர்.

அந்த மூன்றாவது கைதிதான்—மேரி........!

அவள் உட்கார்ந்து கொண்டே யிருப்பதைக் கண்டு "எழுந்திருக்க வேண்டும்" என்றார் மிருதுவான குரலில் இரண்டாவது நீதிபதி—வீட்டு வேதனையைச் சுமந்து கோண்டிருந்தவர்.

பெண்கள் என்றாலே இவருக்குத் திடீரென்று சபலபுத்தி வந்துவிடும்—"ஆண் கந்தக சாலை—பெண் நெருப்பு! இந்த இரண்டும் நெருங்கினால், வேடிக்கை எப்படி யிருக்கும்......?" இப்படிக்கான விநோதமான கொள்கையைப் போற்றிய தத்துவ மனிதர் இவர்!—

தன்னெதிரே எதிரியாக நிற்கும் மேரி நெருப் பாகத் தோன்றினுள் இவருக்கு!—அடடா! உணர்ச்சித் தீ உள்ளத்திலே பெருக்கெடுத்து விட்டதே!

இவ்வாறு சிலருக்கு அர்த்தமற்ற வெறியுணர்ச்சி வருவதுண்டு போலும்!

**"பார்த்துக் கொண்டே யிருந்தால் போதுமே!—இதுவே வாழ்வின் வண்ணமலர்!—மதுக் கிண்ணம்!—மாண்பின் சின்னம்!"** என்ற பரந்த கொள்கையைப் பகல் இரவு என்றில்லாமல் பாராட்டிப் போற்றும் பரந்தாமன்கள் பெருத்த உலகமல்லவா இது!

மேரி சட்டனெ எழுந்து மார்பு அகலக் கவர்ச்சியைக் கக்கும் கருவிழிகளில் ஒரு அலாதியான துணிச்சல் பாவத்துடன் நீதிபதிகள் மூவரையும் நோக்கினுள்.

"உன் பெயர் என்ன........?

"தெரிசா......" என்று பதிலளித்தாள் அவள்.

சேகர் மூக்குக் கண்ணுடியை அணிந்தவாறு அவளைப் பார்த்துக் கொண்டே யிருந்தான்—பார்வையை வேறு பக்கம் திருப்பாமல். "இல்லை. இவள் பெயர் 'தெரிசா' இல்லை......மேரி!" என்று அவனது இதயத்திலே எதிரொலி கிளம்பிற்று.

"உன்னுடைய உண்மையான பெயர் தெரிய வேண்டும்" என்றுர் வயிற்றுக் கோளாரினுல் வாதனைப் படும் நீதிபதி.

"அதுவா......? மேரி என்பது என் தாயாரிட்ட பெயர்" என்று கூறியவாறு திரும்பினவள் சேகரைக் கண்டுவிட்டாள்.

அவள் விழி வீச்சு அங்கே நிதானித்தது. ஆர அமரச் சிந்தனை செய்து பார்க்கிற மாதிரி..........அவனை ஊடுருவி நோக்கினாள்.

அந்தக் கண்ணோட்டம் கனிந்தது அல்ல—கனல் பறப்பது!—அது தன்மீது பாயும் போது அவன் பட்ட பாடு!—ஏதோவொரு பயம் அவனை வெட்கித் தலை குனிந்து கொள்ளுமாறு பணித்தது—தலை கவிழ்ந்தான்—வெப்பத்தை வாரி வீசும் அந்த வீச்சு..........அவனை வாட்டி வதைத்தது!.......

**பற்றி எரியும் நெருப்பு—பக்கத்திலே மூலிகைச்செடி.......!**

வட்ட முகத்திற்கே சொந்தமான வனப்பைக் கண்டான். வாட்டத்தின் வேதனையால் வதனம் வெளுத்துக் கொண்டிருந்ததைக் கவனித்தான். என்றாலும் அதிலே வசீகரிக்கும் சக்தி வளர்மதி போல விளையாடிப் புரள்வதைப் பார்த்தான்.

**கருத்தை நொறுக்கும் கண்வீச்சு!—கனிரசம் வடிக்கும் குரலொலி!—கடினச் சிவப்பான அதரப்புன்னகை!—கட்டிக் காத்த இளமைக்குக் கைம்மாறு காட்டிய மேனி முறுவல்!**—அத்தனையிலும் **துணிச்சல்** மெருகிட்டு மின்வெட்டுக் காட்டியது.

இதே சமயம் நீதிபதியிடமிருந்து கேள்வியொன்று பிறந்தது. அவள் வாயிலிருந்து வரும் அந்தப் பதிலைக் காதாரக் கேட்க அந்தக் கூட்டத்துக்கு ஏனோ அவ்வளவு அசல் கவனம்!

"நீ என்ன வேலையில் இருந்தாய்"—என்பதுதான் அந்தக் கேள்வி.

மேரி மௌனம் சாதித்தாள்—சல்லடைக் கண்க ளாக—"ஹல்லரில்" அகப்பட்ட அரிசிமாவாக— அவ ளது மெல்லிய இதயம் துளைக்கப்படுவதை—அரைக் கப் படுவதை யார் அறிய முடியும்?

பொறியில் மாட்டிக்கொண்ட எலியைச் சுற்றிச் சுற்றி 'மியாவ்—மியாவ்' என்று கத்திக் கத்தித் துடிக் கும் பூனையைப் போல.......எல்லோருக்கும் என்ன பதில் அவளிடம் இருந்து வருகிறது என்பதை அறியத் **துடிப்பு—விழிப்பு—பரபரப்பு.**

என்னதான் அவள் துணிச்சல் காரியாக இருப் பினும் அவளுடைய பெண்மையின் ஜீவசக்தி என்ன செத்தொழிந்தா போயிற்று—? அது தன் குணத்தைக் காட்டாமற் போகுமா என்ன?—கண்களில் நீரைத் தேங் கிடச் செய்தது அந்தப் பெண்மை!

திட்டமிடாத அணைக்கட்டு தானே!—நிமிட நேரத்தில் நீர்தேக்கம் உடைந்து விட்டது!—துயரத் தால் வறண்டு துடிதுடித்த உதடுகளை நனைக்க உருண் டோடி வந்தன சோகத்தின் நீர்த்துளிகள்!

மீண்டும் "உம்! நீ என்ன தொழில் செய்து கொண்டிருந்தாய்?" என்ற கண்டிப்பான குரல் கிளம் பிற்று.

"உங்களுக்கே தெரியும் இது....." என்றாள் சுருக்கமாக.

அவளுடைய முகத் தோற்றத்திலே இயற்கைக்கு விரோதமான இருள்ரேகை **நெளிந்தது.**

அவள் சொன்ன வார்த்தையில் பயங்கர அர்த் தம் தொனித்தது. ஒரு மாதிரியாகச் சிரித்தாள்! எதிர்

பாராமல் 'ட்ரெயின்' லூப் லயனில் திரும்பி விட்டால் டிரைவர் பாடு......? அதிலும் அங்கே மற்ெருரு வண்டி நின்று கொண்டிருந்தால்......! எப்படியிருக்கும்? கோர்ட்டில் குழுமியிருந்த அத்தனை பேரும் வெறிக்க வெறிக்க......!

அசாதாரமான அச் **சிரிப்பிலும்** அலாதியான கோரத்தில் கோர்ட்டைச் சுற்றி அவள் செலுத்திய பார்வையிலும் பயங்கரத்தின் பிரதிபலிப்புக் **கலந்திருந்தது.**

"தெளிவான பதில் வேண்டும்?" எச்சரிக்கை விடும் தோரணையில் நீதிபதி கூறினர்.

"அதுவும் சரிதான்! கூறுகிறேன்.........ஆமாம் கூறிவிடத்தான் போகிறேன்.........!

"மூடிவைக்கப்படும் மர்மத்தின் மூலப் பொருளை அறிந்து கொள்வதில் இங்கே மொய்த்திருக்கும் கூட்டம் முழுமூச்சாக முயற்சி செய்கிறது என்பதை நான் அறியத்தான் செய்கிறேன்.

"இதைக் கேட்டுச் சிரித்து மகிழவா?-சிந்தனை செய்யவா?—அல்லது ஒருக்கால் கறைபட்ட என் வரலாற்றைக் கேட்டுக் கண்ணீர் விடவா?—இது எனக்குத் தெரியாது—சிரித்துச் சிந்தனை செய்து கண்ணீர் விட்டால் காரியத்திற்கு என்ன?—செயலுக்கும் மனித வர்க்கத்திற்குமிடையே உள்ள தூரம்தான் காலத்தின் வேகத்திலே கண்ணுக் கெட்டாத தொலைவுக்கு அல்லவா போய் விட்டது!

"ஆகவே சிரிப்பையும்-சிந்தனையையும்—கண்ணீரையும்—நம்பி ஏமாறுபவள் அல்ல நான்!—ஏமாற்றத்தின் உச்சியிலே ஏறி நின்று நான் உலகில் நடமா

டும் எத்தர்களின் தொகையைக் கணக்கிட்டிருக்கிறேன். இதை 'ஆடிட்' செய்து எனக்கு அத்தாட்சி அளிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

"எந்த நோக்கங் கொண்டு என் வரலாற்றை..."

"இல்லை......இல்லை! நோக்கம் என்ற பேச்சுக்கே இதில் இடமில்லை. குற்றவாளி தெளிவாகப் பதில் கூற வேண்டும் என்று ஆணையிடுகிறது சட்டம். ஆனால் பார்வையாளர்களுக்கு வேண்டுமானல் உன் கதையை வாக்குமூலத்தைக்—கேட்கத் தாகம் இருக்கலாம்......!" குறுக்கே விழுந்தார் வீட்டின் சண்டையால் சலிப்புணர்ச்சியுடன் வந்திருந்த நீதிமான்!

"சட்டத்தின் ஆணை! கீழ்ப்படிகிறேன்— விவரம் கூறுகிறேன்.

"பார்வையாளர்களுக்குத்தாகம்......! மிகவும் சரி— **தாகம் தீர்த்து வைப்பது என் தொழில்!**

**"தண்ணீர் பந்தல் வைத்துத் தாகம் தீர்த்தவள் அல்ல!**

"ஆனல்..........? நான்..........!

"ஆணின் உணர்ச்சி தாபத்தைத் தீர்த்து வைக்கும் **போதை தரும் மது!** — ஆடவரின் போகத் தவத்திற்கு நானொரு **பர்ணசாலை!**—பணம் தந்தால் எவருக்கும் இல்லையென்று சொல்லாது இன்பம் தரும் **இளமைச் சுனை!**— பருவத் தாகம் போக்கும் **பரோபகாரி!**— படுக்கை அறையைச் சுவர்க்க பூமியாக—மாற்றும் மனமோகன **சுந்தரி!**—காமக் களியாட்டத்தைக் கற்றுத்தரும் கனிகள் குவிந்த **கிடங்கு!**-பன்மடங்கு செல்வத்தைத் தடங்கலின்றி பாதகாணிக்கையாகக் கொட்டினல் இரவு முழுக்க எடுத்தாளும் இன்ப வீணை!

"என் தொழிலா......? ஆடுவேன்......! ஆட்டியும் வைப்பேன்......!

"ஆடுவேன் என்றால் ஆடையுடன் அல்ல! நிர்வாணமாக ஆடச்சொல்லி—குதித்தாடும் கனிகளை அழகு பார்க்க வருகிறார்களே **வெறியர்கள்** அவர்களின் விரக தாபப் புலம்பலுக்காகப் பிறந்த கோலத்தோடு நடனமாடுவேன்—கூடுவேன்!

"இக் கலைஉலகிலே நோயாளி—நோயற்ற நல்லுடல்காரன்—ஏழை—பணக்காரன்,—உயர்ந்த சாதிக்காரன்—தாழ்ந்த சாதிக்காரன்; அந்த மதத்தான்—இந்த மதத்தான்; என்ற பேதங்களே கிடையாது. எல்லோரும் சமமே எனக்கு—எங்களுக்கு.

"ஏன்?—**பணம்**!—என்போன்றஎத்தனையோ மாதர் குல மாணிக்கங்களை மண்ணில் புழுவாக நெளியவிட்ட **பணம்**!—வஞ்சகமற்ற வனிதயரை வீழ்த்திய **பணம்**—தனித்துவாழ—இனித்துச் சுகிக்க—களித்துக் கூத்தாட—கிட்டாத **பணம்**—எங்கள் காலடியிலே கொட்டப்படுகிறது காணிக்கையாக.

"இதற்குப் பிரதியாக சிலமணி நேரம் சரச லீலையாட சிங்காரப்பண் பாடுகிறார்கள்—கூடுகிறார்கள் கோமாளிகளிடம் குலவிக் கூத்தாட...! அந்த க்ஷண நேர சுகத்திற்குப் பின்னே சரிந்து வீழ்கின்றனர்.

"பணம் கொடுத்து என்னைக் கசக்கிப் பிழிந்துவிட்டுப்போகிறாயே......போ" என்று வர்மம் கூறுகிறோம் வாய்க்குள்ளே. அத்தாட்சியாக ரசீது கொடுத்து அனுப்புகிறோம்.

"அது நாங்கள் தரும் ரகசிய ரசீதுதான்—அது உலகோர் கண்ணில் என்றாவது ஒருநாள் படாமல் போகாது—அழுகிப் புழுத்து அவன் சாவது நிச்சயம் என்று **சாவு கணிக்கும் ரசீது அது!**

"இந்த விபச்சாரியிடம் வந்துபோன பெரும் புள்ளிகள்—சிறுபுள்ளிகள்—அனந்தம். அத்தனைபேரும் என்னிடம் வித்தியாசமில்லாமல்— அனுபவித்தனர். இந்தப் **பொதுவுடமைத் தொழிலுக்கு** இருக்கும் ஏற்றமான பெயர்—எடுப்பான மதிப்பு—வேறு எதற்கும் இருக்காது.

"நீதிபதி அவர்களே! நீளப் பேசிவிட்டேன் என் நிலைபற்றி!—தொழில் பற்றி! —வாழ்வு பற்றி!—இப்போது விளக்கமான இந்த விமர்சனம் எல்லோருக்கும் திருப்தியளிக்கும் என்றே நம்புகிறேன்."

பேச்சோ—பிரசங்கமோ—அவள் கூறிய சோகக் கதை—நாட்டின் இன்றைய நிலை—! அங்கு கூடியிருந்த எத்தனையோ பேர்களின் உள்ளங்களிலேயும் பக்கம் பக்கமாக அச்சாகிப் பதிவு ஆயிற்று.

பிரதம நீதிபதி அவளது பேச்சை இடையிலே தடுத்திருப்பார். ஆனால் ஏதோவொரு ஆவல் அவரை அப்படியே இருத்தி விட்டது—கேட்கும்படி தூண்டியது. பேச்சின் ஆரம்பம் முதல் முடிவுவரை ஒரே அமைதி!—அத்தனை பேரும் மெய்மறந்து ரசித்தனர். அந்தச் சரிந்து வீழ்ந்தவளின் வாழ்வை— சத்தான சொற்பொழிவை.

ஆனால் வெந்துபோன உள்ளத்தின் வேதனைக் குரல் என்பதை.........உணர்ந்தார்களா?

சேகர் மட்டும் சிந்திய கண்ணீரைத் துடைக்கவும் திறனின்றிச் சிலைபோலச் சாய்ந்திருந்தான்.

வாழ்க்கையின் கோணம்—வரலாற்றுப் பெருமை மிக்க மானம்—எத்துணைக் கொடூரமாக மாறிவிட்டது என்பதை நினைத்தான். பெருமூச்சுக் கிளம்பியது.

"குற்றப் பத்திரிகையின் சரத்துப்படி நீதான் இந்த விஷ வழக்கின் முக்கிய எதிரி. உன்னை நாடிச் சுகம் தேடி வந்த—தனபால் என்ற வியாபாரியிடமிருந்த பணத்தையும்—மோதிரத்தையும்—திருடி பக்கிரிசாமி—பாக்கியம்—இவர்களுடன் பங்கிட்டுக் கொண்டதாகவும், "மினர்வா" ஹோட்டலில் தங்கி விஷமிட்டு அத் தன வந்தருக்கு மரணம் ஏற்படும்படி செய்ததாகவும் உன் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது—நீ குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?"—கூறினார் நீதிபதி சாந்தமான குரலில்— அழுத்தமான போக்கில்.

"இல்லை! ஒரு குற்றமும் செய்ய வில்லை. நான் நிரபராதி........"

"இரண்டாயிரம் ரூபாயைத் திருடியதாக........"

"கிடையாது—என்னை எடுத்து நுகர எவராயிருந் தாலும் ஐந்து ரூபாய்தான். அதற்குமேல் யாரிடமும் பணம் பெறமாட்டேன். கேட்டதுமில்லை. களவாடியது மில்லை. அவர்களாகப் பிரியப்பட்டுப் பரிசாகத் தருவ தைப் பெற்றுக் கொள்வதுதான் என் பழக்கம்..."

"இதனை நீ எப்படி நிரூபிக்க முடியும்?"

"என்னிடம் வந்து இன்பமது பருகினவர்களின் பட்டியலைத் தருகின்றேன். பலரைப்பற்றி நினைவில்லை என்பதும் உண்மைதான். என்றாலும் ஒருசிலராவது

எனக்கு நன்ருக வீடு—பெயர்—உட்பட விவரமாகத் தெரியும்—அவர்கள் உண்மையை உரைக்கலாம் அல்லவா?''

"வீணன வாதம்—விவஸ்தை கெட்ட விசாரணைக்கு வழக்கை இழுக்க வேண்டாம் மேரி!—உண்டு அல்லது இல்லை என்ற இரண்டிலொரு பதில்தான் தேவை—நீ பணத்தைத் திருடினுயா......?''

"இல்லை......''

"மோதிரத்தைக் களவாடினுயா......?

"இல்லை......!''

"பின் அது உன்னிடம் வந்த வகை......?''

"மோகத் திருவிளையாட்டினல் அவருக்கு மது பருகிய மயக்கம். அந்த மோகனபுரிப் பயணத்திலே மூல மந்திரம் நான். அதற்காக அவரே மனம் மகிழ்ந்து மோதிரத்தைத் தன் கரத்தினுலேயே என் கை விரலில் மாட்டினர்.''

"சரி! தனபால் வியாபாரிக்குப் பானத்தில் தூளைக் கலந்து கொடுத்தாயா......?''

"ஆம்! கொடுத்தேன். அது தூக்கமருந்து என்றும் அதனல் ஒருவித தீமையும் நேராது என்றும் பாக்கியம் தெரிவித்தாள்; நானும் நம்பினேன். இப்படி நடக்குமென்று நினைக்கவில்லை நான்.''

"இது என்ன வேடிக்கை? எதற்காகத் தூக்க மருந்து?''

"வெட்கக் கேடான பதில் சொல்ல வேண்டியதிருக்கிறதே என்று வேதனைப் படுகிறேன். கோர்ட்

டார் அவர்களும் ஜூரிகளும் என்னை மன்னியுங்கள். அதனை விவரிக்க நான் விரும்பவில்லை."

"நீ சொல்வதை அப்படியே நம்ப வேண்டுமென்கிறாயா? சாகடிக்க வேண்டுமென்ற நோக்கம் கிடையாது. தூங்க வைப்பதற்காகத்தான் மருந்து ஊட்டினேன், என்கிறாய். ஆச்சரியம்!—மேரி......! நீயொரு விபச்சாரி—அவரோ வெளியூர் வியாபாரி—! உன்னை அனுபவிக்க வந்திருக்கிறார்—இரவு கண் விழிப்பதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் பட்டிருக்க மாட்டார் அவர். நீயும் அவர் கண் விழிக்கிறாரே என்று பரிதாபப்பட அவசியமும் இல்லை. சுகம்பெற வந்தவர் அவர்! சுகம் தர இருப்பவள் நீ!—இடையே 'தூக்கம்' தேவையில்லாத ஒன்று. பொதுவாக **'இரவுப் பறவைகள்'** தானே நீங்கள் யாவரும்!—அப்படியிருக்க இரவு வந்த விருந்தாளிக்குத் தூக்கமருந்து கொடுத்தேன் என்பது விநோதமாய் இருக்கிறது மேரி!"

"விநோதமாகத்தான் இருக்கும். ஆனால் உண்மை......? அதையும் மறைப்பானேன்?-கூறி விடுகின்றேன்-காட்டு விலங்குகூடக் காமத்திலே கட்டுப்பாடோடு நடக்கும். எத்தனை முறைகள்—இடமளிப்பேன்?—அவரோ மிலேச்சத்தனத்தின் மறுவுருவம்!—வெறியாட்டத்தின் வடிவம்!—களைத்துப் போனேன். உடல்நோவு தாங்க முடியவில்லை. இரக்கமற்ற நெஞ்சினர் அவர். மலர் கசங்கிப் போவதைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. மணம் மட்டுமே அவருக்குத் தேவை!—ரசமும் வேண்டும் வற்றாமல்! நான் எங்கே போவேன்? மன்றாடினேன்--"நாளைய தினம் கூடிக்களிப்போம்—இன்று போதும்" எனக் கரம்கூப்பி வேண்டினேன்—மறுத்தார். மேலும்

மேலும் ....—அதற்கு மேலும் என்னால் தாள முடிய வில்லை. குளிர்பானம் கொண்டுவருவதாகக் கூறிவிட்டு அவரது பிடியினின்று நழுவினேன்—"இவரை ஏன் இங்கே அனுமதித்தாய்?—உயிரை வாங்குகிறாரே!—ஓய் வதாகத் தெரியவில்லையே!—உபத்திரவம் கொடுக்கி றாரே!—உடலை உருக்குலைக்கிறாரே! இவ்வாறெல்லாம் முறையிட்டேன் பாக்கியத்திடம். "சரி! தூக்க மருந்தைக் குளிர்பானத்தில் போட்டுக் கொடு. நிம்மதியாகத் தூங்கி விடுவான்—விடியுமட்டும் தொல்லை இராது—கொஞ்சம் இளைப்பாறு—வேறு கிராக்கி வந்தால் பிறகு பார்ப் போம்" எனக்கூறி அந்தத் தூளைத் தந்தாள்.—பானத் தில் கலந்து ஊட்டினேன்—பருகினார்—! பாதகம் நேர்ந்து விட்டது—இதற்கு நானா பொறுப்பு?"

இது அவளது சோகக் கதையின் ஒருபகுதி! இதனைக் கூறும்போதே இத்தனை விம்மல்—பெரு மூச்சு—ஏக்கம்—அழுகை—கண்ணீர்—என்றால் வர லாற்றுப் பகுதி பூராவையும் கூறி முடிப்பதெனில்........ அவள் மூச்சே நின்று விடுமோ......?

எங்கும் நிசப்தம் நிலவிற்று.

பிரதம நீதிபதி குற்றப் பத்திரிகையை வாசித் தார்.

"தனபால் என்ற வணிகர் பாக்கியத்தின் பொறுப்பில் நடைபெறும் விபச்சார விடுதிக்குச் சென்றார். அங்கே 'தெரிசா' என்ற மாறுபெயருடன் வாழ்ந்த மேரியுடன் தங்கினார். இரவு 'மினர்வா' ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார் அவளை. பாக் கியமும் அவர்களுடன் போயிருக்கிறாள். அங்கே அவ ருடைய பொருள்களைக் களவாட ஹோட்டல் சர்வர்

பக்கிரிசாமி—பாக்கியம்—மேரி ஆகிய மூவரும் சதியாலோசனை நடத்தினர். கடைசியில் அவரை விஷமிட்டுக் கொன்று பொருள்களைக் களவாடினர். சதியில் சம்பந்தப்பட்ட குற்றமும்—திருட்டுக் குற்றமும்—பக்கிரிசாமி—பாக்கியம்—இருவர் மீதும் சாட்டப்பட்டிருக்கிறது. விஷமிட்டுக் கொலை புரிந்த குற்றம் மேரிமீது சுமத்தப்பட் டிருக்கிறது."

பின்னர் பிரேத பரிசோதனை அறிக்கையும் படித்துக் காண்பித்தார். சாட்சியமாக வைக்கப்பட்ட சாமான்களின் பரிசீலனையும் முடிந்தது. ஜூரிகள் அவை அனைத்தையும் பார்வையிட்டனர். ஹோட்டல் மானேஜர்—போலீஸ் இன்ஸ்பெக்டர்—டாக்டர்—இவர்கள் சாட்சியம் கூறினர்.

அதன்பின்பு சர்க்கார் தரப்பு வக்கீல் உமிழ் நீரை விழுங்கி விழுங்கி வேகமாக வழக்கின் தரத்தை விவரித்தார்—"மேரி யோக்கியமாக வேலை செய்து வாழ்ந்திருக்கலாம்—அதனைத் தவிர்த்து உணர்ச்சிக்கு அடிமையாகி,அதைத் தணித்துக்கொள்ளும் பொருட்டு விபச்சார விடுதியில் பிரவேசித்தாள். அங்கு தன் படிப்பினாலும்—பாசாங்கினாலும்—வசிய சக்தியினாலும்—விபச்சார விடுதியில் பிரதானமாக விளங்கினாள்.—இதன் மூலம் தான் மேரி அந்தத் தயாள குணம் நிறைந்த வணிகரை வசப்படுத்திப் பொருள் பூராவையும் பறிக்க எண்ணி விஷமிட்டுக் கொலை செய்துவிட்டாள்."

இதுதான் பிராசிக்யூட்டரின் வாதத்தின் முக்கிய சாரம்.

பாக்கியத்தின் உறவினர்கள் பொருட்செலவு செய்து வக்கீல் பிடித்திருந்தனர்—சாட்சிகளை அவ்வப்போது குறுக்கு விசாரணையும் செய்தனர் இவர்கள்.

பக்கிரிசாமி—பாக்கியம்—இவ் இருவரின் சார்பில் ஆஜரான வக்கீல்கள் மேரி மீதே குற்றம் முழுமையும் சுமத்திப்பேசினர். திருட்டுக் குற்றச்சாட்டிலிருந்து தம் கட்சிக்காரர்களை விடுவிக்கா விட்டாலும், விஷமிட்ட சதிக் குற்றத்தினின்றுவது விடுவிக்குமாறு வாதிட்டனர்.

பிறகு மேரிக்காக ஆஜரான வக்கீல் வியாபாரிக்கு விஷமிடப்பட்டது என்பது உண்மையென்றும்—அதில் கொலைபுரியும் நோக்கம் கிஞ்சிற்றும் கிடையாது என்றும்—தூக்க மருந்தே தான் கொடுப்பதாக எதிரி நினைத்திருக்கிறுள் என்றும்—விளக்கமாகப் பேசிவிட்டு அவளைக் கெடுத்து நடுவீதியிலே நாதியற்றவளாய் அலையவிட்டு—கடைசியில் விபச்சாரத்தைத் தவிர வேறு கதியற்ற நிலைக்குக் கொண்டு வந்தவன் கனவாணுகக் காலம் கழிக்கும்போது, மேரிமாத்திரம் ஆருத் துயர் அடைவது நியாயமா என்று மன்ருடுங்குரலில் தெரிவித்துக் கொண்டார்.

இந்த பேச்சு—ஈட்டியெனப் பாய்ந்தது சேகரின் இதயத்துள்ளே!—வேட்டையாடப்பட்ட மிருகம் போல மேரி கீழே விழுந்து கிடப்பதாக அவனுக்குத் தோன்றியது.

"என்ன விசித்திரம்! இத்தனை ஆண்டுகளுக்குப் பின் நான் ஜூரியாக வந்திருப்பதும்—அவளை மறுபடியும் காணும் இத்தருணத்தில் அவள் கைதிக்கூண்டில் நிற்பதும்—எவ்வளவு விநோதமான சம்பவங்கள்!—இதையேன் சீக்கிரம் முடித்துத் தொலைக்காமல் 'பிரேதச்சடங்கு' செய்து கொண்டிருக்கிருரே பிரதம நீதிபதி!" என்று மனோவேதனை அடைந்தான் சேகர்.

பிரதம நீதிபதி பேசத்தொடங்கியது முதல் அவருடைய பேச்சில் ஒரு பதத்தைக்கூட இழக்கவிடாமல்—அவரைவிட்டுத் தன் பார்வையை அகற்றாமல்—கவனித்துக் கொண்டிருந்தாள் மேரி.

ஜூரிகள் எழுந்து விவாத அறைக்குப் போயினர்.

முதற்காரியமாக ஜூரிகளில் ஒருவரைத் தவிர மற்றவர் எல்லாம் சிகரெட்டைப் பற்ற வைத்தனர்.

வழக்கைப்பற்றி ஜூரிகள் நீண்ட நேரம் சர்ச்சை செய்தனர்.

1. திருட்டு—விஷம் வைத்தல்—இரு குற்றச்சாட்டுகளிலும் பக்கிரிசாமி குற்றவாளிதானா.......?

2. மேலே கூறிய குற்றச்சாட்டுகளின் கீழ் பாக்கியம் குற்றவாளிதானா.......?

3. இவ் இருவரும் விஷமிட்ட குற்றச்சாட்டுகளின் படி குற்றவாளியல்லவென்றால், திருட்டுக் குற்றச்சாட்டின்கீழ் வருகிறார்களா.......?

4. மேலே கூறிய குற்றச்சாட்டுகளின் கீழும்—விஷமிட்டுக் கொன்றாள் என்ற குற்றச்சாட்டின் படியும்—'மேரி' என்ற 'தெரிசா' குற்றவாளிதானா.......?

இந்த நான்கு கேள்விகளையும் தங்களுக்குள்ளே எழுப்பி ஆராய்ந்தனர் அவர்கள்.

இதனிடையே பிரதம நீதிபதி ஜூரிகளை அழைத்து வருமாறு கட்டளை பிறப்பித்தார். அவர்கள் அனைவரும் வந்து மீண்டும் அமர்ந்தனர். இப்போது நீதிமன்றமெங்கும் 'கசு முசு' வென்று இரைச்சல் கிளம்பிற்று.

தீர்ப்பை எதிர்நோக்கும் துடிதுடிப்பு எல்லோருடைய முகத்திலும் கப்பியிருந்தது.

அவர்கள் எக்கேள்விகளை எழுப்பி ஆலோசித்தனரோ, அதே கேள்விகளைத்தான் நீதிபதியும் கேட்கத் தொடங்கினர்.

கூட்டு அபிப்பிராயமாகவே அவர்கள் வெளியிட்டனர்.

1. களவு—விஷமிட்ட சதி—ஆகிய இரு குற்றச் சாட்டுகளின் கீழ் பக்கிரிசாமி குற்றவாளியே. ஆயினும் விஷமிட்ட சதி சரிவர நிரூபணமாகாத காரணத்தால், அவனுக்குத் தயை காட்டலாம். திருட்டுக் குற்றத்திற்குரிய தண்டனையை அவன் அனுபவித்துத் தீர வேண்டுமென்பதில் எங்களுக்குள் அபிப்பிராய பேதமில்லை.

2. பாக்கியம் விஷமிட்ட சதிக் குற்றச் சாட்டின் கீழ் குற்றவாளியல்ல. ஆனால் திருட்டுக் குற்றச்சாட்டுப்படி குற்றவாளிதான்.

மேரியைப் பற்றிய குற்றச்சாட்டு ஏற்கனவே பெரும் குழப்பத்தை உண்டுபண்ணியிருந்தது ஜூரிகளுக்கு. விவாத அறைக்குள்ளே இருந்த சமயமே தீர்க்கமான முடிவு செய்யாமல் தான் எழுந்து வந்து விட்டார்கள்.

இப்போது அவர்கள் நிலைமை தர்மசங்கடமாகப் போயிற்று. எல்லா ஜூரிகளும் அலுத்துப் போயிருந்தனர். எந்த அபிப்பிராயத்தை யாவது சொல்லிவிட்டு, தாங்கள் சீக்கிரம் விடுபட்டு வீட்டுக்குப் போகலாம் என்பதிலேயே கவனம் செலுத்தினர்.

மேரி குற்றவாளியல்ல என்பது அவளை நன்கு அறிந்திருந்த சேகருக்குத் தெரியும்.

ஜூரியாக வந்திருந்த தோல்வியாபாரி மேரியின் மேனி அழகைக் கண்டு, மோகங் கொண்டு அவளுக்காகப் பரிந்து பேசுவதையும்—'போர்மென்' அவள் குற்றவாளிதான் என்று பிடிசாதனையாக விவாதிப்பதையும்-ஜூரிகளில் பெரும்பாலோர் களைப்பு மேலிட்டுக் காலத்தோடு வீட்டிற்குபோக விரும்புவதையும்—அறிந்து கொண்டதால் மேரிக்குத் தண்டனை நிச்சயம் என்ற முடிவே சேகரிடம் மிஞ்சி நின்றது.

இதுசமயம் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட வேண்டுமென்ற ஆவல் பிறந்தது அவனுக்கு. இதை அறையில் நடந்த விவாதத்தின்போதே அவன் வெளியிட்டிருக்க வேண்டும்—ஒவ்வொருவராகக் கூறி வந்ததையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தவன் கடைசியில் ஓங்கியடித்துப் பேசவேண்டும் என்றிருந்தான். அதற்குள்ளாக நீதிபதியின் கட்டளை வந்து விட்டது.

உணர்ச்சியினால் அவன் முகம் சிவந்து மீண்டும் வெளிறியது.

"மேரி குற்றவாளியல்ல. தூக்கமருந்துதான் என்று எண்ணி ஏமாற்றமடைந்திருக்கிறாள். அவளையும்ஏமாற்றி—விஷத்தைக் கொடுத்துக்கொலையைஉண்டு பண்ணிய உண்மைக் குற்றவாளியை நாம் மறந்துவிடக்கூடாது........."

மற்றவர்களின் மனத்தை உறுத்தும்படி அவன் பேசினான். ஆணித்தரமான அவனது முறையீடு சகலரையும் திடுக்கிடச் செய்தது. மேரி சட்டென்று திரும்பி சேகரை உன்னிப்பாக நோக்கினாள்.

'போர்மென்' இதை ஆட்சேபித்தார். நீதிபதிகள் போர்மெனை ஆமோதித்தனர். ஆகக் கூடி சேகரின் பேச்சு அடைபட்டுப் போனது.

கடைசியாக ஜூரிகளின் கூட்டு அபிப்பிராயம் பகிரங்கமாக வாசித்துக் காட்டப்பட்டது.

அனைவரும் ஆச்சரியமடைந்தனர். கைதிகள் மூவரும் அந்த முடிவின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவர்களாய் அசைவற்று உட்கார்ந்திருந்தனர்.

மேரி குற்றவாளிதான் என்று பெரும்பான்மையான ஜூரிகள் முடிவு கட்டி விட்டனர். ஆனால் ஏகோபித்து எல்லோரும் தீர்மானித்தபடி "குற்றவாளிதான்—ஆனால் கொல்ல வேண்டுமென்ற நோக்கம் இல்லாமல்......" என்ற சரத்தைச் சேர்க்காமல் விட்டு விட்டனர். 'போர்மென்' படுத்திய அவசரம்தான் காரணமென்றாலும் 'சேகர்' இதுசமயம் திக்பிரமையால் செயலற்றுக் கிடந்ததே இது நடப்பதற்கு ஏதுகரமாய்ப் போய்விட்டது.

எதிர்பாராத இத் தவறு......மேரியை விழுங்கிவிட்டது.

பிரதம நீதிபதி தீர்ப்பைப் படித்தார். அகல விரித்த கண்களில் ஆர்வம் பீறிட அனைவரும் தீர்ப்பின் சாரத்தைக் கேட்டனர்.

"பக்கிரிசாமிக்கும்—பாக்கியத்துக்கும் எட்டு வருடங்கள் கடுங்காவல் தண்டனை—மேரிக்கு ஆயுள் தண்டனை."

"ஆயுள் தண்டனை!" என்ற வார்த்தையைக் கேட்டவுடனே மேரியின் முகம் கனல் நிறமாகச் சிவப்பேறிற்று.

"நான் நிரபராதி—நிரபராதி" என்று கதறினாள். அவளுடைய குரல் கோர்ட்டு முழுக்கவும் எதிரொலித்தது.—"இது பெரிய அநியாயம். நான் குற்றமற்றவள். நான் சொன்னது பூராவும் உண்மை. சத்தியம் இது" என அலறினாள்.—"நீதி செத்து விட்டதா?" என்று கூவினாள்.

அவளுடைய தீனக்குரல்—தவிப்பு—எழுந்து போய்க் கொண்டிருக்கும் எவருடைய இதயத்தையும் தொடவில்லை—ஆனால்......?—சேகர் தன்னுணர்வு அற்றவனாய், இடத்தைவிட்டு எழுந்திராமல் அவளைப் பார்த்தவாறே பிரமித்துப் போயிருந்தான். "துவண்டு விழுந்து அழுது துடிக்கும் அந்தத் தங்கமேனி ஒரு காலத்திலே தன் மடியிலே தவழ்ந்ததே.........இன்று........." என்று எண்ணிக் கண்ணீர் வடித்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மேரி போலீசாரால் இழுத்துச் செல்லப் பட்டாள். சேகரின் சிந்தனையில் ஏற்பட்ட சூன்யவெளி விரிந்து விரிந்து விரைவாக வெந்து சுடும் பாலைவனமாகிக் கொண்டிருந்தது.

# 4

நடு நிசி நேரம்—எவ்வளவுதான் முயன்று முயன்று, கண்களை மூடிப் பார்த்தாலும் தூக்கத்தின் சாயலை—அணைப்பை பெற முடியவில்லை.

சிந்தனைச் சுழலின் வேகம் நிற்காத வரை—எண்ணத்தின் செயல் ஓயாத வரை—கண்ணுறக்கம் கிட்டாது.

அந்தப் பயங்கர இரவைக் கடக்க......அவனால் முடியவில்லை—அன்று மேரி ஆயுள் தண்டனை பெற்றாள்—ஏனோ......?—குற்றப் பத்திரிகை கூறுகிறது கொலைகாரி என்று—சண்டாளி என்கிறது சட்டம்—ஆகவே தண்டனை பெற்றாள்.

ஆனால் அவளை இந்தப் பொல்லாத நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்திய முதற் குற்றவாளி—அடிப்படை ஆசாமி—யார் என்ற கேள்வி அவனைச் சுற்றி வட்டமிட்டது—சிரித்து விளையாடும் சிறார்கள் ஒன்றுக்கு ஒன்று சண்டை வந்தால், "டூ" போட்டுவிட்டு ஆள் காட்டி விரலைப் பாதி மடித்து வாயால் வலிச்சம் காட்டுவதுபோலக் **கேலி செய்தது!**

ஆற்றிலிருந்து வரும் நீரோட்டத்தின் சப்தமும்—வானத்தில் ஊர்ந்த மதியின் மங்கிய ஒளியும்—அவனை எத்தனையோ நாட்களுக்கு முன்பு நடந்தேறிய நிகழ்ச்சிகளைச் சிந்திக்கத் **தூண்டின—தூபமிட்டன**—!

அகக்கண்ணின் முன்பு—மங்கிய ஒளி பட்டு—உருவமொன்று தெளிவற்றுத் தோன்றியது—அது வேறு யாராக இருக்கக் கூடும்?—மேரியேதான்......!

அந்த உருவம் நன்ருகத் தெரியக் கூடாதா என்று ஏங்கினன். இது எப்படி சாத்தியப் படும் என்ற உணர்வு ஏற்பட்டவுடன் அவனுக்குப் பெரிய..........!

வேட்டையாடுகையில் காயமடைந்த ஒரு பறவையைக் கொல்ல வேண்டியதா யிருக்கும்போது ஏற்படுமே, அதே போன்ற வேதனையும் வருத்தமும் அவன் இதயத்தை அடைத்துக் கொண்டன.

அவனது உணர்வின் பாதையிலே, எத்தனையோ எண்ணங்கள் புகைகையைப்போலப் பொங்கி எழும்பின. பற்பல எண்ணங்கள் இணைந்து சிதறின எனக் கூறி விட முடியாது—ஆனல் அழகிலே வெம்மையும் கருமையும் கலந்தவை.

நினைவுத் திரையில் ஒளியும் நிழலும் பின்னிப் படர்ந்து, கடந்த நாட்களின்.........!

* * *

அத்தை வீடு.......'

அவனது தாராள குணத்தைக் கண்டு எல்லோரும் வியந்தனர். பிச்சைக் காரர்களின் குரலை அவன் கேட்டுவிடக் கூடாது—! 'தர்மம் தலையைக் காக்கும்' என்ற வரட்டுத் தத்துவத்தின் மீது அவனுக்கு நம்பிக்கை கிடையாது.

இருப்பினும் அவனது இரக்க சிந்தை பராரிகளின் பரிதாபக் குரலைக் கேட்டால், மேலும் மென்மையாகி விடுகிறது. வாரி வழங்கி விடுவான்.

இது ஒருவேளைக்கும்— ஏதோ ஒரு அளவிற்கும் தானே இந்தப் பஞ்சைகளின் குடல் கொதிப்பை அடக்கும். நாலுபேரைப்போல நன்றாக இருந்து இன்று நடுத்தெருவில் திரிகிறவர்களைப் பார்த்தும் பாராதவராய்ப் போகும் இந்நாட்டில் இவர்களது துன்பம், தீர்ந்து விடுமா?—தீராதுதான்—ஏன் **வேலையும் சோறும் வேளா வேளைக்கு மணியடித்தவுடன் கிடைக்கும் மதிப்பான இடம் இந்த ஆட்சி முறையில் இருக்கத்தானே செய்கிறது......!** வேலையற்ற **பாராரிகள்**—வேதனை கொண்ட **பிச்சைக்காரர்கள்**—வம்புக் கென்று—வேண்டுமென்றே—ஏதாவது ஒருவருக்கொருவர் **அடிதடி—சின்னஞ்சிறு களவு—** இப்படிச் செய்து **தண்டனை பெற்றுச்** சிறைசாலைக்குப் போய்விட்டால்........?—**பசியும் தீருகிறது—வேலையும் கிடைக்கிறது—அதிலும் புதிய தொழில் வேறு படித்துக் கொள்ளலாமே........!** வாழத் தெரிந்தும் வகையில்லாமல்—நெஞ்சம் இருந்தும் வஞ்சிக்க வகை அறியாது—வழி தெரியாது—பராரியாய் வெளியே திரிகிறான். சமுதாயம் அவனைப் பார்த்துச் சிரிக்கிறது—வெறுக்கிறது! கண்ணால் பார்க்கக்கூடாது என்று முகத்தையே திருப்பிக் கொள்கிறது. ஏதாவது செய்கிறான்; சட்டத்தை மீறுகிறான்; —அரசாங்கம் வாரி எழுந்து அவனுக்கு உணவு—மருந்து— தொழில் — பாதுகாப்பு—அப்படி யெல்லாம் கருணை காட்டுகிறது. வருடத்திற்கு ஒரு கைதிக்கு ரூபாய் 380 செலவில் உணவளிக்கிறோம் என்று உற்சாகமாய்—அறிக்கை விடுகிறது. இங்கிலையில் வெளியே

சமுதாய ஆதரவும்—அரசாங்க இரக்கமும்—இல்லாது இடருறும் அத்தனைபேரும் அங்கே போய்விட்டால்....?

சிந்தனையின் ஓட்டத்தில் அவனுக்குத் தாங்கமாட்டாமல் சிரிப்பு வந்து விட்டது. **இப்படியான கிளர்ச்சியில்—புரட்சியில்—மறுமலர்ச்சியில்—மக்கள் மனதை மாற்ற வேண்டுமென்று விரும்பினான்.** பொருளாதார மேடுபள்ளங்களைச் செப்பனிட்டு சமுதாயத்தைச் சீராக உருவாக்கத்தான் பிறந்துள்ளோம் எனப் பெருமையாக நினைத்துக் கொண்டது மட்டுமல்ல செயலிலும் **புது உலக மனிதனாகவே** விளங்கினான்.

இப்பேர்ப்பட்ட "**தத்துவ ஞானி**" திடீரென்று தையலாரின் தேன் உதட்டுச் சுகத்துக்காகத் **திரிந்தான்—தெண்டனிட்டான்—துடித்தான்**..........என்றால்.......... அரசியல் போக்கிற்கு இது ஆகாது என்று யாரும் சொல்லிவிட முடியாது—**வாழ்வின் வசதிக்கு இது வழுக்குப்** பாறையல்லவே! வெல்வெட்டு **மெத்தை போன்ற** மெதுவான அவளது **இதயத்தை,** மெல்லிய **மலரொத்த** தன் **மனோரம்யப் பார்வையால் மோதினான்!**

விரல் கொண்டு உணர்ச்சி வயமான இடத்தைப் பெண்மை வருடும்போது, **ஆடும் மயில் நடனத்தில் அழகில்லை—ஓடும் மின்வெட்டில் வேகமில்லை—கொட்டும் மழையில் குளுமையில்லை**—என்று **வெறுக்கக் கூடிய அளவு விவேகம் கெட்டவனல்லவே சேகர்!**

ஆகவே மேரியின் மாதுளங்கனி நிகர்த்த மேனியைத் தழுவி, தன்உள்ளம் **இனிமை சாய்க்க—இன்பம் துய்க்க—பிரேமையைப் பெருக்க—நாள்—நேரம்—விநாடி—** கணித்தான். இதில்கூட அவன் ஒரு விஞ்ஞானியைப்

போல நினைப்பு—முயற்சி—பயன்—என்று வரிசை வைத்துச் செயல் புரிந்தான்.

ஒருநாள்.......!—அன்றுதான் சமுதாயச் சோலையிலே, பூத்திருந்த புதுமலர்களில் ஒன்றை உதிர்த்து விட்டான்.

**இது அவனுக்கு அப்போது ஒரு வேடிக்கையான விளையாட்டு மாதிரி இருந்தது. பொழுது போக்கில் புலன் இனிமை காணும் புகழ்மிக்க பாதையல்லவா இது!**

இருவருக்கு மிடையே உள்ள வர்க்க வேறுபாடு—வாழ்வின் திசைமாற்றம்—எல்லாம் அவனுக்குத் தென்படவேயில்லை.

அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை.—மூடுபனி கவிந்து கொண்டிருந்தது. சிறிது தூரத்திற் கப்பால் மலையடிவாரத்திலுள்ள அருவி நீர்ப் பாய்ச்சல், விசித்திரமான சப்தங்களைக் காற்றலையில் கலந்து அனுப்பியது.

மாடியிலிருந்து கீழே இறங்கினான்—தவறான காரியம் என்று நூலேணி எதையும் அவன் கட்டி அதன்வழியாக இறங்கவில்லை. அவன் வீடு மாதிரி தானே—! அப்படி இப்படி என்று யார் கேட்க முடியும்?

மேரி படுத்திருக்கும் அறை அருகே போனான்—நின்றான்.

உடல் முழுதும் நடுங்கியது அவனுக்கு. அவன் முகத்தில் காமக்களை படர்ந்தது.

ஜன்னல் கண்ணாடியருகே முகத்தை வைத்துக் கொண்டு லளிதமாய்ப் புரண்டு கிடக்கும் மேரியின் கட்டிலை நோக்கினான். கட்டுக்கடங்காத காளைப் பருவத்து உணர்ச்சி அவனது கருத்தைக் கசக்கிப் பிழிந்து ரசம் எடுத்தது. எங்கோ அடிப்பாகத்தில் உறங்கி கி ட ந் த சக்தியா இது.......?

இன்று இவ்வளவு தூரம் அவனை இ ழு த் து க் கொண்டு வந்து இங்கே நிறுத்திய சக்தி.......! ஆம்! அன்று மாலை தோட்டத்திலே அவளோடு இரண்டொரு வார்த்தைகள் பேசிப் பார்த்திருந்தான். அப்பேச்சிலிருந்து அவள் கருத்து ஒத்து வருவதாக அவனுக்கோர் தைரியம் பிறந்தது!—அந்தத்திட எண்ணம்—உணர்ச்சி இப்போது நடுநிசி நேரத்தில் மேரியை நாடிச் செல்லுமாறு தள்ளி விட்டது. தாவிப் பறந்து வந்து விட்டான் இங்கே!

தைரியம் தளரும் போது பின்வாங்குவான். பருவத்து உணர்ச்சி உந்தும் போது அறையை நெருங்குவான். இவ்வாறு எவ்வளவோ நாழிகைகள் நெஞ்சத்துப் போரினால் நிலைகுலைந்தான். இங்குமங்கும் மாறிமாறி நடமாடினான். பொழுது புலர்வதற்குள் கண்டிப்பாக இன்றைக்கு.......!—இப்படியொரு எழுச்சி வெறியாட்டம் போட்டது!

எங்கோ வெகு தூரத்தில் ஒரு சேவல் கூவிற்று. அதற்குப் பதில் அளிப்பது போல வேறு எங்கோ மற்றொரு சேவல் குரல் எழுப்பியது. **இதற்கு ஏதாவது விவரம் இருக்குமானால் அது அவைகளுக்குத்தான் தெரிந்திருக்க வேண்டும்!**

1346

EXTENSION

மரங்களின் கிளைகளிலே தூங்கி வழிந்து கொண்டிருந்த பறவைகள், விடியற்கால உணர்வைப் புலப்படுத்துவதுபோல—இறக்கைகளை அடித்துக் கொண்டன!—தலைகளை வெடுக்கு வெடுக்கென்று நிமிர்த்திக் கொண்டன—'கீச்சு, கீச்சு' என்று குரலை உயர்த்திக் கொண்டன.

அருவி நீரின் சலசலப்பு—சேவலின் அறிவிப்பு பறவைகளின் இறக்கை அடிப்பு—எல்லாம் ஒரே குரலாயின........!

இனியும் தாமதிக்க முடியுமா......?

அவள் படுத்திருந்த இடத்தருகிலேயே—போனுன் உட்கார்ந்தான். மெதுவாக அவளைத் தட்டி உசுப்பினுன். உணர்ச்சி நரம்புகள் ஓலமிடட்டும் என்று எண்ணினுனே என்னமோ அவளது மூக்கின் நுனியையும்—இதழ்களின் முனையையும்—மெதுவாக வருடினுன்.

ஏதோ கனவு உலகத்தில் சஞ்சரித்தாளோ—அன்றிக் கண்களை விழித்துப் பார்க்காத நிலையில் இனிய கனவு காண்பதாக எண்ணினுளோ— அப்படியே தன் கரத்தைத் தூக்கிப் போட்டாள்—நேராக நிமிர்ந்து படுத்தாள்—அந்தக் கரம் அவனது மடிமேல் விழுந்தது—மறுவினுடி..........!—மயக்க முனையிலுள்ள மூலநரம்பு தாக்கப்பட்டு விட்டது போலும்!—அவனும் படுத்தான்—இறுக அணைத்தான் அவளை. கீழ் உதட்டைத் தனது இரு உதடுகளால் கவ்விச் சுவைத்தான்—இனியும் தூக்கம்தான் என்று பாசாங்கு செய்ய முடியுமா?—அவள் இப்போது விழித்துக் கொண்டாள்.

"ஐயோ இதென்ன காரியம்? இப்படி...........! உம்.......ஹீம்... ...கூடவே கூடாது......!" என்ருள்— "என்னைத் தயவுசெய்து விட்டு விடுங்கள்" என்று மன்ருடினள்.

வாய்மொழி வஞ்சகம் சொன்னதே தவிர அவளது மலர் உடல் அவனுடைய பிடியினின்று விடுபடாமல் கிடந்தது—அவனே தணியாத தாகமும்—குறையாத வேகமும்—மேலிட்டுத் தவித்தான்.

இனி விடுபட முடியாது என்று தீர்மானித்து விட்டாளா.......?—அல்லது—"வாழ்வின் இன்ப எல்லையைத்தான் காண்போமே—ஏன் மறுக்க வேண்டும்?" என்று அவளின் பருவம் பண் இசைத்து விட்டதா......?

அவன் ஈந்த முத்தங்களை ஏற்ருள். பொன் முகத்தை இருகையால் ஏந்தி வாயைத் தன் கன்னத்தில் அளவோடு வைத்து—"உம்.......!" என்ருன். அவளும் ஈந்தாள். 'இச்' ஒலி எதிரொலித்தது அங்கே.

அப்புறம்...**பனிக் காலத்தின் குளிர்ச்சிக்கு அவ்வறையிலே மதிப்பே இல்லாமல் போய் விட்டது.........! சேகரின் சிந்தனையோட்டம் ஓய்ந்தது!** இவ்வாறு அன்ெருரு நாள் கெடுக்கப்பட்டாள் மேரி! இன்று விபச்சாரி மட்டுமா.......? கொலைகாரியாகச் சிறையிலே......!

'அவள் சிறையிலே கிடக்க வேண்டியவளல்ல--அவள் வாடி வதங்கினலும் சருகாய் உதிரச் சம்மதியேன் ஒருக்காலும்'—இவ்வாருன ஆசைகள் அவனது உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையில் தீப்பொறிகளாய்ச் சிதறின.

"நல்லதொரு வழக்கறிஞரை ஏற்பாடு பண்ணி—அப்பீல் செய்து—மேரியை விடுவிப்பேன்—என் செல்வம் போனாலும் சரி—என் செல்வாக்குச் சிதறினாலும் சரி—விடமாட்டேன்—அவள் விடுதலையானால்......?" இவ்வாறு முடிவு கட்டினான். மறு நாளே மேரியைச் சிறைக்கூடத்திலே சந்திக்க வேண்டுமென்று திட்டமிட்டான். இது சமயம் அவன் மனத்தின் கனம் குறைந்தது போலத் தோன்றியது. சற்று நேரம் கண்ணயர்ந்தான் அவன்.

# 5

ஆயுள் தண்டனை பெற்ற மேரி சுகமான நித்திரையில் மூழ்கியிருக்க முடியுமா......?

அதே இரவு அவளும் வேதனையினால் வாடினாள். வெளி உலகில் எவ்வளவு சுயேச்சையாகக் கேள்வி கேட்பாரற்றுச் சுற்றித் திரிந்த சுந்தரக் கிளியைச் சின்னஞ்சிறு கூண்டுக்குள் ஆயுள் தண்டனை விதித்து அடைத்து வைத்தால், அதற்கு ஆனந்தம் எப்படித் தான் கிடைக்கும்?--எங்கிருந்துதான் வரும்?—அதற்கல்லவா தெரியும் தன்னிச்சையான வாழ்விலே கிடைக்கும் இன்பத்தைப் பற்றி!

இதய மறிந்து இம்மி அளவுகூட எவருக்கும் தீங்கு இழைக்காத எனக்கா ஆயுள் தண்டனை என எண்ணினாள்—கேவிக் கேவி அழுதாள். இதனைப் பார்க்கிலும் கொடுமையாகப் பட்டது சேகரை, நீதி மன்றத்திலே ஜூரியாகப் பார்த்த காட்சி.

“என்னைக் குற்றவாளி என்று தீர்மானித்துத் தீர்ப்பளித்தவர்களுள் சேகரும் ஒருவர்தான்—விவாத அறையில் அவர் என்ன சொன்னார் என்பது யாருக்குத் தெரியும்?—ஏதோ ஒப்பனைக்கென்று எனக்குச் சாதகமாக விவரம் எதும் தெரியாதவர் போலப் பேசி நாடகம் நடத்திவிட்டார்......ஆனால் அவர்தான்......” இந்த நினைப்பு மனப் போரை உச்ச நிலையில் கொண்டு போய்

நிறுத்தியது. அந்த உச்சி மேட்டிலே நின்றவாறு அவளின் சிந்தனை கடந்த கால **தூரத்தை**—அது தந்த **துயரத்தை**—நடத்திய **கோரத்தை**—நோக்க ஆரம்பித்தது.

* * *

அன்று இனிக்கப் பேசி—இழைந்து நெருங்கி—இங்கிதமாய் அணைத்து—இன்பம் தந்தார் சேகர். இலகுவில் கிட்டிய இன்பமென்ற போதிலும் இனிக்காமலா இருக்கும்?—**இனிப்பைச் சுவைக்காத எறும்பும் உண்டா?—சிரிக்கத் தெரியாத சினிமா ஸ்டாரும் உளரோ?—வளர்க்க வகையற்ற தோட்டக்காரனுக்குச் செடி கொடிகளிடம் வேலையும் இருக்குமா?**

அவன் அருகிலே நெருங்கி இழுத்து அணைத்து முத்தங்கள் ஈந்த சமயம்—முதலில் அஞ்சினாள்—முடிவிலோ மிஞ்சி விட்டாள் அவனையும்.

தகாத செயல் எனக் கருதினாள்—கூடா வொழுக்கமெனக் கூறினாள். இருப்பினும் இளமை உள்ளம் இன்பத்தை ஏற்பது தவறல்ல என எழுச்சிக் குரல் எழுப்பியது—இணங்கினாள்.

ஆனால் இன்றைய இன்பம்—நாளைய துன்பத்தின் துவக்க நிலை என்பதைப் பருவகால உணர்ச்சி **பகுத்துப் பார்க்கவும்—உணர்ந்து நடக்கவும்**—உறுதி காட்டவில்லை. புரிந்து கொள்ள முடியாத நிலைமையில்—பொன் மொழியின் கருத்தை—அறிந்து கொள்ளும் திறமை ஆசைக்கு இல்லாமல் போவது இயல்புதானே!—அந்த நிலை அப்படிப்பட்டது!—அதற்காக யாரையும் பொறுப்பாளியாக்கி விடமுடியாது.

அதன் பின்னர் ஊருக்குப் போய் விட்டு வருவதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டுபோன சேகர் மீண்டும் வரவே இல்லை. தனக்காக மங்கை நல்லாள் ஒருத்தி மானத்தோடு மன்ருடுகிருள்—உயிரோடு போராடுகிருள்—என்பதைச் சிறிதளவேனும்சிந்தித்துப் பார்த்திருந்தால்......இப்படி......?—

இருட்டில் சந்தித்ததுதானே என்று வாழ்வின் வரலாற்றுச் சுவடியிலே இதற்கு இடம் வைத்து எ.துவும் எழுதவில்லைபோலும்!—திருட்டுச் செயல் என்று ஒரேயடியாகத் திரைமறைவாக்கி விட்டான் போலும்!

என்ருவது ஒருநாள் வந்து தப்பை உணர்ந்து இரண்டு வரிகள் எழுத வந்தாஞ?—இல்லை திரையைக் கிழிந்தெறிந்து திவ்வியத்தைக் காப்பேன் என்று திடம் கொண்டாஞ?

இப்படியெல்லாம் நீதியைப் பேண—நம்பியவளைக் காக்க—நினைத்திருந்தால், கற்பை இழந்த நிலையில் கண்ணீர்க் கரை புரண்டோடக் காலம் கழிக்கும் மேரியைப்புகைய விட்டிருப்பாஞ......?

கடைசியாக அவனுடைய அத்தைக்கு வந்த தபாலில் இருந்து அவன் மேல் நாடு சுற்றுப் பிரயாணம் போய் விட்டதாக அறிந்தாள்.

ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படக் கூடிய காதலில் ஒரு உச்சிக் கட்டம் வருகிறதல்லவா?—அத்தகைய நேரம் தனக்கு வாய்த்ததாக நினைத்தாள்.

விமானத்தில் செல்பவன் கூட வானத்தைத் தொட்டு விட்டதாகத்தான் நினைக்கிருன்!—ஆனல் அது

வொரு முடிவற்ற நீல நிற வெளி என்பதை அவன் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

அதே மாதிரிதான் வந்துற்ற வாய்ப்பை, பெரும் பேறு எனப் பூரித்தாள். ஆனால் சேகர் திரைமறைவில் எட்டாத பொருளாக மறைந்த பின்னர் அவளுக்கு இந்த உலகமே வெறித்துத் தோன்றியது.

திக்கற்றுத் தவித்த காலம்—துணையிழந்து துடித்த துயர வேளை—காதல் என்றாலே கசப்பாகத் தோன்றிய நேரம்—வஞ்சனை உலகின்மீது நெஞ்சுப் பொறுமல் மிஞ்சியிருந்த சமயம்—அந்த வீட்டுக்குப் பண்ணைச் சீமாட்டியின் தூரத்துப் பந்து ஒருவர் வந்தார். இரண்டொரு தினங்கள் தங்கினர். சாமர்த்தியமான பேச்சு—சூழ்ச்சியான பார்வை—சுயநலமான நடத்தை—இவற்றுக்குப் பெயர் பெற்ற புண்ணியவாளன் அந்தப் பிரபு.

வனிதையொருத்தியை வலையில் வீழ்த்துவது என்பது அவருக்கு வேடிக்கையானது மட்டுமல்ல சுலபமான காரியமுங் கூட.

எவ்வாறோ மேரியை இணங்க வைத்துவிட்டார்.

அவளுக்கு இருந்த ஆசையெல்லாம் இதுதான். எது எப்படிப் போனாலும் அவளது வயிற்றில் வளரும் கருவுக்கு ஒரு தகப்பன் தேவை. அந்தத் தகப்பன் ஸ்தானத்துக்கு ஒரு ஆடவன் அவசியம். இப்படிப்பட்ட எண்ணத்தினால்......?

அந்தப் பிரபுவின் பேச்சு அவளுக்கு நம்பிக்கை ஊட்டியது. அந்த நிலைமையில் அவன் பிரபுவாக இருப்பினும் சரி—பாட்டாளியாக இருப்பினும் சரி—இணக்கம் கொடுக்கத் தயாராக இருந்தாள். ஆனால் கண்ட

பலனே......?—கட்டழகு பாய்ச்சும் உடலோடு நின்றது அவன் செய்த காரியம்!—வாழ்வளிக்க—அவமானச் சின்னத்துக்கு அப்பாவாக—அந்த மகாப்பிரபு மறுத்து விட்டார். அப்படியிருந்தும் அவளென்ன இவ் விவரத்தைக் கூறியா குடும்பம் நடத்த வேண்டினாள்?—அதுவுமில்லை—அவள் உண்மையைக் கூறியிருந்தால் அவன் ஓட்டம் எங்கு போய் நின்றிருக்குமோ? திட்டப் படுத்தி எவர் கூற இயலும்?

திருமணம் என்றவுடன் திக்கற்றவர்களை ஆதரிப்பதே என் வாழ்வு என்று பீத்திக்கொண்ட அந்தப் பங்களாவாசி திடு திப்பென்று நின்று விட்டார். கொஞ்ச நாளையில் அவரைப் பற்றிய விவரமே தெரியாமல் போனது அவளுக்கு.

இதனால் இளமையைப் பறித்த பட்டியலில் பிரபு இரண்டாவது எண்ணாக இடம் பெற்றார்!

இத்துடனாவது நின்று கொண்டாரோ இந்த மகராசன்!—கடன் கண்ணி வாங்கச் சீமாட்டி மாளிகைப் பக்கமே போக முடியாத நிலைமை வந்து விட்டதால் அவர் பாடு பெரிதாய் விட்டது. 'மேரி நடத்தை கெட்டவள்—என்னிடமே ஒருமாதிரி.........!' இப்படியான செய்தியைப் புறக்கடைப் பாதைவழியாகச் சீமாட்டியின் செவிகளில் ஏற்றி விட்டார்.

"நூலைப்போல சீலை—தாயைப்போல சேய்" என்ற பழமொழி உண்மையாகி விட்டதாக உணர்ந்தாள் பண்ணைச் சீமாட்டி. அம்மாவுக்குப் பதில் அப்பாவாக—அப்பாவுக்குப் பதில் அம்மாவாக—இருவருக்கும் பதில் தானாக—இருந்து பாராட்டி — சீராட்டி — வளர்த்து

இறுதியில் தாய் வழியைப் பின்பற்றிக் கெட்டழிந்து போனாளே என்ற ஆத்திரத்தை அடக்க முடியவில்லை அவளால்.

அதற்குப் பிறகும் அங்கே மேரியை வைத்து ஆதரிக்க அவளென்ன அவமானத்தைப் பொருட்படுத் தாத பண்புடையவளா......?—ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அமைதியாக இருக்க அவள், குணமென்னும் குன்றேறி நின்றவளா என்ன......?

மேரி அடிக்கப்படாமல் விரட்டித் துரத்தப்பட் டாள். தெருத் தெருவாய்த் திரிந்தாள். தேடி அலைந் தாள் வேலைக்காக! ஒருவாய் சோற்றுக்காக அவள் அனுபவித்த அவதிகள்?

பிரதி பிரயோசனமின்றிப் பிச்சையிட வரும் எந்தப் புனிதவானையும் அவளால் பார்க்க முடிய வில்லை—**பகுத்தறிவு வாதிகளாகவே** பெருத்துவிட்ட பரந்த உலகத்தில் இதற்குப் பஞ்சமே இல்லாமல் இருந்தது.

சுயநலத்தைப் பேணுதவர்களைச் சுத்தப் பைத்தியம் என்றுதானே உலகம் முடிவு கட்டுகிறது!—ஆகவே பயன் உண்டா என்று பார்ப்பவர்களைக் கேவலமாக நினைப்பது முழுதும் தவறல்லவோ! எங்கெல்லாம் கருணை யான குரலைக் கேட்டாளோ—அங்கெல்லாம் அவளு டைய கட்டுடலையே காணிக்கையாகக் கேட்டனர் யாவரும்.

மேரி, நாதியற்ற நாடோடியாகத் திரிந்த நேரத்தில் பெண்ணொருத்தி அறிமுகமானாள். அவளுக்கு வயது நாற்பதுக்கு மேலிருக்கும். எனினும் பதினெட்டு வயது

நிரம்பிய பருவக் குமரி மாதிரித் தன்னை அலங்கரித்துத் கொண்டிருந்தாள்.

அவளிடம் சென்று மன்றாடினால், ஏதாவது வேலை தருவாள் என மேரியிடம் தெரிவித்து அனுப்பி வைத்த வன் பக்காப்பேர்வழி!—இந்தப் பேருதவிக்குப் பிரதி பலனாக எவ்வளவு பெற்றுக் கொண்டானோ?

ரயில்வே நிலையம்—பஸ் ஸ்டாண்டு—நாடகம்—சினிமா ஆகிய இடங்களைச் சுற்றித்தான் இப்பேர்ப் பட்ட ஆசாமிகள் நடமாடுவார்கள். யாராவது ஒரு பெண் அங்கே வந்து நின்று பரக்கப் பரக்க விழித் தால் போதும் அன்றைய தினம் அந்த ஆசாமிகளுக்கு நிச்சயமான வருமானம் கிடைத்த மாதிரிதான்.

அவர்களுள் ஒருவன்தான் மேரியை அந்த நாற்பது வயது நிரம்பிய நாகரிகப் பெண்ணிடம் ஒப்படைத்து விட்டுப் போனான்.

அவள் அகம் சென்றபோது மேரியை ரொம்பவும் பிரியமாக வரவேற்றாள். உபசரித்தாள். உயர்தரமான உணவுவகைகளைப் பரிமாறி உண்ணச் செய்தாள்.

மாலை நேரம்வரை இருவரும் பேசிப் பொழுது போக்கினர். தான் வேலை தேடி வந்த நோக்கத்தைப் பேச்சுக்கு மத்தியிலே எடுத்துக் கூறினாள். அந்த வீட்டுக்காரியோ "ஆகட்டும்—அதற்கென்ன?—அள வற்ற வருமானம் கிடைக்கிற தொழிலா இன்னிக்கே தர்றேன்" என்று சமாதானப்படுத்தி வைத்தாள் மேரியை.

செம்பரிதி மறையும்நேரம்செம்பட்டைத் தலையுடன் ஒரு டம்பப் பேர்வழி வந்தான். அவன் முதுமையை

மறைக்க மெருகு பூசியிருப்பது தெளிவாகத் தென்பட்டது. அவனும்—வீட்டுக்காரியும் எப்படியெப்படியோ விளையாட்டாகப் பேசிக்கொண்டனர்—இடையே 'குசு குசு'வென்று காதையும் கடித்துக்கொண்டனர்.

அவனை அடுத்த அறைக்கு அழைத்துக் கொண்டு போய் "கிராமத்திலிருந்து வந்திருக்கிற புதிய சரக்கு—பெயர் மேரி" என்று அவனிடம் சொன்னது மேரியின் காதில் விழுந்தது. அப்போதுதான், தான் வந்திருக்கும் இடமெது என்று ஊகித்துக் கொண்டு விட்டாள். இனி......?

பிறகு அவள் மேரியைத் தனியாக அழைத்து, 'வந்திருப்பவன் பெரிய பணக்காரன்' என்றும், 'அவனோடு இரவு தங்கினல்தேவையான அளவுபொருள்தரத் தயங்க மாட்டான்' என்றும், 'படுக்கையில் படுக்கத்துணை நாடுகிருன்' என்றும் 'வேறு விதர்ப்பமாக நினைக்க வேண்டாம்' என்றும் நாசுக்காய் நவின்ருள்.

மேரியின் நெஞ்சம் நிலை கலங்கிப் படபடத்தது—"பணம்!—வாழ்வதற்கு வகையளிப்பது பணம்!—" இப்படி அவள் வாய் முணுமுணுத்தது.

எப்படியோ எண்ணத்தை ஒரு முனையில் நிறுத்திக் கொண்டு—இதயத்தை இருத்திப் பிடித்துக்கொண்டு—அவன் இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

ஆசைக்கனல் பறக்க—அன்பு மொழி விடுக்க—அதரம் உயர்ந்து நிற்க—எழுந்தோடி வந்து அவளை வரவேற்ருன். மெத்தையில் உட்கார வைத்தான். சாராயத்தை இரு கிண்ணங்களில் வார்த்தான். ஒன்றைத் தான் பெற்றுக்கொண்டு மற்ருென்றை மேரி

யிடம் நீட்டினன்—மேரியின் உள்ளம் பதறிற்று—ஆடத் தொடங்கிற்று உடல்—ஒன்றும் புரியாதவளைப் போல அவனைப்பார்த்தாள். அவளுக்குப் புரியாமல் இல்லை இது, தன்னையும் மதுபானம் அருந்துமாறு வலியுறுத்துகிறான் செயலால் என்பதை அறிந்தாள்.

“ஊஹூம்......வேண்டாம்—பழக்கமில்லை” என்றாள் எளிய குரலில் மேரி.

“பழக்கப்படுத்திக் கொள்ளணும் மேரி! மது அருந்தி விட்டு மதனபுரிப் பயணம் புறப்பட்டா அதுக்கே ஒரு தனி மவுசு!—ஆமாம்......!—இந்த உலகத்தையே மறந்து இன்பம் அனுபவிக்கலாம்—நீண்ட நேரம் சலிப்பில்லாமல் சரசலீலையாடலாம்...உம்! இந்தா...” என்று கூறி அவளுக்கு அவனே ஊட்டினன்.

முதலில் நெஞ்சிற்பட்ட அதன் நெடி அவளுக்குக் குமட்டலைக் கொடுத்தது—இது தகாத செயல்—பெண்மைக்குப் பாதகமான கொடுமை—என்பதை அவள் உணராமலா இருந்தாள்—பணம் என்னும் ‘பெட்ரோல் சக்தி,’ உள்ளம் என்ற இயந்திரத்தின் மீட்டர் போன்ற வேகத்தை துரிதப்படுத்தியது.

“தர்மம்—அதர்மம்—என்ற கவைக்குதவாத தத்துவங்கள் யாவும் என்னுள்ளே அடக்கம்—நீ தைரியமாக முன்னேறி வாழ்வை மடக்கு—நிலையாகக் காட்டிப்பேன் உன்னை—!” என்று ஆசீர்வதிக்கிறமாதிரி அவன் அள்ளி வர்சித்த வெள்ளி நாணயங்கள் வேடிக்கை பேசின. கண்களை மூடிக்கொண்டாள். கண நேரம் மூச்சை நிறுத்திக் கொண்டாள். கட கட வென்று தொண்டைக்குள் விழுங்கிக்கொண்டாள்.

இரவு நேர இளங்காற்றின் தழுவல்—மது பருகிய மயக்கம்—இருவரும் மெய் மறந்து மகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர்—இப்படியென்றால் தூங்கிவிட்டார்கள் என்று அர்த்தம்...?—கிடையாது...!—கிடையவே கிடையாது!! கிள்ளி வைத்தனர்—கிண்டல் பேசினர்—கிசுகிசு மூட்டினர் ஒருவருககு ஒருவர்.

விபச்சார விடுதியில் முதன்முதலாக அவள் கற்ற பாடம்—அவ்வளவு கடினமாகத் தெரியவில்லை நாளாவட்டத்தில்.

வீதி முழுக்க வீசும் விழிவலையில்—நீதி முறை பேண விபச்சாரக்கலையில்—சாதிவழி எண்ண விலை மாதர் நிலையில்—முதற்பரிசு பெறக் கூடியவாறு முன்னேறி விட்டாள் மேரி.

முதல் இரவுபோல ஒருவன் மட்டுமல்ல—அதற்கடுத்த நாள் முதல், தினம் தினம் எத்தனை பேர்கள் வருகை தந்தாலும் வருகிறவர்களுக்கு ஏற்றவாறெல்லாம் பேசி—நடித்து—பழகி—பழரசம் ஊட்டி—மயக்கி—பொருள்பெற்று இன் முகத்துடன் வழி அனுப்பி வைப்பதில் தனிப்புகழ் பெற்றாள். முதலிலும் கடைசியிலும் இன்முகத்துடன் அவள் நடந்து கொள்ளும் சிறந்த குணத்தினால் அவளுக்கு அலாதியான மதிப்பு!

இதனால் மேரியின் வருமானம் வரவரக் கூடிற்று. வாரமொருமுறை டாக்டரிடம் சென்று உடலைப் பரிசோதனை செய்து மருத்துவம் பண்ணிக் கொள்வாள். அந்த உடல் தானே தனக்கு அன்னமளிக்கிறது. **தனக்குத் தானே உணவு தேடிக்கொள்ளும்** அந்த தளிர்மேனி தளர்ந்து விட்டால் அப்புறம்.......? அதற்காகவே அவள் உடலைப் பேணுவதில் மிகுந்த அக்கறை காட்டினாள்.

அவனுக்கு அடுக்கு அடுக்காய் ஆதரவு நல்கிப் பிர மாத விபச்சாரியாக்கிய பெருமைக்குரியவள் பாக்கியமே! பலே—அவளே அந்த விபச்சாரவிடுதியின் தலைவி—நாற் பது வயதான கிழவி!—என்றாலும் அவளும் சிங்காரித் துக்கொண்டு தினசரியும் தூயவளாகத்தான் இருப்பாள்.

ஆனால் மேரி அந்த விபச்சார விடுதிக்கு வந்ததன் பின்னர் இதர இளம் நங்கையரே நாடுவாரற்றுப் போயி னரே! பாவம நாற்பது வயதை எவன் நாடப்போகி றான் .,...!

மேரிக்குக் கிடைக்கும் வருமானத்தில் பாதித் தொகையைப் பாக்கியமேபெற்றுக்கொள்வாள். உணவு— உடை—தங்கும் அறைக்கு வாடகை—இவைகளுக்கான செலவினங்களை மேரியே செலுத்தி விட வேண்டும். இது தானே விபச்சார விடுதிகளின் விதி—வழிமுறை.

இவ்வாறான விதிகள் பலவற்றை அமுலுக்குக் கொண்டுவந்த பெருமை தனக்கே உரியது என்றும்— தான் வகுத்த வழிப்படியே விபச்சார விடுதிகள் நடந் தால் நல்லது என்றும்—அடிக்கடி பகிங்கரமாகப் பேசிப் பெருமை அடைவாள் பாக்கியம்.

தேவடியாள் வீட்டுத் திருவிளையாடல்களைத் தலைமை வகித்து நடத்துவதெனில், அது எளிதான காரியமல்ல. தந்திரமான புத்திசாலித்தன மில்லாவிடில் மூண்டு வரும் விபத்துக்களி லிருந்து தப்பிப் பிழைப்பது அரிது.

பாக்கியம் பலே கெட்டிக்காரி—அனுபவசாலி— தந்திரப்பொறி—! வித விதமான பேர்வழிகள் அங்கே வருகை தருவார்கள்—பணக்காரன், பாட்டாளி, போக் கிரி, போதைக்காரன், தேடிவரும் வாடிக்கைக்காரன்,

தேவடியாள் லோலன், அப்பாவி, அயலாருக்குப் பயந்த வன், இவ்வாறு எத்தனையோ ரகங்கள். இவர்களுக்கு ஏற்றவாறெல்லாம் தோதுவாகப் பேசிக் கச்சிதமாக நடந்து கொள்வாள். தப்பித்தவறி எவனும் கலவரம் பண்ணினால் அவள் பெண்ணுக்குரிய சகல பண்புகளை யும் உதறிவிடுவாள். ரௌடித்தனமாக, போக்கிரியாகப் பேசி—நடந்து—சமாளித்து விடுவாள்.

இவ்வாறு எவரும் வியக்கும் வண்ணம் விபச்சா விடுதியை நடத்திவந்த வேளையில்தான் தனபால் வியா பாரி உல்லாசம் பெற—உடல் திமிருக்கு இரைபோட— வந்தார்.

கட்டுக் கட்டாகக் கரன்சிக் கத்தைகள்—வைர மோ திரங்கள்—விலையுயர்ந்த துணிமணிகள்—முதலியவற்றை தனபாலரிடம் கண்டாள். அபகரிக்க ஆசைகொண் டாள். இதற்கு மேரி இணங்க மாட்டாள் என்று பாக்கி யத்திற்கு நன்ருகத் தெரியும். தூக்க மருந்து என்று கூறி நஞ்சுப் பொடியைக் கொடுத்தாள் மேரியிடம்.

அதன் பலன்—தனபால் மாண்டார்—களவாடிய பொருள்களோடு கம்பி நீட்டுவதற்குள் கைதி செய்யப் பட்டனர் பாக்கியமும்—பக்கிரிசாமியும் போலீசாரால். திரை விலகியது. தீபச்சுடர் படர்ந்து நிழற்படம் காட்சி யானது.ஒரு பாவமும் அறியாத மேரி ஆயுள் தண்டனை அடைந்தாள் உண்மைக் குற்றவாளிகளுடன்.

இப்படியே ஏறத்தாழக்கழிந்த நாட்களின் நிகழ்ச்சி களை இடையருது கோர்வைப் படுத்திப் பார்த்து விட் டாள் மேரி.

சிந்தனைப் புயல் ஓய்ந்தபோது ஏறிட்டும் பார்த்தாள்.

கருங்கல் சுவர்களுக்கு மத்தியில்—இரும்புக்கிராதிகளுக்குள்ளே—'குமட்டல்' நாற்றத்துக்கு ஊடே—தன்னந் தனியவளாய் ஆயுட்காலக் கைதி எனும் பட்டத்துடன் கோரம்பாய் ஒன்றின்மீது புரண்டு கிடப்பதை உணர்ந்தாள்.

கண்ணீர்த் திவலைகள் வடிந்து வடிந்து வடுக்கள் ஏற்பட்டிருந்தன வதனத்திலே.

விடியற்கால ஆதவனின் கீழ் முகட்டைக் கண்டு களிப்படைய முடியாது போனலும் காலைக் கதிரோனின் கிரணம் அந்தச் சிறை அறையினுள்ளே பாய்ந்தது. அந்த இளமைக் கிரணத்தின் தழுவலில் சிறிது நின்றால் தேவலைபோலத் தெரிந்தது அவளுக்கு.எழுந்து நடந்தாள்.

சிறை மணி அடித்தது. கூண்டுகள் திறந்து விடப்பட்டன. திமு திமுவென்று கைதிகள் வெளியே வந்தனர். குறிப்பிட்ட அளவு உரிமை—கட்டுப்பாட்டிற்குட்பட்ட திடல்—வார்டர்களின் பாதுகாப்பு—இவைகளுக்கு இலக்கான இடத்திலே நடந்து திரியக்கூடிய அக்கைதிகளுக்கு எவ்வளவு ஆர்வம்!

மேரியும் சிறை அறையை விட்டு வெளியே வந்தவுடன்......!—"உன்னைப் பேட்டி காண ஒரு கனவான் வந்திருக்கிறார்......வா......" என்று கூப்பிட்டான் ஒரு வார்டர்.

"யாராக இருக்கலாம்—இந்த நிலையில் என்னைக் காண......ஒருவேளை" என்று குழப்ப மனத்தினளாய் போனாள். அங்கே ஜெயிலர் அருகிலே நிற்பவரைக் கண்டவுடனே அழுகை பீறிட்டது.........!

# 6

ஒவ்வொரு மனிதனுக்கும் குறிப்பிட்ட சில கெட்ட அல்லது நல்ல குணங்கள் பிரத்தியேகமாக இருக்கின்றன என்று நினைப்பது எங்கும் பரவியுள்ள ஒரு மூட நம்பிக்கை.

நல்லவன்—கெட்டவன், அறிவாளி—அறிவிலி, என்றெல்லாம் மனிதனைப் பலரும் பாகு படுத்திப் பேசுவது இயல்பாகவே இருந்து வருகின்றது.

ஒருவனிடம் உள்ள கெட்ட குணங்களைக் காட்டிலும் நல்ல குணங்கள் அதிகமாக இருப்பதாகவோ—அன்றி புத்திசாலித்தனத்தை விட முட்டாள்தனம் அதிகம் இயங்குவதாகவோ எண்ணப்படுகிறது—பேசப்படுகிறது.

ஆனல் இவன் நல்லவன்—அவன் கெட்டவன் அவன் அறிஞன்—இவன் முட்டாள், என்று கணக்கிட்டுப் பேசுவது சரியல்ல—என்பதே அவனியின் வரலாற்றுப் பாலையிலே **அறிஞர்கள் அறுதியிட்டுக் கூறிய முடிவு—**

இந்த ரீதியில் மனித இனத்தைப் பாகுபாடு செய்து பார்ப்பது முறையில்லை.

## ஆற்று நீரைப் போலவே மனிதர்களும்

ஓர் இடத்தில் குறுகலாகவும்—மற்ருேரிடத்தில் அகலமாகவும்—இங்கோர் பாகத்தில் வேகமாகவும்—இன்னேரிடத்தில் நிதானமாகவும்—பின்னேர் பகுதியில் தெளிவாகவும்—பிரிதோர் திடலில் கலங்கலாகவும்—பள்

ளமான வழியில் குளுமையாகவும்—மேட்டு வாய்க்காலில் வெப்பமாகவும்—**ஓடுகிறது—பாய்கிறது!**

மனிதர்களின் **சிந்தனையோட்டமும்** அதன் வழிச் சிதறும் **உணர்வின் ஊட்டமும்** இவ்வாறு தான்.

மனித குணங்களின் வித்து ஒன்றேயாயினும் வளர்ச்சியின் கிளைகள் வெவ்வேறாகப் பிரிகின்றன. ஒரு சமயத்தில் ஒரு குணமும்—மற்றொரு நேரத்தில் வேறு மாதிரி உணர்வும்—மேலெழுந்து நிற்கின்றன.

"**குணக் கேட்டை**" விமர்சனம் செய்யுங்கால் அறிவைப் பற்றித் தீர்மானிப்பது அவசர முடிவேயாகும். ஒரு சந்தர்ப்பத்தில் முட்டாள் தனமாக நடந்துகொண்டவன் பிறிதோர் இடத்தில் மிகப் பெரிய **ஞானியாக**—நடந்து விடுகிறான்.

ஆகவே அறிவின் எழுச்சி எப்போதுமே ஒரே திசையைக்காட்டும்—வழிகாட்டியுமல்ல — கைகாட்டியுமல்ல. சூழ்நிலையும்—சந்தர்ப்பமும் அறிவை இயக்குகின்றன—அதன்படியே—அறிவின் **ஒளியும்—நிழலும் பரவுகின்றன—உன்னத ஓவியங்கள் இடம் பெறுகின்றன—இல்லையென்றால்—உன்மத்தப் படலங்கள் படிகின்றன.**

அன்று பருவதாகத்தினால் பாதகம் நேருமே என்பதையும் பொருட்படுத்தாமல் புலியெனப் பாய்ந்தான் சேகர்! மேரியின் வாழ்வு சிதைந்தது. இன்று சிறையிலே கிடந்து உழலும் மேரியைக் கண்டு மன்னிப்புக் கோர வந்து விட்டான், அதே சேகர்!

**அன்றைய நிகழ்ச்சியினால் அவன் வீணன்!—இன்றைய நடத்தையினால் அவன் விவேகி!**

அவளைச் சந்தித்துப் பேசினாலன்றி, தன் மனக் குறை தீராது என்று முடிவு கண்டான்—முயன்றான் அவளைச் சிறைக் கூடத்திலே காண—கனியுரை கூற.

சிறை அதிகாரியிடம் விண்ணப்பம் அனுப்பினான்—வேண்டினான் பேட்டி கிடைக்க வேண்டுமென்று.

'பிரபு' என்னும் பரம்பரைப் பட்டம்—"ஜூரி" என்ற உயரிய பதவியின் மதிப்பு—அவனுக்கு உதவி புரிந்தன இங்கே.

மேரியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றான்—வந்து விட்டான் சிறைச்சாலைக்கு.

அவள் தன்னை நோக்கி வரும்போது—நெருங்கி வரும் நேரத்தில்—அட டா அவனது நெஞ்சகம் எவ்வளவு விரைவாகத் துடித்துக் கொண்டது...!—அன்று அவளை அணைத்துச் சுகித்தஅதே வேளையிலும்இப்படித் தான் நெஞ்சு......!—இவ்விரு துடிப்புக்களின் தராதரத்தை—எண்ணிக்கை வேறுபாட்டை—திட்டவட்டமாக எடுத்துக் கூற அவன் என்ன டாக்டரா **"ஸ்டெதஸ் கோப்பை"** கழுத்தில் மாட்டிக் கொண்டிருக்க......?

என்றாலும் இந்த ஒன்றை மட்டும் அவனால் நன்றாக உணர முடிந்தது—அந்தத் துடி துடிப்பின் தொனியிலே......தன்மையிலே......?

**அன்று இன்பத்தின் எழுச்சித் துடிப்பு!—இன்று துன்பத்தின் அதிர்ச்சித் துடிப்பு!**

அவள் அருகில் வந்தாள்—நின்றாள். மிகவும் சிரமப்பட்டான் தலையை நிமிர்ந்து அவளைக்காண......!—பின்னே இருக்காதா என்ன... **பெருந் துயரத்தின் தன்மை**

......?—எவ்வளவோ நாட்களுக்குப் பிறகு இவ்வாறு நெருங்கி நிற்கிறான், நிலை கலங்கிய உணர்வுடன்.

"மேரி......!" என்று நாக்குளற அழைத்தான்—ஏறிட்டுப் பார்த்தாள்.

**அன்றைய நன்னாளிலே அந்த நளினம் பேசிய நயனங்களில் நனி மிகுந்த கிளர்ச்சி!—இந்த நாளிலோ ஏக்கம் மிதக்கும் ஒரே வறட்சி!**

கண்ணீர்த்துளிகளுக்கா பஞ்சம்?—கரை கட்டி 'பொல பொல' வென்று புரண்டோடின கன்னங்களின் இரு மருங்கிலும்.

"அதர்மத்தின் **அவதாரமே!**—ஆண்மையின் **ஆணி வேரே!**—இது தான் அகிலத்தின் **தர்மமா?**—ஆண்களின் **நீதியா?**—உன்னால் நுகர்ந்து வீசி எறியப்பட்ட என்னைப் பார்!—என் வீழ்ச்சியைக் கண்டு மலர்ச்சி பெற வந்தாயா?—இல்லை உணர்ச்சி கொட்டப் போந்தாயா?—அன்று **பத்தினித்தன்மை கெடாத மேரி!**—இன்று **பலபேர் கை பட்ட பரத்தை மேரி!**—நீ தொடுவதற்கு முன் **"கோகினூர் மாணிக்கம்!"**—அதன் பின்னரோ சாயாக் கடையின் **தகர டம்ளர்!**—பாரடா பார்!—நன்றாகப் பார்!" என்று யாரோ இடிமுழக்கமாய் கொக்கரிப்பது போலப் பட்டது அவனது உள்ளத்துக்குள்ளே. அசைவற்று நின்றான்—அவளும் அப்படியே.

"மேரி...!—நான் பாவி!—என்னை **மன்னித்து** விடு......"—சோகக்குரலில் இவ்வாறு கூறினான்.

**"மன்னிப்பதும்**—தண்டிப்பதும்—பெண்ணினத்தின் அதிகாரமாக இருந்தால்—அபலைகளும் அனாதைகளும்

நடமாடுவார்களா நாட்டில்!—இல்லை நலிந்து போன நங் கையரைத் தான் காண முடியுமா......?''

இந்தச் சொல்லடியில் சூதற்ற வெறுப்பும்—மன் னிக்க விரும்பாத ஆத்திரமும்—கலந்திருப்பதாக அவ னுக்குத் தோன்றியது—ஆனால் அதோடு ஏதோவொரு தத்துவமும் கலந்திருப்பதை உணர்ந்தான்—அவளது வேதனைக்குரலில் தனது வெற்றிக்கு வகையிருப்பதை யும் புரிந்து கொண்டான்.

பீரிட்ட—மனக் கொந்தளிப்பை அழுத்திக் கொண்டு ஆர—அமர—அழுத்தமாக—மீண்டும் பேசத் துவங்கினன் அவன்.

''மேரி! நீ அநியாயமாகத் தண்டிக்கப்பட்டிருக்கிருய் ஆயுட்காலக் கைதியாக......''

''ஜூரிகளுக்கு எல்லாம் ஞானேதயம்—கோர்ட் டுக்கு வெளியில் தான் வருமோ......?''

''இல்லையே! கோர்ட்டுக்குள்ளேயும் வாதாடினே னே......''

''தவறு! நீங்கள் எனக்காகப் பரிந்து பேசினீர்களே அதுவே தவறு!—நான் குற்றம் புரிந்தவளல்ல என் பதை உணர்ந்தா வாதாடினீர்கள்?—அல்லவே—! அன் றைக்கு—மூண்டெழுந்த மயக்கம் இப்போது புத்துணர்வு பெற்று விட்டது போலும்—அந்த ஆசை தான் வாதா டும்படி தூண்டியிருக்கிறது உங்களை—நான் குற்ற வாளியில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?—**நான் அறிமுகமானவள்!—ஆசைக் கனியமுதமாய்ருசித்துஉறிஞ்சப்பட்ட வள்!—நல்லுடல் அயர்ந்து தளர அணுவிற்கு அணு பதம் பார்க்**

**கப் பட்டவள்!**—ஆகவே குற்றவாளியல்ல என்று பேசி னீர்கள்—பேசுகின்றீர்கள். இது ஒரு வகையான சுய நல மில்லையா......?"

"மேரி! நீ எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்—ஆனால் நீ குற்றவாளியல்ல என்று தான் என் மனச்சாட்சி கூறுகிறது—அறிமுகமானவள் என்பதற் காக அநீதியாகப் பேச மாட்டேன்—நீ குற்றவாளியே கிடையாது"

"நீதி வழங்கினார்களே குற்றவாளி என்று—சட்டம் என்னைத் தண்டித்து விட்டதே"

"**நீதி—சட்டத்திற்கு உட்பட்டது**—மனச் சான்றுக்கு அது மதிப்புத் தருவது இல்லை மேரி!—உண்மையைக் கூறு நீ குற்றவாளி கிடையா தல்லவா?"

"இல்லை!—சட்டம் கூறுகிறபடி நான் கொலைக் குற் றம் புரிந்தவளல்ல-ஆனால் **சமுதாயத்தைச் சூறையாடியவள்- ஆதாயத்தை** அரும் கொள்கையாகக் கொண்டு வாலிப மைனர்களைச் சொக்கட்டான் காய்களாக **உருட்டித்தள்ளிய வள்—சாராயத்தை** உண்டு போக லீலா **பாராயணத்தில்** மிதந்து தீராத நோயை—மாறாத பெரு வியாதியை— வாரிவாரி வழங்கிய கிருமிகளுக்குக் **களஞ்சியமானவள்— தண்டனைக்குரியவள் தான்—ஆனால் கொலைக் குற்றத்தின் பெய ரால் அல்ல......**"

"அப்படிச் சொல்லாதே மேரி! உன்னைச் சமூக விரோதியாக்கிய வீணன்—கிருமிகளுக்குக் களஞ்சிய மாக்கிய கயவன்—திரை மறைவில் தீனருகை—விவேகி யாக—வீற்றிருக்கிறான்—அவன்தான முதலிலும் குற்ற வாளி—முடிவிலும் குற்றவாளி—தண்டிக்கப்பட வேண்

டியவன். சட்டத்திஞல் அல்ல நீதியால்—தள்ளப்பட வேண்டியவன்; மகிழ்ச்சி மனைக்குள் அல்ல சி றை க் குள்ளே—**அவனே!**"

"நீதியின் கண்ணேட்டம் அவ்வளவு தூரத்திற்குத் தொலை நோக்குடைய தல்லவே......!"

"இருக்கலாம்!—ஆனல் அதற்காக நான் வெறு மனே இருக்க விரும்ப வில்லை—**நீதியின் மிக மிகக் குறுகிய பார்வையைக் கண்டிக்கிறேன்**—தண்டிக்கப்பட வேண்டிய வன் நான்—உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய அற் பன்—அயோக்கியன்—நான் தானே!"

"பழைய கதையை—பக்கம் புரண்டுபோன சம்ப வத்தை—பார்வைக்கு மறைந்து விட்ட நிகழ்ச்சியை— நினைத்துப் பார்க்கவே விருப்பமில்லை எனக்கு—வாழ் வின் ஆரம்ப காலத்தை விட்டு நான் வெகு வெ கு தொலைவுக்கு வந்து விட்டேன் இப்போது—இறுதி எல் லைக் கோட்டில் நிற்கிறேன். இன்று இந்த நிலைமையில் இவ் உலகத்தைத் திரும்பிப் பார்த்துப் பலனுண்டா?— **வீண் முயற்சி** ...."

"என் முயற்சிக்குத் தோல்வி கிடையாது மேரி!— உனக்காக அப்பீல் செய்யப் போகிறேன்—சிறந்த வழக் கறிஞரைக் கொண்டு எதிர் வழக்காடத் தீர்மானித்து விட் டேன்"

"என்பால் கருணை கிடைக்கு மென்று நம்புகிறீர் களா?"

"நம்பிக்கை தான் மேரி மனித இனத்தை இன்று வரை உயிர் வாழச் செய்திருக்கிறது"

''ஆனல் எனக்கென்னமோ நம்பிக்கையே இல்லை இதில்—மேலும் ஒரு விபச்சாரிக்காகப் பரிந்து பேசி வழக்காடினல் உங்கள் பிரபுத்துவத்திற்குக் களங்கம் பிறக்காதா...?கேவலமாக உலகம் பேசும் உங்களை! இழிவாக ஏசும் என்னையும்;ஒரு பிரபுவை மயக்கிக்கெடுத்து—கைக்குள் போட்டுக் கொண்டேன் என்று......''

''என்ன வேண்டுமானலும் பேசட்டும்—ஏசட்டும்—அதைப்பற்றி அக்கரையில்லை எனக்கு—உனக்காகச் சேவை செய்து செய்து என் பாவக்கறையைப் போக்கிக் கொள்ளப் போகிறேன் இனி—இதனலாவது எனக்கு மனச் சாந்தி கிட்டாதா......?''

''பிறகு உங்கள் விருப்பம்—விடுதலை கிடைக்கலாம் எனக்கு—ஆனல் வாழ்வு......?''

''ஏன் கிடைக்காது மேரி?—உன் விடுதலையோடு என் வருங்கால வாழ்க்கையும் ஒன்றி யிருக்கிறது மேரி''

**''பட்ட மரம் தளிர்க்காதே!—உதிர்ந்த மலர் துளிர்க்காதே!''**

''ஆனல் **கெட்டவர் திருந்த முடியும் நட்டமில்லாமல்!—** மேரி! நாமிருவரும்......!''

''ஒரு நாள் ஆடினேமே கூத்து!—அத்தோடு தீர்ந்தது அனைத்தும்......''

''இல்லை!—தீர வில்லை!—அது தொடர்கிறது மேலும்—இல்லையெனில் நான் ஏன் ஜூரியாக உன் வழக்கில் வந்து சேரவேண்டும்?''

''அதற்காக......?''

''நானே உன்னை......''

"ஐயய்யோ!—போதுமே உங்கள் பேச்சு!—ஏன் எனது பாழாய்ப் போன அழகு உங்கள் கண்களை இப்போதும் உறுத்துகிறதா?—இந்த வகையில் ஆண்கள் யாவரும் ஒரு குளத்து நண்டுகள் தான்......!—என்னிடம் வந்தவர்களில் யார் தான் இப்படிக் கூறவில்லை......?"

"அதெல்லாம் போதை மயக்கத்தில். இன்று—இதே நேரம்—நான் போதை வெறியில் புலம்ப வில்லை மேரி!—நான் செய்த தீமைக்குத் தக்க தண்டனை—பரிகாரம்,—உன்னை மணந்து கொள்வது தான்"

"மறுக்கிறேன் நான்—என்னை மறந்து விடுங்கள்—எனக்காக உங்கள் வாழ்வை அழித்துக் கொள்ளாதீர்கள்"

"அழித்துக் கொள்வதற்காக அல்ல—ஆக்கிக்கொள்வதற்காக......"

"இல்லவே இல்லை—நீங்கள் என்னை மறந்து விடத் தான் வேண்டும்"

இதைக் கூறும்பொழுது மேரி அழுதே விட்டாள்.

கண்ணீர் தாரை தாரையாக மாரிபோல் பொழிந்தது—"மறந்து விடத்தான் வேண்டும்—ஆமாம்" என்று மீண்டும் கூறிச் சுவரில் மோதினுள் மேரி—இக் காட்சியைக் கண்டவுடனே சேகர், தன்னிரு கரங்களாலும் முகத்தில் அறைந்துகொண்டு"வேண்டாம்!—மேரி வேண்டாம்!—இனி நீ இல்லாத வாழ்வு எனக்கு வேண்டாம்......" ஓலமிட்டான்.

அதற்கு மேல் அங்கே நிற்கமாட்டாமல் மேரியின் கால்கள் தடுமாறின—தனது சிறை அறையை நோக்கி ஓடோடிப் போனுள்.

கதவு தாழிடப் பட்டது. சிறைக் கம்பிகளினூடே சேகரைப் பார்த்தாள். சேகர் ஜெயிலர் அறையைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தான், தலையைத் தொங் கப் போட்டபடி.

விடுதலைக்காகப் பாடுபடப் போவதாகப்பேசினேம்-மணந்து கொள்ள மனமொப்புவதாகக் கூறினேம்—வாழ்வு தரப்போவதாக உறுதி அளித்தோம்—இப்படி யெல்லாம் எடுத்தோதியும் சிறிதளவு கூடத் தன் வாழ் வைச் செப்பனிட்டுக் கொள்ளச் சிந்தையில்லை அவளுக்கு என்று சினங் கொண்டானில்லை சேகர்—ஆச்சரியப்பட் டான், மேரி ஒரு அற்புதப் பெண் என்று—அது மட் டுமா......?

**மலர் வேண்டா மங்கை—மலை வாழை விரும்பாத மந்தி—பணத்தை வெறுக்கும் பாட்டாளி—''பாதாம் அல்வாவை'' மறுக் கும் பட்டினிப் பஞ்சை—பார்க்க முடியுமா பாரினில்?—பார்க்க நேரிட்டால் அதிசயத்தை மட்டுமா, அதிர்ச்சியையும் தானே உண் டாக்கும்!**

சுக வாழ்க்கை எல்லோருக்கும் சுலபமாய்க் கிடைக் கும் பொருளா?—வாழ்க்கை வேண்டு மென்பதற்காக உலகத்து மனிதர்கள் அத்தனை பேரும் எவ்வளவு இன் னல்களை அனுபவிக்கின்றனர்—நாள் பூராவும் உழைக் கின்றனர்—விலங்கினும் கேவலமாய் நடத்தப்படினும் நல்லது என்றே அலைகின்றனர்—**இந்நிலையில் சுண்டு விர லைக்கூட அசைக்காமல் வாழ்வு கிடைக்கும்போது, அதனை வேண் டாமென்று உதறித் தள்ளினல்......? ஆகவே ஆச்சரியத்தினல் மட்டுமல்ல, அதிர்ச்சியாலும் அயர்ந்து போனன் சேகர்.**

கால நிலை அவனுக்குத் துன்பமளித்தது — கரு மேகங்கள் அடிக்கடி அதனை மறைத்தன.

சிறையிலிருந்து புறப்பட்டவன் கால்போன திசையெல்லாம் நடந்து கொண்டிருக்கவில்லை—தன் பூர்வீகக் கிராமத்தில் போய்த் தங்கியிருந்தாலாவது மனத்துயரம் மாயாதா என்ற ஏக்கம் படர்ந்த முகத்தோடு நடந்தான்

நிலங்களில் குடியானவர்கள் களை பறித்துக்கொண்டிருந்தனர்.

வானம்பாடிகள் கீதம் இசைத்தவாறே பறந்து திரிந்தன—பசும்புல் தரையில் ஆடுமாடுகள் மேய்ந்தன.

ஆனல் இவற்றிற்கிடையில் ஏதோவொன்று அவனுக்கு அதிருப்தியை அளித்தது—அது என்னவென்று யோசித்தான்—சட்டென்று அவனது சிந்தனை வேறு திசையை நோக்கி மாறிற்று—மேரியைப் பற்றிய நினைவுச் சுழல் இப்போது திருப்பப் பட்டது குடியானவர்கள் மீது!

அந்தப் பரந்த பூமி அவனுக்குப் பாத்தியப்பட்டது-வியர்வை கொட்ட—இடுப்பு ஒடிய—உழைக்கிறார்கள் உழவர்கள்—ஆனல் அவர்கள் ஒரு வாய்ச் சோற்றுக்கு வீதிகளில் வேதனையோடு அலைகிறார்கள்—பாடுபடுவது குடியானவர்கள்—பலனை அனுபவிப்பது பிரபுக்கள்—இந்த ஏற்றத் தாழ்வு, ஏமாளி—எத்தன் முறைகள் அவன் மனதைக் குடைந்தன.

நாம் நிலப் பிரபு—இவர்கள் நமக்குச் சுகபோகவாழ்வைத்தேடித்தர வெயில்—மழை—பனி என்றே, பகல்—இரவு என்றே பாராமல் பாடுபடும் நில உழவர்கள்—**நாம் மகிழ்ச்சியில் மிதக்கிறேம்—அவர்களோ வறட்சியில் தவிக்கிறர்கள்—இது முறையா?—மனிதப் படைப்பில் ஏன் இந்தப் பேதம்?**

இப்படி யெல்லாம் "பொது வுடமை" வானில் சிறக டித்துப் பறந்தது அவனது **பகுத்தறிவு**—இருட்டுவதற்குள் ளாகத் தன் பூர்வீகக் கிராமத்தைஅடைந்தான்—பண்ணை முதலாளி கால்நடையாகவே தங்களது பட்டிக்காட்டிற்கு வந்து விட்டாரே என்று அதிசயித்தனர் கிராமவாசிகள்- தங்களது ஜமீன்தார் கால் நடையாக நடந்து வந்தி ருந்தது அவரைப் பற்றிப் பெருமிதமான எண்ணத்தை அவர்களிடையே எழுப்பியது—**சேகரை ஒரு சாதாரண மனி ராகக் கருதவில்லை இப்போது அவர்கள்**—எஜமானர்—ஜமீன் தார்—பண்ணை முதலாளி—என்பதையெல்லாம் தாண்டி **தேவப் பரம்பையில் சேர்த்து விட்டத்ாக எண்ணிப் பணிந்தனர்.**

பண்ணை மாளிகை முன்பு ஏராளமான உழவர்கள் குழுமிவிட்டனர். அவனையொரு வேடிக்கைப் பொருளாக நினைத்தனரோ என்னவோ? **தினமும் வைத்து விளையாடும் பொம்மைதான்; என்றாலும் அதைக் கொஞ்சிக் குலாவுவதில் குழந் தைகளுக்குக் குதூகலம் குறைந்தா விடுகிறது?**—தங்களது ஜமீன்தார் தான்—பார்த்துப் பழக்கப் பட்டவர் தான்— என்றாலும் மொய்த்து விட்டனர் அவனைச் சுற்றிலும். **குழந்தைகளைப்போல, எதுவுமறியாமல் இவர்கள் இருக்கவேண்டும் அப்பாவிகளாக என்று தானே சமுதாயம் விரும்புகிறது!**

எல்லோரையும் மறுநாட்காலையில் வருமாறு கேட் டுக் கொண்டு மாளிகைக்குள் போனான். பண்ணைக் குமாஸ்தா பணிவுடன் வரவேற்றான். உயர்தரமான உணவு வகைகளைத்தயாரிக்குமாறு சமையற்காரனை ஏவி னான் குமாஸ்தா.

தனக்கு எதுவும் தேவையில்லை என்றும்,பசி இல்லை என்றும் கூறிவிட்டு மாடிக்குப் போய் விட்டான் சேகர்.

கணக்குப் புத்தகங்களைச் சோதித்தான்.

விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்கள் இல்லாமல் இருப்பதையும்—பண்ணைக்குப் பாத்தியப்பட்ட நிலங்களே எங்கும் பரவிக் கிடப்பதையும்—கணக்குப் புள்ளி விவரங்கள் காட்டின.

ஜமீன்தாரை நம்பித்தான் குடியானவர்கள் பிழைத்து வருகிறார்கள் என்பதையும்—சற்றும் மீறி நடந்து விட்டால் நிலங்களைப் பறிமுதல் செய்து துரத்தி அடிக்கப்பட்டு விடுகிறார்கள் என்பதையும் அறிந்தான்.

எவ்வாறு பார்த்தாலும் ஜமீன் மாளிகைக்கும்—உழவனின் குடிலுக்கும்—எப்படிப்பட்ட உறவு நிலவியிருக்க முடியும் என்பதை நினைத்துப் பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது.

இந்த உறவு முழுக்கவும் வேதனைக் கயிற்றினால் பிணைக்கப் பட்டிருக்கிறதைப் புரிந்து கொண்டான்.

இதற்கொரு **மாற்றம் தேவை** என மனதாரத் தீர்மானித்தான்.

அன்றிரவு பூராவும் இரு பெரும் பிரச்சினைகளைப் பற்றி......?—ஒரு பிரச்சினையை ஏற்கனவே ஒருவாறு முடிவு கட்டிக் கொண்டிருந்தான்—அதுதான் மேரியை எவ்வாறேனும் விடுதலை பெறும்படி செய்து மணம் புரிந்து கொள்வது என்பது—இதில் எவ்வாறு செயல் புரிவது என்பதில் தான் அவனது யோசனை! மற்றொரு பிரச்சினை தான் அவனுக்குப் பெரிய தலை வேதனையாகத் தோன்றியது—தனது சொந்தச் சொத்து, நிலங்களாகப் பெருத்துக் கிடப்பதால் அவற்றைப் பாட்டாளிகளுக்குப் பகிர்ந்து கொடுத்து விடலாமா என்பதே அது.

மேரியோடு வெகு தூரத்திற்குப் போய் விடுவதாக வும்—அங்கே யிருந்து கொண்டு நிலங்களில் கிடைக்கும் வருமானத்தை வைத்துச் சுகமே வாழ்வதாகவும்-கற்பனே செய்து பார்த்தான். இது அவனுக்கு வெறுப்பையே தந்தது—வேதனையையே வளர்த்தது—இந்த மாதிரி வாழ் வதைப் பார்க்கிலும்......?—**உழைத்து உண்டு வாழ்வதுதான் நேர்மை!**

மேரிக்கும் எனக்கும் இவ்வளவு நிலங்கள் தேவை யில்லை—இதனுல் கிடைக்கும் வருமானமும் வேண்டாம்—பிறருடைய இரத்தத்தை உறிஞ்சிக் கொழுக்கும் நிலப் பிரபுத்துவமே கூடாது—**தனக்குள்ள நிலச்சுவான்தார் பட்டத்தை உதறித் தள்ளி விடுவதே மேல்**—என்று முடிவு கட்டினன்.

உழுபவர்களுக்கே நிலம் சொந்தம்—தனியுடைமைக் கொள்கையை முறியடித்தல் அவசியம்—இதற்கு வழி காட்டியாக விளங்கினுல் என்ன?—இப்படியொரு தீவிர **ஆவல் பிறந்தது!**

நடுநிசிக்கு அப்பால் தான், தூக்கத்தின் அரவணைப்பை அவனுல் பெற முடிந்தது. அளவுக்கு மிஞ்சிய சிந்தனை யோட்டத்தினுல் சோர்வு அதிகரிக்கத்தானே செய்யும். அப்புறம் தூக்கம், தன்னையுமறியாமல் வந்து விடுகிறதல்லவா......?

# 7

யாரைத்தான் பாருங்கள்—எவரைத்தான் கேளுங்கள்—எல்லாரும் பொதுமக்களின் நலனைப் பேணுகிறதாகவே பசப்புகிறார்கள்—பேசுகிறார்கள். சுய நலத்திற்குத் தான் இப்படி "**மக்கள் நலன்**" என்று பெயரிட்டிருக்கிறார்கள் போலும்!

மேரி தன்னுடன் அடைபட்டிருக்கும் கைதிகளை ஒவ்வொருவராக நினைத்துப் பார்த்தாள்—பொது ஜன அமைதியைக் குலைத்து அநியாயம் செய்தார்கள் என்று இவர்களெல்லாம் சிறையிடப் பட்டிருக்கிறார்கள்?

பணக்காரர்களும்—பதவி பீடத்தார்களும்—மக்களைச் சுரண்டுகிறார்கள் பகல் இரவு என்று பாராமல்—இந்தப் பகற் கொள்ளைக்கு இடையூறாக இருப்பவர்களைச் சிறையிலே தள்ளிப் பூட்டி விடுகிறார்கள்.

கள்ளச் சாராயம் காய்ச்சிய காரிகை—பங்களாச் சுவற்றைக் கடந்த பக்காத் திருடன்—இரகசியக் காகிதங்களை மறைத்து வைத்திருந்த பொதுவுடமைவாதி—மூட நம்பிக்கைகளைத் தகர்த்த மத சீர்திருத்தவாதி—ஆளவந்தாரைக் குறை கூறித்திரிந்த அரசியல்வாதி—இவர்களும் இன்னும் சமூகத்தில் நலிந்தோராக நடமாடும் அனைவருமே இடையூறாகத்தான் இருக்கின்றனர்—இவர்களைச் சிறையில் தள்ளினால் தான் சீமானாக வாழ முடியும்—சுரண்டிப் பெருக்க இயலும்—ஆகவே தான் ......?

நிரபராதிகளான மக்களைக் குறித்து அதிகாரிகளுக்குக் கவலையில்லை. பணம் படைத்தோரின் தயவு தான்

**பெரிது!** தங்கள் நலனுக்காக—பணத்தோட்டத்தின் பாது காப்புக்காக—எவ்வித **அநீதியையும்** செய்யத் தயாராக உள்ளனர். இம் முயற்சிக்கு அபாயம் விளைவிக்கக்கூடி யவர்களிட மிருந்து எப்படித் தப்புவது என்பது தான் இவர்களுடைய தீராத யோசனை—செயல்.

**"ஒரு நிரபராதியைத் தண்டிப்பதைவிடப் பத்துக் குற்றவாளி களைக்கூடத் தப்பிக்க வைத்துவிடலாம்—அது தவறல்ல"** என் பது ரஷ்யப் பழமொழி—ஆனால் **அபாயம் விளைவிக்கிற ஒரு வனிடம்** தங்கள் **வர்க்கம்** தப்புவதற்காகப் பத்து நிரபராதி களைத் தண்டித்தனர் **இக் கனதனவான்கள்!**

இந்தக் கருத்தோவியம் அவளது இதயத்தில் உதய மாகும்போது, நீதி—சட்டம்—கடவுள்—மதம்—என்பவை வெறும் வார்த்தைகளே என்று அவளுக்குப் பட்டது. **கேவலமான பேராசையையும் அக்கிரமங்களையும் மூடி மறைப்பதற் கான மந்திரங்களே நீதி—சட்டம்—கடவுள்—மதம்—முதலியவை.**

இல்லையெனில் தனக்கும்—தன்னுடன் வசித்த மற் றக் கைதிகளுக்கும்—ஏன் இந்தச் சிறை வாழ்வு என்று கருதினாள்.

சட்டப்படி குற்றமா என்பதை ஆராய்கிற நீதி—குற்றத்தின் மூல காரணம் எது?—தவறு செய்யுமாறு தூண்டிய ஆதி எது என்பதை ஏனோ கவனிக்க மறுக் கிறது!

அப்படிக் கவனிக்கத் தொடங்குமானால், வயிற்றுக்கு வழியின்றித் திருடியவன்—உயர்வு தாழ்வு பேதத்தை உடைத்தெறிய முயலும் பொதுவுடமைவாதி—மதத்தில் மாறுதல்காண விரும்பி **'மதம் மக்களுக்கு அபின்'** என்று சொல்மாரி பெய்த சீர்திருத்தவாதி—ஆட்சியாளர்களின்

ஊழல்களை விளம்பரப் படுத்திய அரசியல்வாதி—இவர்களெல்லாம் தண்டனைக்குரியவர்கள் அல்லவே!

மேரி ஏன் விபச்சாரியானாள்?—வாழ்வதற்கு வேறு வழியில்லாத காரணத்தால். அவளுக்கு எவனாவது ஒரு வாலிபன் துணிந்து முன் வந்து வாழ்வளித்திருந்தால் விபச்சாரியாவாளா?

**"வாழ்வு தாருங்கள்—வாழ்வு தாருங்கள்"** என்று தினம் தினம் கண்ணீர் சிந்தி—மடியேந்தி வாழ்வுப் பிச்சை கேட்ட அதே மேரி தான், இன்று சேகர் வாழ்வு தருகிறேன் என முன் வந்தபிறகும் வேண்டாமென வெறுக்கிறாள்—மணவிழாவை மறுக்கிறாள்.

இது ஏனோ......?

முற்றும் துறந்து விட்டாளா?—பற்று நீங்கிய பரதேசி நிலையை எய்தி விட்டாளா?—ஒருவேளை மீண்டுமொரு முறை சேகரை நம்பிப் பின்பற்றி நடக்கப் பயப் படுகிறாளோ?

இதற்கு விடைகாண அவளாலேயே முடியாத போது......?

தண்ணீர் தண்ணீரெனத் தவித்தவள்—இப்போது வேறுமட்டும் பால் கிடைக்கிறது—வேண்டாம் என்று தலையை அசைக்கிறாளே இதற்கு வேறுவித காரணம் ஏதாவது இருக்குமோ......!

இன்றோடு சேகர் ஏழு முறைகள் அவளைச் சந்தித்து உரையாடி விட்டான். சிறைச் சந்திப்புத்தான். ஆனால் மனம் விட்டுப் பேசும் வாய்ப்பினை வருவித்துக் கொண்டான். இதற்குப் பேருதவியாகத் துணை நின்றது அவனது **பணபலம்**. எனினும் இதுவரையிலும் மேரி இணக்

கம் தரவில்லை. வேதாந்த வியாக்கியானமாக வசனம் பேசப்படுகிறதே தவிர விரகதாபம்—வேட்கை—இவற்றைக் குறைக்கும் வசனமாக எதுவும் வெளிவரக் காணோம்.

ஆரம்பத்தில் விடுதலையே வேண்டாமென வெறுத்த அவள், ஏழுமுறைகள் சந்தித்ததன் பின்பு விடுதலையின் மீது விருப்பம் கொண்டாள். ஆகவே விடுதலையானால் விவாகம் புரிந்து கொள்வது கடினமல்ல எனக் கருதினான் போலும் சேகர்.

தன்னுடன் வாழ்ந்த கைதிகள் பலரின் மனக்குறைகளைச் சேகரிடம் எடுத்துக் கூறினாளே ஒழிய தன் குறையைத் தெரிவித்தாளில்லை. பிற கைதிகளுக்குச் சலுகைகள் வேண்டிச் சிபார்சு செய்யுமாறு—முயற்சி எடுக்குமாறு—சேகரிடம் மன்றாடினாள்.

ஆனால் தனக்காகத் துளி அளவுகூடத் துணைபுரியக் கேட்டாளில்லை.

அன்று சூரியனின் ஒளிக்கதிரே தென்படாதவாறு மேகங்கள் எங்கும் வியாபித்திருந்தன. மேரியின் மனமும் "**மூடம்**" போட்டாற்போல மயங்கிக் கிடந்தது.

அவளது வழக்கின் அப்பீல் பட்டணத்தில் நடைபெறப் போகிறது அன்றைக்கு—"இந்நேரம் அங்கே வழக்கு நடந்து கொண்டிருக்கும்—ஒருவேளை விடுதலை கிடைத்தால், சேகர் என்னைச் சூழ்ந்து கொள்வாரே—அப்புறம் அவரது அணைப்பினின்று விடுபட இயலாது—அதற்காக விடுதலை வேண்டாமா?—வேண்டாமென்றால் தீவுக்கல்லவா அனுப்பி விடுவார்கள்—அங்கே ஆயுள் முழுக்க அவஸ்தைப் படுவதா?" இவ்வாறு இரண்டுங்

கெட்டான் நிலையில் மனப்போர் நிகழ்ந்தது—அந்த மனப்போர் அவளை மௌன நிலையில் ஆழ்த்தி விட்டது.

நேற்று முன்தினம் அப்பீல் நடக்கப் போவது பற்றியும்—வாதப் பிரதிவாதங்களிலும்—வழக்குரைப்பதிலும்—தான் அமர்த்தியுள்ள வழக்கறிஞர் எத்துணை நிபுணர் என்பதன் விவரங்களைக் குறித்து சேகர் பேசியதைப் பற்றியும்—நினைத்தாள் மேரி.

விடுதலையினால் வரவிருக்கும் மலர்ச்சியின் முறுவல் அவளுடைய முக விதானத்தில் மோகனக் கதைகளைப் பேசாமல் இருந்ததா?—ஆனால் "மோகனக்கதை"யிலுள்ள **மூலமந்திரம்**—அவள் அளவில் **மரித்து மறைந்தது மரத்துப் போனது தானே!**—எத்தனை எத்தனையோபேர் எடுத்து மீட்டிய **வீணையின் தந்தி**—பலமாகவோ—விறைப்பாகவோ இருப்பதில்லை—இனியும் இனிய **நாதத்தை** எழுப்புவதற்கு இயலுமா?

மேரியும் பொருள் தந்த பூமான்களுக் கெல்லாம் போகப் பொருளாகப் பயன் பட்டவள் தானே!

இந்த நினைப்பெல்லாம் கசப்பாகவே தோன்றியது அவளுக்கு.

"**அப்பீல் என்ன வாயிற்று?**" என்பதற்குப் பதில் அறிவதில் தான் ஒரே துடி துடிப்பு அந்தக் கூண்டுப் பறவைக்கு!

# 8

கெட்ட எண்ணங்களுக்கு மனதில் இடமளித்தவன் மீளமுடியாது என்பது சரியல்ல—மீள்வது கடினம் என்பதுதான் வாதமாக இருக்கலாம்.

அவைகளுக்கு விடை கொடுத்து அனுப்பிவிடப் பிராயச்சித்தங்கள் உண்டு. ஆனால் அவற்றின் பிறப்பிடமாகிய மனத்திற்குச் சாந்தி கிட்டுமா? கட்டுக் கடங்காத முறையில் இவை மனிதனைக் கெட்ட வழிகளில் இழுத்துச் செல்கிறது. இதனால் மேலும் மேலும் தவறான பாதையிலேதான் மனிதன் பழக்கப் படுத்தப் படுகிறான்.

மேரியை மணந்தால் பிராயச்சித்தம் செய்துகொண்டதோடு மன அமைதியும் கிட்டுமெனக் கருதினான் சேகர்

ஆனால் நிலைமை நேருக்கு மாறாக நிலை கெட்டவுடனே மீட்சி பெற்ற கெட்ட எண்ணங்களிலேயே மீண்டும் அவன் சிந்தனை கவியத் தொடங்கியது.

"மேரியை மணப்பது—நிலங்களைத் துறப்பது—நிறைவேற முடியாத கனவுகள்—அர்த்த மற்றவை" என்று தனக்குள்ளேயே ஒரு துர்எண்ணம் அலறுவதை உணர்ந்தான்—அதனின்று மீள அவன் அல்லற்பட்டான்.

கெட்ட சிந்தனையையும்—செயல் திட்டங்களையும் எழ முடியாத சவக்குழியில் தள்ளி மூடினாலன்றி, அவன் அமைதி காண்பது ஆகாத காரியமாகப் பட்டது. தவறை உணர்ந்து திருந்திய தூய்மையாளனாகவே வாழ்ந்து மடிய வேண்டும் என்றொரு திட சங்கல்பம் அவனுக்கு. ஆனால்

திட சங்கல்பத்தைத் தொலைத்தெறிவதற்கு ஏற்றவாறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவே என்று, மனம் சோர்ந்தான்.

அவன் மேரிக்காக எவ்வளவு சிரமப் பட்டான். செல்வத்தை வாரி இறைத்தான் கணக்குப் பாராமல். அப்பீலுக்கு வழக்கைக் கொண்டு வருவதற்காக எத்தனையோ முயற்சிகள் எடுத்தான். பட்டணத்திலேயே முகாமிட்டு அறிமுகமானவர்கள் அத்தனை பேர்களின் தயவையும் நாடி அப்பீலுக்கு ஆவன செய்தான்.

**"நிமிடத்திற்கு இவ்வளவு பீஸ்"** என்று நிர்ணயித்துத் தொழில் நடத்தும் நிபுணத்துவம் மிக்க வக்கீலை நியமித்தான்.

"விபச்சாரி யொருத்திக்காக வழக்காட வந்திருக்கிறானே விவஸ்தை கெட்டவன் — எப்போதோ அவளைக் கெடுத்தானும்—அதற்காகப் பிராயச்சித்தம் பண்ணிக் கொள்கிறானும் பிழைக்கத் தெரியாத பரம முட்டாள் — இந்த உலகம் ரொம்ப யோக்கியப் பொறுப்புள்ளது என்று தப்புக் கணக்குப் போட்டிருக்கிறான்—அவ்வளவு தான்—யார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்று கண்களை மூடிக்கொண்டு தன் காரியத்தைப் பார்ப்பானா?—பரோபகாரம் செய்கிறானும்!—" இவை மாத்திரமா? — இன்னும் எத்தனையோ கேலிச் சொற்கள்—நையாண்டி வார்த்தைகள் கிளம்பின.

அவனது இரக்கம் மிகுந்த மனத்தை இச்சொல்லடிகள் துளைத்தன—துன்பப்படுத்தின!

இருப்பினும் முயன்றான் — அப்பீலும் மேல் கோர்ட்டில் விசாரணைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் எதிர்பாரா நிலை ஏற்பட்டுவிட்டது—என்றைக்கும் மாறாத ஏக்கத்திற்கு விளைச்சலாகி விட்டது.

அப்பீல் தோற்று விட்டது—ஜூரிகளின் கவனக்குறைவினால் விளைந்த கொடுமைக்குப் பரிகாரம் அப்பீல் கிடைக்காது போய்விட்டது—அப்பீலுக்குப் போதிய காரணமில்லை என்று மேல் கோர்ட் தீர்ப்பளித்து விட்டது—வழக்கின் தாரதம்யங்களில் தலையிடப் போதிய அவசியமில்லை என்று தெரிவித்து விட்டது.

கோர்ட்டை விட்டு வெளியேறியவன் நிதானம் தவறிய நிலையில்தான் நடந்தான். பாதைவழி நேராக இருப்பினும், அது கோணலாகவே பட்டது அவனுக்கு. நேர்மையான வாழ்வுக்கு நீதி நாடிப்போன இடத்தில் நேர்மாறான நிகழ்ச்சி நடைபெறுமானால்......?—இனி அவனது வாழ்வுப்பாதை பூராவுமே கோணல் மாணலாகவேதான் போய்விடுமா?

மேரியின் நிலைமையை நினைக்கவே நெஞ்சு நுணுக்குற்றது. என்ன வானாலும் அவளுடனேயே செல்ல வேண்டுமென்ற தீர்மானமும் நினைவுக்கு வந்தது. அதே நினைவோடு நினைவாக விவசாயிகளுக்கு நிலங்களைப் பகிர்ந்தளிப்பதாகத் தனது கிராமத்திலே பேசி விட்டு வந்த காட்சி தோற்றமளித்தது.

அடுத்த விநாடி **'எலிசபெத்தின்'** எழில் வதனம் காட்சி தந்தது. "தங்களை மறுபடியும் எப்போது பார்க்கப்

போகிறேனே?'' என்று கூறி அவள் விட்ட பெரு மூச்சும்—பார்த்த பார்வையும் அதே ரூபமாக அவன் முன் தோன்றின. அவள் நேரிலேயே வந்து சிரித்து மயக்குவது போல இருந்தது. அவனும் பதிலுக்குச் சிரிக்கக் கூடச் செய்தான் இப்போது.

“நான் தீவுக்கு மேரியுடன் போவது சரியா?—நிலங்களை விட்டு விடுவது பொருத்தம் தானா?''—என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். நிச்சயமான பதில் நெஞ்சத்திலிருந்து கிளம்பவில்லை. எல்லாம் குழப்பமாக இருந்தது. தன்னுடைய பழைய மனோ நிலையை ஞாபகப் படுத்திக்கொண்டான். மேலும் குழப்பமாகவே இருந்தது. ஆனால் அந்த மனோ நிலைக்கு முன்பிருந்த வேகம் இல்லை. அமிழ்ந்த நிலையில் அவனை ஆட்கொண்டு விட்டதோ?

உடனே ஊருக்குப் புறப்பட்டுவிட வேண்டுமெனத் தீர்மானித்துத் துரிதமாகவே கிளம்பினான்.

அப்பீலில் வழக்குத் தோற்று விட்டது என்ற துக்கச் செய்தியை மேரிக்கு எப்படி அறிவிப்பது?—ஆவலுடன் எதிர்நோக்கும் அவளுக்கு இந்த அநியாயச் செய்தி அதிர்ச்சியை உண்டாக்குமே!

அவனது மனம் தடுமாற்றுற்று...நடையும் தடுமாறிற்று.

சென்ட்ரல் ஜெயில் வாசலைக் கடந்தான்—நடந்தான்.

தனது செல்வாக்கைப் பிரயோகித்து—பணத்தைச் செலவிட்டு மேரிக்குச் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில்

நர்சாகப் பணியாற்ற ஏற்பாடு செய்து விட்டுப்போயிருந் தான். அதிகாரிகளும் கடினமான சிறைத் தொழில்களில் மேரியை ஈடு படுத்தாமல் சேகரின் வேண்டுகோளுக் கிணங்க இவ் எளிதான வேலையில் ஈடுபடுத்தினர்.

தீவில் கைதிகளுக் கிடையே வாழ்க்கையை நடத்து வது மாதிரிக் கற்பனை செய்து கொண்டான்.

**"ஒரு ஆட்சி அக்கிரமமாக யாரையும் கைதி செய்யுமானல்- அத்தகைய ஆட்சியின் கீழ் யோக்கியமானவர்கள் இருக்கவேண்டிய இடம் சிறைக்கூடமே—வெளி உலகமல்ல"**—என்று **"தாரு"** என்னும் ஒரு அமெரிக்க எழுத்தாளர் எழுதியிருப்பதை அவன் ஞாபகப் படுத்திக் கொண்டான்.

இச்சமயம் மேரியுடன் தீவுக்குப் போய் விடுவது என்ற தீர்மானம் மேலும் ஊர்ஜிதமாயிற்று—**"ஆம்!— நம் நாட்டில் யோக்கியவான் எவனும் இருக்க வேண்டிய இடம் சிறை தான்"**-அவனது வாய் முணு முணுத்தது இவ்வாறு!

சேகர் சிறை ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான்— அங்கே மேரியைக் காணவில்லை!

காவற்காரனிடம் விசாரித்தான்.

"அவளை மறுபடியும் சிறையிலேயே அடைத்து விட்டார்கள்" என்ருன் வார்டர்—"ஏன்...?" என்று பதறிப்போய்க் கேட்டான் சேகர்.

இதற்குக் கிடைத்த மறுமொழி அவனுடைய இத யத்தை நொறுக்கி எறிந்தது.

"அதுவா...?—பெண்கள் சுபாவமே தெரியாத அப்பாவியா இருக்கீங்களே!—சின்ன டாக்டரோடு மேரி

தொடர்பு வச்சிக்கிட்டா-அதைக் கண்டு பிடிச்சு அவளைச் சிறை அறைக்கே அனுப்பிட்டாரு பெரிய டாக்டரு.''

இதுதான் காவற்காரன்—தந்த பதில்.

இதென்ன தேமா பலாவா? தீஞ்சுவைக் கனியா?-தித்திக்கவா செய்யும்?-திகைப்போடு கூடத் துயரத்தின் கூப்பாடு வேறு மன அரங்கிலே!—"திடு திப்பென்று தன் இருதயம் இப்படியே நின்று விடக்கூடாதா?'' என்றொரு பரிதாப நினைப்பு ஊசலாடியது.

அவள் மனம் பண்பட்டு வருவதாகக் கருதியிருந்த சேகருக்கு இச்செய்தி படுதுன்பம் தந்து பாடாய்ப் படுத்தியது.

"என்னுடைய தியாகத்தை ஏற்க மறுத்தாள்-திட்டினாள்—கண்ணீர் வடித்தாள் கலியாணமே வேண்டாமென்று—ஆனால் இப்போது எவ்வளவு இழிவாக நடந்திருக்கிறாள்—ஊளுத்துப்போன விபச்சார உறவிலே அவள் ஊறிப் போன மட்டைதானா?—மாறுதல் என்பது விபச்சாரத்திற்கு ஒத்து வராத பண்பா?—தேறுதல் கொண்டு வழியை மாற்றிக் கொள்வது இதிலில்லை என்பதுதான் பழக்கமா?—வருந்துதல் என்ற உயரிய குணம் இங்கு கிடையாது என்பதே உண்மையா?''...இவ்வாறெல்லாம் எண்ணி மனம் புகைந்தான்.

"இனிச் செய்ய வேண்டியது என்ன—இன்னமும் அவளுக்குக் கட்டுப்படுவதா?...இல்லை கட்டிக் கொண்டு தான் அழுவதா?'' என்ற கேள்விகள் பிறந்தன.

"அவளுடைய இந்தச் செய்கை என்னைத் தூரப்போ என்று துரத்தி அடிக்கிறதே'', என்று தனக்குள் புலம்பிக் கொண்டான்.

"அவளைக் கைவிட்டு விடாதே—அது பாவம்—அவளைக் கரைசேர்க்க நீ தவறினல், உன்னை நீயே தீராத தண்டனைக்கு ஆளாக்குவதற்கு ஒப்பாகும்"—இப்படி மனச்சாட்சி இடித்துரைத்தது அவனுக்கு.

"அவளென்ன, பச்சைக் குழந்தையா?—பகுத்துணர்ந்து நடக்கும் பக்குவம் பெருதவள் என்று பகர முடியுமா?—வீழ்ந்து கெட்டால் விவேகமே யில்லை என்ருகி விடுமா?—தினவும்—அடமும்—கொண்ட இவர்கள் உலகில் இருப்பதே நியாயமா?"—இக்கேள்வி எதிர்பாராமல் சிந்தனையின் எங்கோ ஒரு மூலையிலிருந்து கிளம்பியது.

"புதிதாக அவள் எவ்விதத் தவறும் செய்து விடவில்லையே!—ஆயிரத்தில் இதுவுமொன்று—அத்தனையும் மறந்துதானே அவளை அரவணைத்துக் கொள்ளத் தீர்மானித்தேன்—இச்செய்கையும் அந்தக் கணக்கில் ஒரு லக்கம் தானே!—இதனல் என் தீர்மானத்தை மாற்ற முடியாது—அவள் எப்படி வேண்டுமானலும் செய்யட்டும்—உண்மைக்கு **ஊருக** நடக்கமாட்டேன்—மாருக எண்ணமாட்டேன்"—இது அவனே தன் சிந்தனைக்கு—மனச்சாட்சிக்கு—அளித்த சீரான பதில். மறுவிஞடி அவனது நடையில் வேகம் விரைந்தது!

இந்தத் தடவை முன் போல் அவனுக்கு "சந்திப்பு அனுமதி" சுலபமாகக் கிடைக்கவில்லை, சிறை அதிகாரியிடம்.

பழைய அதிகாரி மாற்றப்பட்டு ஒரு சிடுமூஞ்சிக்காரன் அதிகாரியாக வந்திருந்தான். அவனே கண்டிப்பான குரலில் கைதிகளை இன்ன இன்ன கிழமைகளில்

தான் பார்க்கலாம் என்று விதிகளை விளக்கம் செய்தான்.

இதுவும் சரிதானே!—இனி என்ன செய்வதாம்!

எத்தனையோ செயல்களை மலையத்தனை துணிவுடன்—தினையளவும் சிரமம் என்று சிறிதும் சிந்திக்காமல்—செயல் கொண்டு சாதித்திருக்கிறானே சேகர்—அவனா அதிகாரியின் "**கண்டிப்புக் குரல்**" கேட்டுக் கதி கலங்குவான்!—அதிகாரிகளிடமிருந்து கரடு முரடான குரல் வருகிற தெனில், **அது அன்பளிப்புக் கோரிக்கையை உள்ளடக்கியது** தான் என்பதை உணர்ந்து கொள்ளாதவனல்லவே அவன்!—சிறிது நேரம் நயமான பேச்சு—அப்புறம் அன்பளிப்புக் கைமாற்று!-இதற்குப் பின்பும் மேரியின், சிறைக் கதவு சாத்தப் பட்டிருக்குமா என்ன?

வார்டர் விரைந்தான்-வந்தான் மேரியைக் கூட்டிக் கொண்டு.

நிமிர்ந்து பாராமலேயே சில நிமிட நேரம் இருவரும் நிலைத்து நின்றனர். சேகரின் முகம் சற்றுக் கடுமையாகவே இருந்தது. இதைக் கண்டவுடன் மேரியின் கலவரம் நிறைந்த முகம் மேலும் சிவந்து விட்டது. அவள் சடக்கென்று தலை குனிந்தாள். இந்தக் குழப்பம் ஆஸ்பத்திரிக் காவற்காரன் சொன்ன விஷயத்தை உறுதிப் படுத்துவதாகக் காட்டியது சேகருக்கு. அவளை ஏறிட்டுப் பார்க்கவே அவனுக்கு வெறுப்பாக இருந்தது.

அவளை நிமிர்ந்து பார்க்காமலேயே, "உனக்கு, ஒரு துயரமான செய்தியைக்கொண்டு வந்திருக்கிறேன்," என்று துவங்கினான் சேகர்.

"துயரமான செய்தியைக் கேட்க நேரிடும்போது தைரியமாயிருக்க ஏற்கனவே தயார் படுத்தியிருக்கிறேன் என்னை—மேலும் எனக்கு நிறையப் பழக்கமும் இருக்கிறது!"

"உன் அப்பீலை மேல் கோர்ட் தள்ளுபடி செய்து விட்டது"

"எதிர்பார்த்தது தான்—நிரபராதிகளின் அப்பீல்களெல்லாம் இப்படித்தான் ஆவது வழக்கம்".

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?" இடைமறித்தவன், ஏறிட்டுப் பார்த்தான் அவளை.

அவள் தம் கயற்கண் தேக்கத்திலே நீர் சுரந்திருந்தது—வழிந்தோடும் நிலையில் தவங்கி நின்றது.

ஆனாலும் இக்காட்சி அவனது **பரபரப்பைத் தணிக்கவில்லை!—**

**புதிதான அருவருப்பு—புண்ணான கடுகடுப்பு** முளைத்தது அவனது மூளையின் திடல் வெளியிலே—என்றாலும் கூட ஏனோ அனுதாபப் பட்டான்—!—விடுதலை கிடைக்கும், வெள்யுலகு காணலாம் என்று ஆவலோடு இருந்த அபலைக்கு அப்பீல் தள்ளுபடியாகி விட்டதே என்றதால், அனுதாபம் அறிவிப்பது அவசியம் என்று அவன் நினைத்தான் போலும்!

"மேரி! அப்பீலின் முடிவு என்னை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டது", என்றான்.

"ஆனந்தப்பட வில்லை நான்—ஆனால் அதற்காகத் துயரப்படவுமில்லை!—உம்!—அது போகட்டும்-என்னைத்

தேடி ஆஸ்பத்திரிக்குத் தானே முதலில் போனீர்கள்—அங்கே……?"

"அதனால் என்ன?……அது உன்னுடைய சொந்த விவகாரம்" என்று சடாரென்று பதிலளித்தான் சேகர் — இப்படியொரு பேச்சை—எதிர்தரப்பில் வெடிக்க வேண்டிய சுழற்பொறியை—ஏறுக்கு மாறான பதில் மொழியை—இவன் ஏன் கடைப்பிடித்தான்?—தணிந்திருந்த அவனுடைய உணர்ச்சி புது சக்தியுடன் வெளிப் பட்டு விட்டதா?

"உயர்ந்த—உன்னதமான-குடும்பங்களில் உதித்த எத்தனையோ அழகுமணிகள்—அல்லிமலர் யுவதிகள்—சிறப்புடன் உன்னை மணக்க முன் வருகிறார்களே!—அவர்களை யெல்லாம் உதவாதென உதறித் தள்ளி விட்டுக் கேவலம் ஒரு விபச்சாரியிடம்-உன் தூய்மையான தியாகத்தைத் தெரிந்து கொள்ளாத ஒரு தாசியிடம்—இப்படித் தாசானு தாசனாகத் தவம் கிடக்கிறாயே!-தலைக் கிறுக்கினால் தடங்கூடத் தெரியவில்லையா?—தவறான பாதையைக் காட்டும் தோழமையோடு வழித்துணை சேராதே!—அது தவறு"—என்று ஏதோவொரு சக்தி அவன் மனத்தில் குரோதத்தை மூட்டி விட்டது.

இனி என்ன?—பேச்சை வேறு பக்கம் திருப்பினான்.

"மேரி!—இந்த மனுவில் கையெழுத்துப் போடு—இது கருணைமனு—ஜனாதிபதிக்கு அனுப்பப் போகிறேன்—கருணை கிடைக்கிறதா என்று பார்ப்போம்", என்று கூறியவாறு மனுவை எடுத்துப் பிரித்தான். கையில் வாங்கியவள் கண்களைத் துடைத்துக் கொண்டு,

"எந்த இடத்தில் போடவேண்டும்?" என்று கேட்டாள் வெறும் பார்வையாக மனுவைப் படித்துக் கொண்டே.

அவன் அவளுக்குப் பின்புறமாக நின்று கொண்டு மனுவில் கையெழுத்துப் போடவேண்டிய இடத்தைச் சுட்டிக் காட்டினன்.

அவள் கையெழுத் 'திட்டாள் அவன் கொடுத்த பேனவினல்—விரலில் பட்டுவிட்ட மசியைப் புடவையில் துடைத்துக் கொண்டாள்.

அவளது பின்னழகை—பிரேமை வடிவமைப்பை—**பின்புறம்** நின்றவாறு அள்ளிப் பருகினன்—அனுபவித்துப் பொருமினன்—

அப்போது அவன் உள்ளத்துக்குள் நல்ல எண்ணங்களும்—கெட்ட எண்ணங்களும் போராடின. இறுதியில் வெற்றி உணர்ச்சியே தலைதூக்கிற்று.

"இப்போது மேரிமீது அசூசைப்படுவது அபத்தமாகும்—இதில் நானே குற்றவாளி"—என்று முடிவு கட்டினன்—இரக்கப் பட்டான் அவள்மீது.

"மேரி!—இப்போது நீ ஏதாவது முடிவுக்கு வந்திருக்கிருயா?"

"இல்லை சேகர்!—முடிவையே நான் விரும்பவில்லை!"

"ஆனல் நான் முடிவு செய்தபடியே நடக்கத்தீர்மானித்து விட்டேன்—உன்னை எங்கெங்கு அழைத்துச் செல்கிருர்களோ, அங்கெல்லாம் நானும் வரத்தான் போகிறேன்."

"இதனல் பயன் என்ன?—இதிலிருக்கும் அனர்த்தங்களை எண்ணிப் பாராமல் அவசர முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்—உங்கள் உள்ளத்துப் போக்கை மாற்றிக் கொள்ளும்படி எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன்—நீங்களோ கேட்பதாகவே இல்லை—பிறகு உங்கள் விருப்பம்—ஆனல் ஒன்றை மட்டும் மறவாதீர்கள்—சந்தேகம் ஆடவரின் இரத்தத்தோடு கலந்துவிட்ட விஷக்கிருமி—என்னை நம்பி ஒரு ஆடவர் பின்பற்றி வருவது வெற்றியைத் தராது."

"சந்தேகம் உன்னளவில் சக்தியற்ற நஞ்சு!—நீ போகிற இடமெல்லாம் சேகர் நிழலாகப்பின் தொடரத் தான் செய்வான்."

"எனக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது".

"சரி! நான் வருகிறேன் மேரி" என்று கூறியபடி விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டான் சேகர்.

ஓர் உன்னத ஸ்தானத்தை—உலகத்தின் உச்சியை—எட்டிப் பிடித்து விட்ட பெருமிதத்தில் நிமிர்ந்து நடந்தான்—எவரையும் லட்சியம் பண்ணமல் விரைவாகச் சென்றன்.

சேகர் சிறையிலிருந்து வந்தவுடன் நேராக வீட்டிற்குத்தான் போனன்.

அங்கே 'ஜான்' முன் ஹாலில் அமர்ந்திருந்தான். வார்த்தைகளால் விவரிக்க முடியாத கருத்துக்களை இருவருடைய கண்களும் பேசின.

சேகரின் பார்வையிலே கனவு—ஜானின் பார்வையிலே கண்டனம்!—இருவரும் சிறிதுநேரம் மாறி

மாறிப் பார்த்துக் கொண்டனர்—அப்புறம் போலி வார்த்தைகள் வெளிவந்தன — ஜான் தான் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

"மேரியைத் தொடர்ந்து நீயும் போகப் போகிருயாமே?"

"ஆமாம்!—ஏன் போகக் கூடாதா?—மேரி என்ன பயங்கரப் புலியா, பின்பற்றிப் போனல் பாதகம் தந்து விட?"

"பாதகமே தான். விபச்சார வாழ்க்கை நடத்தியவளோடு நீ போவது வெட்கக் கேடு!—நீ அவளைச் சீர் திருத்த முடியாது"

"அவளைச் சீர்திருத்த விரும்பவில்லை நான்—என்னையே தான் சீர்திருத்திக் கொள்ள விரும்புகிறேன்."

"அதற்கு வேறு வழியே கிடையாதா?"

"கிடையாது—மேரியை மணப்பதே அதற்குரிய மகத்தான மார்க்கம்-நான் உருவாக்கப் போகிற உலகத்திற்கு இது தேவைப் படுகிறது—வாலிபர் உலகத்திற்கு வழி காட்டியாக விளங்க விரும்புகிறேன்."

"இதனல்இன்பம்—மகிழ்ச்சி—எதுவுமே கிட்டாது".

"எனக்கு இன்பமும்—மகிழ்ச்சியும் முக்கியமல்ல—மறுமலர்ச்சி வாழ்க்கை".

"தெரிகிறது உன் திட்டம்—ஆனல் வாழ்க்கைக்கு ஏற்ற பாத்திரமல்ல அவள்—வீணுக வாழ்க்கை விரயம் பண்ணிக் கொள்ளாதே— அவளுக்கு இருதய மிருந்தால், நிச்சயமாக உன்னைத் தன்னுடன் வர அனுமதிக்க மாட்டாள்".

"அவள் அனுமதிக்கவில்லை என்பது உண்மை தான்—ஆனால் அவளுக்குத் தீங்கு இழைத்து விட்டவன் நான்—அதனால் சமுதாயச் சாக்கடையிலே உழன்றுள்-புரண்டாள்—கொலைகாரி என்றும் குற்றம் சாட்டப் பட்டாள்—இதற்கு நானல்லவா பொறுப்பாளி!—நான் புரிந்த இந்தக் குற்றத்திற்குக் கோர்ட் சட்டம் தண்டனை விதிக்காது—ஆகவே அதற்குரிய தண்டனையை வரு வித்துக் கொண்டேன்."

"அவளுடன் நீ தீவுக்குச் செல்ல முடியுமா?"

"போக முடியுமே!—கைதிகளை மட்டும் சர்க்கார் தீவுக்கு அனுப்புகிறார்கள் என்றாலும், தானே விரும்பிப் போகிறவர்களைத் தடுப்பதில்லை".

"முடிவாகக் கேட்கிறேன்—உன் கருத்துத் தான் என்ன?"

"என் கருத்து இதுதான்—**குற்றம் செய்தவன் நான்**—தீவுக்கு அவளுடன் சென்று தண்டனை அனுபவித்துக் கொள்வதின் மூலம் ஆத்ம திருப்தி அடையப் போகிறேன்."

"முட்டாள் தனமான முடிவு இது—சமூகம் உன் செயலைச் சரியென்று வரவேற்கப் போவதில்லை".

"எனக்குத் தெரியுமே அது!—**சமூகம் இப்படிப்பட்ட** சீர்திருத்தச் செயல்களைச் சரி யென்று ஏற்காது—திருடாதே என்று உபதேசம் செய்கிற சமூகமும்—சர்க்காரும்—தினசரியும் திருடித்தானே பிழைக்கிறது. கொதிப்புடன் பாடுபடுகிற தொழிலாளிக்குக் குறைந்த கூலி கொடுக்கிறான் முதலாளி—உழைப்புக்கேற்ற ஊதியம் தராமல் தொழிலாளியின் உடல் உழைப்பைத்

திருடுகிறுன் முதலாளி—மனிதன் உலகில் பிறந்தான்—வாழ்கிறுன் என்ற குற்றத்திற்காகச் சர்க்கார் தன் அதிகாரிகள் மூலம் வரி போட்டு நிரந்தரமாகத் திருடிக்கொண்டே இருக்கிறது—சமூகத்தின் உபதேசத்திற்கும் நடைமுறைச் செயலுக்கும் ஒரு சிறிதும் சம்பந்தம் கிடையாது—பேச்சு ஒன்று—செயல் மற்றென்று—இப்படிப்பட்ட சமூகத்தை நான் கிஞ்சிற்றும் மதிக்கப்போவதில்லை—ஜான்!—இன்னெரு செய்தியுமிருக்கிறது—சொல்லி விடுகிறேன்—எனது நிலங்கள் பூராவையும் உழவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன்"

"உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?-பூர்வீகச் சொத்தைப் பாழாக்கி விடப்போகிறுயா?"

"எது பூர்வீகம்?—ஏழைகள் ஏமாந்த காலத்தில்—இடர் பட்ட நேரத்தில்—இயலாத நாளையில்—என் மூதாதையர் திருடியது என்று கூறு--ஜான்!—உழவர்களுக்கு உரிமையாக இருக்க வேண்டிய நிலங்களை நாம் அபகரித்துக் கொண்டோம்—அதே நிலத்தில் ஏழையொருவன் சுள்ளி பொறுக்கினுல், அவனுக்குத் திருடன் என்று பெயர் சூட்டிச் சிறையிலே தள்ளுகிறோம்—இதில் யார் திருடன்?—முதல் திருடன்—எவன்?—ஆதியில் அபகரித்தவன் பங்களாவாசியாக வாழ்வதால் திருடனில்லையா?—அடுப்பு மூட்டச் சுள்ளி பொறுக்கியவன் குடிசையில் கிடப்பதால் கள்வனு?"

"இது எனக்குப் புரியவில்லை!—புரிந்தாலும் ஒப்புக்கொள்ள முடியாது—முன்னேர்கள் ஏற்படுத்திய சமூக ஏற்பாட்டைப் புறக்கணிப்பது பாவம்!—நீ நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்து விட்டு......?"

"பராரியாகப் போய் விடாதே என்று எச்சரிக்கை விடுகிருயா?—நிலங்களை வைத்துத்தான் நான் உயிர் வாழ வேண்டுமென்பது கேவலம்—பாடுபடாமல் பலனை அனுபவிப்பது பகற்கொள்ளை தான்".

"பரோபகாரமாக நிலங்களைப் பகிர்ந்து கொடுப்ப தால் பாட்டாளிகள் பங்களாவாசிகளாக......"

"கூடாது என்பதுதான் என் ஆசை—பூமி எவருக் குமே பாத்தியப் பட்டதாக இருக்க வேண்டாம்—ஆனல் **பலனை** எல்லோரும் **பகிர்ந்து** அனுபவிக்க வேண்டும்—இதுவே என் பேராவல்—வாங்குவதும்—விற்பதுமான பொருளாகப் பூமி பயன் படக்கூடாது".

"மண்ணாசை மனிதனின் உடன் பிறந்த உரிமை!-அந்த **ஆசையை ஒழித்து விட்டால்**, காட்டுமிராண்டித் தனந்தான் மிஞ்சும்!"

"காட்டு விலங்குகளை விடக் கேவலமாக உழவன் நடத்தப் படுகிருன் பணனை முதலாளிகளால்—அதனை ஒழித்துக் கட்டினல் காட்டுமிராண்டித் தனம் வரு மென்று கதைக்கிருயே!"

"சேகர்! நீ சொல்வது சுத்த மடத்தனம்—நம் காலத்தில் நிலப் பாத்தியதையை ஒழிப்பது சாத்தியமா?"

"ஜான்! மேலும் மேலும் பேசுவதால் என் முடிவை மாற்ற முடியாது உன்னல்—என்னைப் பொறுத்த விஷயத்தை நானே தீர்த்துக் கொள்ளும்படி தயவு செய்து விட்டுவிடு".

"சரி!—எப்படியும்போ—ஆனல் உன்னையே நம்பிக் கிடக்கும் எலிசபெத்தின் கதியைக் கடுகளவேனும் கருதினயா?"

"கருதினேன்—கனவு கூடக் கண்டதுண்டு—ஆனல் என் வாழ்வு வேறு திசையை நோக்கி விரைந்து செல்கிறது—இனி என் போக்கைத் திருப்ப என்னல் கூட இயலாது—எலிசபெத் வேறு எவனையாவது மணந்து கொண்டு சுகமாக வாழட்டும்".

"இதற்கு மேலும் உன்னிடம் பேசிப் பயனில்லை தான்—நான் வருகிறேன்".

வெடுக் கென்று கூறி விட்டு விரைந்து சென்ருன் ஜான்.

அவனுக்கு விவாதப் போக்கையே பெரிதாகக் கருதித் துக்கம் ஏற்படும்படி பேசி விட்டோமே என்று வருத்த மடைந்தான் சேகர்—அதே சமயம் இந்த உண்மை உணர்வும் அவனிடம் ஏற்படாமலில்லை—**பிறருடைய துயரத்தைப் பொருட் படுத்திறல் கொள்கை என்பது தோற்ற மாதிரி யல்லவா!**

# 9

சித்திரை மாதம்—தாங்க முடியாத வெப்பம்—பாறைகளும், சுவர்களும், வீட்டுத்தளங்களும், கொடிய உஷ்ணத்தை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தன.

எப்பொழுதாவது வீசும் மென் காற்றும் அனல் காற்ருகவே வீசிற்று—வீதிகளில் மக்கள் நட மாட்டமே இல்லை—நடந்து போய்க் கொண்டிருந்த ஒரு சிலரும் தெருவில் நிழல் பக்கமாகவே நடந்தனர்.

சில கூலிகள் பாதையைச் செப்பனிட்டுக் கொண் டிருந்தனர்—வெப்பத்தைத் தாங்க முடிய வில்லையே என்று வேதனைப் பட்டால், வயிற்றுக்கு வேறு வழி யில்லையே அவர்களுக்கு!—வெயில் நன்ருக அடித்தால் தான் வேலையாட்களின் சுறுசுறுப்பில் வேகம் அதி கரிக்கும் என்பது மேஸ்திரியின் தத்துவம்!—கொதிக் கும் வெப்பத்திலே உட்கார்ந்து கல்லை உடைத்து மணலில் கலந்து பாதையிலுள்ள பள்ளங்களில் போட் டனர் அவர்கள்.

சேகர் சிறைக்குப் போய்ச் சேர்ந்த போது, கைதிகள் புறப்படவில்லை—அதிகாரிகள் வெளிவாசலில் அமர்ந்து கைதிகளைப் பரிசோதனை செய்தனர், உடல் நிலை உகந்த முறையிலிருக்கிறதா என்று—அன்றைய தினம் பதினைறு கைதிகள் தீவுக்கு அனுப்பப் படுகின்ற னர்—அவர்களில் பத்துப் பேர் ஆண்கள்—ஆறுபேர் பெண்கள்—இவர்களுள் மேரியும் ஒருத்தி.

கைதிகளின் உறவினர்கள் ஏராளமாக வெளியில் கூடியிருந்தனர். வழிந்தோடும் கண்ணீரோடு கடைசியாகக் கைதிகளைக் கண்டு பேச—பிரியமான பொருள்களைக் கொடுக்க எவ்வளவு ஆவலுடன் குழுமியிருந்தனர்! கைதிகளைக் காண முட்டி மோதி முன்னேறினர். ஒருவருக்கொருவர் இடித்துக் கொண்டு கால் கடுக்க நின்றனர்.

ஆனால் எவருமே கைதிகள் அருகில் நெருங்க முடியவில்லை. கடைசி நேரச் சந்திப்பு—இதில் கூட அதிகாரிகள் ஆணவத்துடன் நடந்து கொண்டனர். கைதிகளும்—உறவினர்களும் உரையாட அனுமதிக்க முடியாதென மறுத்து விட்டனர்.

“போங்கள்”, என்று அதிகாரி உத்தரவிட்டார். துப்பாக்கி தாங்கிய போலீசார் புடை சூழக் கைதிகள் புறப்பட்டனர். உள்ளக் குமுறல் அழுகையாக வெளிவர வழி அனுப்பினர் உறவினர்.

கைதிகளின் ஊர்வலம் வீதிவழியாகச் சென்றது. கைகளை வீசிக்கொண்டே நடந்தனர். எல்லோருக்கும் ஒரே மாதிரியான உடை—நடையின் தோற்றமும் ஒரே மாதிரி தான்.

சேகரின் வண்டி கைதிகளைக் கடந்து போயிற்று. தங்களைக் கடந்து சென்ற அந்த வண்டியைக் கைதிகள் யாவரும் கூர்ந்து நோக்கினர்.

சேகர்—மேரி—இ வ் இ ரு வ ரி ன் கண்களும் மோதுண்டன.

பெண்களின் குழுவில்நடந்துவந்த மேரியைச் சுலப மாகக் கண்டு பிடித்து விட்டான் சேகர்—அவள் முகத் தில் சாந்தமும் உறுதியும் குடி கொண்டிருந்தன—அவனைக் கண்ட மாத்திரத்தில் சட்டென்று அவள் முகம் மாறுதலடைந்தது—"வந்து விட்டாரே! ஐயோ! சொன்னபடி......பிடிவாதமாக என்னைப் பின்பற்றியே வந்து விட்டாரே" என்று அவள் மனம பதறித் துடித்தாள்.

மகத்தான தொரு செயலைச் சாதித்து விட்ட மாவீரன் போல மனத்தெம்புடன் காணப் படடான் சேகர். வண்டியை விட்டு இறங்கி மேரியை நெருங்கி ஞன். கைதிகளின் வரிசையோடு அவனும் கலந்து கொண்டான்.

"மேரி! நானும் உன்னேடு புறப்பட்டு விட்டேன்", என்ருன். அப்போது அவனை அப்படியே ஆலிங்கனம் செய்து கொண்டு அழ வேண்டும் போல் அவள் இதயம் அலமருந்தது—நெஞ்சு விம்மிற்று—கரங்கள் துடித்தன—நடை தள்ளாடியது—அவள் ஏதோ பேச வேண்டுமென்று வாயைத் திறக்கப் போனுள்.

அதற்குள் போலீசு சார்ஜண்ட் "யாரையா அது?- அவர்கள் அருகில் போகக் கூடாது—அப்பால் போ" என்று கத்தினன்—வேகமாக ஓடிவந்து சேகரை நெருங்கினன்—அருகில் வந்தவுடன் சேகரை அடையா ளம் கண்டு கொண்டான்—உடனே தன் தொனியை மாற்றிக் கொண்டு, "இப்பொழுது வேண்டாம்—ஸ்டே ஷனுக்குப் போகும் வரைப் பொறுத்துக்கொள்—அப் புறம் சாவாதானமாய் பேசிக் கொள்ளலாமே!" என்று சொல்லிவிட்டு அசட்டுத் தனமாகச் சிரித்தான்.

சேகரும் கைதிகளின் வரிசையிலிருந்து விலகி, பக்கவாட்டில் வந்து கொண்டிருந்த தன் வண்டியில் ஏறிக் கொண்டான்.

முந்திய நாள் ஜாஞேடு நடத்திய விவாதம்—மேரியைப் பற்றிக் கேள்வியுற்ற செய்தி—எலிசபெத்தின் வருங்காலத்தைக் குறித்த நினைப்பு—ஆகியவற்ருல் குழம்பிக் கிடந்த அவனது கருத்தோட்டம் இப்போது அமைதி அடைந்திருப்பது போல உணர்ந்தான்—அந்தக் குழப்பத்தை யெல்லாம், கண்ணீர் கொட்டக் கைதிகள் உணர்ச்சியற்ற பிம்பங்களாய் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படும் காட்சி வென்றது.

வீதிகளின் இரு மருங்கிலுமுள்ள வீட்டுச் சுவர்கள், வெப்பக்காற்றை ஊதித் தள்ளுவது மாதிரி சாடி வீசிற்று.

அந்த வெப்பக் காற்று வியர்வைத் துளிகளை முகத்தில் அரும்ப வைத்தது. கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

ஆனல் பாவம் விலங்கிடப்பட்டு இழுத்துச் செல்லப்படும் கைதிகளின் முகங்கள் வியர்வையால் நனைந்து போயிருந்தன—அந்த வேதனை வடிவங்களைப் பார்த்தவாறே, தன்னை அறியாமல், வண்டிச் சக்கரத்தின் மேல் தூசியை மடக்கி விடுவதற்காகப் போடப் பட்டிருந்த இரும்புத் தகட்டின் மீது கையை வைத்துவிட்டான்!—சுளீரென்று சுட்டு விட்டது—“இதுவே இப்படிச் சுடுமானல்—**அந்த** ரோடு எவ்வளவு சூடாக இருக்கும்!—அதன்மீது மேரி நடக்கிருளே—**அவளது** மலரடி வெதும்பிச் சருகாகப் போகுமே”—என்று பரிதாபப் பட்டான் அவன்.

இந்தக் **கவலையைத்** தவிர இப்போது அவனிடம் **வேறு எவ்விதமான சிந்தனையுமில்லை!**

சேகர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தான்-கைதிகள் வண்டி ஏற்றப் பட்டனா—இங்கேயும் கூடக் கைதிகளை வழி அனுப்புவதற்காகப் பலர் வந்திருந்தனர்.

வண்டியை அணுக அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை!—அந்திம காலச் சந்திப்பல்லவா!—அலைமோதும் ஆவல் வேகம் எப்படி எப்படியோ தான் இருக்கும்?—அதற்காக வந்து மாமூல் சட்டத்தை மதிப்பில்லாமல் செய்துவிட முடியுமா?

இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும் இதயம் அவர்களுக்கு எப்படியிருக்கும்?—இனி எப்போது அவர் களைக் காணப் போகின்றனர்?—அதற்குள் எவ்வளவு பெரிய மாறுதல்களெல்லாம் நிகழ்ந்து விடும்!—ஆயுட் காலத் தண்டனை யெனில் அடுப்படி வேலை போல் அவ் வளவு சுலப நேரத்தில் முடிந்து விடுமா?"

"ஐயோ பாவம்! சந்தித்து விட்டுப் போகட்டுமே", என்ற பரிதாபம் பிறக்குமா அதிகாரிகளுக்கு?—அவர் களுக்கு இப்படியெல்லாம் கவலை—இருந்தால், வேலைக் குண்டான கடமையும்—கௌரவமும் என்ன வாவது?—இத்தகைய சந்தர்ப்பங்களில் சட்ட பூர்வமாகச் செய்ய வேண்டிய சடங்குகள் ஏதாவது விட்டுப் போய் விட்டால் என்ன செய்வது என்ற கவலைதான் அவர்களுக்கு.

சேகர், மேரியிருந்த பெட்டி அருகில் போனன். மேரியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மற்ஞெரு பெண் கைதி மேரியை இடித்துச் சேகர் வந்திருப்பதை உணர்த் தினள்—சுட்டிக் காட்டினள்.

மேரி அவசரமாக முன்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு ஜன்னல் பக்கம் வந்தாள்.

"வெயில் ரொம்ப அதிகமாக இருக்கிறது", என்று சொல்லி விட்டு ஏதோ ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

"ஆமாம்! மேரி உனக்கு ஏதாவது வேண்டுமா?"

"வேண்டாம்......"

"வேண்டுமென்றால் இப்போதே சொல்லி விடு— பட்டணம் போகிறவரை என்னைப் பார்க்க முடியாது— கப்பல் ஏறுகிற அன்று தான் என்னைப் பார்க்கலாம்".

"ஏன்?—நீங்களும் வருகிறீர்களா?" என்று ஏதும் அறியாதவள் போல் சேகரைக் கேட்டாள். பிறகு ஆவலுடன் அவனை நோக்கினாள்.

"நான் அடுத்த வண்டிக்கு வருகிறேன்", என்றான் அவன். மேரி ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஒரு நீண்ட பெருமூச்சுத் தான் விட்டாள்.

மணி அடித்தது. கார்டு விசில் ஊதினர். என்ஜின் பேரிரைச்சலைக் கிளப்பிற்று. சேகர் சற்று விலகி நின்று கொண்டான். அந்தப் பெட்டிக்குள் அமர்ந்திருந்த கைதிகள் யாவரும் பிரிவுணர்ச்சியினால் பரபரப்புடன் பிளாட் பாரத்தைப் பார்த்தனர்.

வண்டி புறப்பட்டு விட்டது. பிளாட் பாரத்தில் நின்றவர்களுக்கும்—வண்டியில் போகிற கைதிகளுக்கு மிடையே—**விம்மல்**—வேதனையின் சோகக் குரலொலி—எழும்பியது—எதிரொலித்தது.

மேரி வெளியே எட்டிப் பார்த்தவாறு பரிதாபமாகச் சிரித்தாள். சேகர் கையை அசைத்துக்

கொண்டே நின்ருன். தூரம், வண்டியின் தோற்றத்தைச் சிறுகச் சிறுக விழுங்கிற்று!

அவளுடன் அதே வண்டியில் போகாமல் அடுத்த வண்டிக்குப் போகலாமென்று அவன் முடிவு செய்ததற்குக் காரணம் ஜான் குடும்பத்தாரையும் தன் அக்காளையும் போய்ப் பார்த்து விட்டு வர வேண்டுமென்பதற்காகத்தான்.

ஆனுலோ......?

மேரி போகிற வண்டி சென்ற சற்று நேரத்தில் அவன் முடிவு திடுக்கென்று மாறியது. "அங்கெல்லாம் போக வேண்டாம்—இனிப் போவதற்கும் என்னதான் இருக்கிறது?"—என்று பெரிதாகவே சலித்துக் கொண்டான் அவன்.

முதல் வகுப்புச் சிற்றுண்டி நிலையத்தில் போய் உட்கார்ந்தான்.

மனக் குழப்பமும்—அலுப்பும்—அதிகமாக இருந்ததால், சோர்ந்து போய் விட்டான்—சிறிது நேரம் சென்றிருக்கலாம்—அங்கே அவன் எதிர்பாராத நிலையில் **ஜான்—"எலிசபெத்"—சேகரின் சகோதரி**—ஆகியோர் வந்தனர்.

சோகக்களையுடன் சிற்றுண்டி நிலையத்தில் நுழைந்தவர்களைச் சோர்வில் மூழ்கியிருந்த சேகர் ஏதோ வாயளவில் பேசி வரவேற்ருன்.

தன் சகோதரியின் கலங்கிய கண்களைக் கண்டவுடன் எங்கோ பதுங்கிக் கிடந்த பாசம் குபீரெனப் பற்றி எரிந்தது—ஏதும் பேச வர வில்லை அவனுக்கு—

மௌனமாகவே வீற்றிருந்தான்—எலிசபெத்தை ஏறிட்டுப் பார்க்கவே அவனுக் கொருவிதமான பீதி ஏற்பட்டது.

அழுகை கலந்த குரலில் "நீ எதற்காகப் போகிறாய் சேகர்?" என்று கேட்டாள் சேகரின் சகோதரி.

"நான் போகவேண்டும்—அதற்காகத்தான் நான் போகிறேன்—என் தியாகத்தை அவள் ஏற்க விரும்பவில்லை—அதற்காக அவளைக் கடிந்து கொள்ளாதீர்கள்—நானே தான் இம் முடிவுக்கு வந்து விட்டேன்—இது தற்காலிகப் புத்துணர்ச்சி வேகத்தினால் ஏற்பட்ட தியாகம்—முடிவு—என்றால் நான் ஏற்க மாட்டேன்—**இது புது உலக வாழ்வைப் பரிசுத்தமாகும் புது உயிர் புத்துணர்ச்சி**—அதனால் தான் அவளுடன் கூடவே போகப் போகிறேன்—அவள் எங்கு இருக்கிறாளோ அங்கேயே இருப்பேன் — அவளது துன்பத்தைக் குறைக்க என்னாலான தொண்டு செய்வேன்—**பேதமனம் கொண்டதாக—பிழை நிறைந்ததாக—ஏன் பைத்தியமாகக் கூடப் படலாம் உங்களுக்கு—புண்படலாம் நீங்கள்—ஆனால் நடைப் பிணமாகிய நான் உங்கள் நடுவில் நடமாடியும் பயனில்லை—**ஆகவே போகிறேன்—வருத்தப் படாதீர்கள்—என்னை மறந்து விடுங்கள்—எல்லோரும் மன்னிப்புத் தாருங்கள் எனக்கு".

"சேகர் ! நிலபுலன்களையெல்லாம்..........?"

"நிர்வகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கில்லாமல் செய்துவிட்டேன். உழவர்களுக்கே நிலங்களைச் சொந்தமாக்கி உயில் எழுதி வக்கீல் வசம் கொடுத்திருக்கிறேன். ஆனால் அம்மா வழியில் கிடைத்த நிலங்களைக்

குடியானவர்களுக்குக் கொடுக்காமல் உன் குழந்தைக ளுக்குச் சேரும்படி செய்திருக்கிறேன்."

இப்போது அவனது சகோதரிக்கு ஒருவிதமான திருப்தி ஏற்பட்டிருப்பது போலத் தென்பட்டது.

பெரும்பாலாலான பிரயாணிகள் வண்டியில் ஏறி உட்கார்ந்துவிட்டனர். சேகரும் தளர்நடையில் பிளாட் பாரத்தைத் தாண்டி வண்டியில் ஏறிக்கொண்டான். வண்டிக் கதவுகளை ஒவ்வொன்ருக . மூடிக்கொண்டே போனுர் கார்டு.

" இனி என்ன பேசலாம்? "—இப்படி அவர்கள் நால்வரும் திகைப்புடன் நோக்கினர்.

சகோதரிக்கோ உணர்ச்சி கொப்பளிக்க "போய் வா!" என்பதைத் தவிர வேறு ஒன்றும் கூறமுடிய வில்லை—ஜான் வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டே நின்ருன்—உதடுகள் மட்டும் துடித்தன— நாக்கு அசையவில்லை—எலிசபெத் ஏக்கம் நிறைந்த சாயலுடன்—கண்ணீர் ஒழுக—காட்சி தந்தாள்.

சேகர் கரம் கூப்பி வணங்கினுன்

சிந்தனைச் செல்வன்—சீரிய செயலாளன்—சேக ரின் சோகம் ததும்பிய பார்வையில் கெம்பீரம் விரிந் தது—படர்ந்தது.

கடைசியாக சேகரின் கண்கள் எலிசபெத்தின் கண்களில் கலந்தன—பிரிவு சிறிதே போதில் புகப் போகிறதே இடையில் என்று பொருமையைக் கக்கின கண்ணீராக அவளது நயன சித்திரங்கள்.

வண்டி புறப்பட்டுவிட்டது.

கால நிலையில் பெரிய மாறுதல் ஏற்பட்டு விட்டதாக உணர்ந்தான் சேகர்.

ஆதவனை ஒரு பெரிய மேகப்படலம் மறைத்துக் கொண்டிருந்தது—வெகு தூரத்திற்கப்பால் கனத்த மழை பெய்கிறது போலும்!—காற்றில் நீர்த்துளிகள் கலந்து வந்தன—மேகங்களின் மின்னல் ஜாலங்கள் மிகுதியாகக் கிளம்பின—வெட்டிய மின்னலுடன் கொட்டிய இடியோசை ரயிலின் 'கடகடா' சப்தத்தோடு கலந்தது.

மண் வாசனையுடன் சேர்ந்து வந்த குளிர்ந்த காற்றை உள்ளுக்கு இழுத்தான்.

அப்படி! அவனது உள்ளத்துக்கு அப்போது அவ்வளவு குளிர்ச்சி தேவைப்பட்டிருக்கிறது! — தலை நிமிர்ந்தான்—**தெளிந்த மனத் தெம்புடன்** சிரித்துக்கொண்டான்—!

இயற்கையின் மாறுதல் எவ்வளவு மகத்தான சக்தியுடையதோ, அது போலவே தன் **மறுமலர்ச்சி வாழ்வும்!** மாபெரும் வன்மையுடையது என்றெண்ணிப் பெருமைப்பட்டான் போலும்!

# 10

மக்கள் தங்கள் கருத்துப்படியும் ஓரளவு பிறர் கருத்துப்படியும் வாழ்க்கை நடத்துகிறார்கள். இதிலுள்ள ஏற்றத் தாழ்வுப்படியே அவர்களிடையே வித்தியாசம் காணப்படுகிறது.

சிலர் சிந்தனை செய்வதைச் சூதாட்ட விளையாட்டாகக் கருதுகிறார்கள். பிறரது கருத்துக்களே இவர்களுடைய செய்கைகளுக்கு வழிகாட்டுகின்றன. சம்பிரதாயம் — சட்டம் — பழக்கம் — பரம்பரை — இவற்றின் படியே நடப்பவர்கள் அதிகம்.

மற்றும் சிலர் தங்கள் **செய்கைகளுக் கேற்றவாறு தங்கள் கருத்துக்களை உருவாக்குகிறார்கள்.**

மேரியும் தன் கடந்தகாலச் செயல்களுக்கு உகந்த வகையில் தன் வாழ்க்கையை உருவாக்க விரும்பினாள். பிறருடைய கருத்துத் தன் வாழ்வுக்கு ஒத்துவராத போது அதனை ஒதுக்கிவிடவே செய்தாள்.

கைதிகள் அனைவரும் தீவுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டு மூன்று மாதங்கள் சென்றுவிட்டன.

இதுவரையிலும் சேகரின் கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தே வந்திருக்கிறாள் மேரி! — இந்த மூன்று மாத காலமாகச் சேகர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் வியர்த்தமாக்கி விட்டாள்.

தேவையில்லாத தீவு வாழ்க்கை!— ஆனால் மேரிக்காக மேற்கொண்டான். தினம் தினம் அவளைச் சந்தித்

தான். முறையிட்டான். ஆனால் அவளோ மனமிரங்க மறுத்தாள். ஒரே பிடிவாதமாக நடந்துகொண்டாள்.

தியாகத்தின் தோற்றமாய்—வாஞ்சையின் வடிவமாய்—உண்மையின் உருவாய்—அவன் தவமியற்றுகிறான் தனக்காக என்பதையும் அவள் தெரிந்துகொள்ளாமலில்லை.

எனினும் அன்று—அப்பீல் தோற்று விட்ட செய்தியைக் கூற வருகிறவேளையில்—ஆஸ்பத்திரி வார்டர் சொன்னதை அப்படியே நம்பி முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு தன்னிடம் பேசினானே சேகர் என்று நினைத்துக்கொள்வாள்.

இப்படிப்பட்ட சமயத்தில் அவளது சிந்தனைத் தராசில் சேகர் எடைக் குறைவாக மதிக்கப்படுகிறான்.

சின்ன டாக்டரோடு எவ்விதத் தொடர்பும் அவளுக்குக் கிடையாது. அவளைக் கற்பழிக்க அவன் முயன்றது என்னமோ உண்மைதான். அவனது மிருகப்பிடியினின்று மீள மல்யுத்தம் கூடச் செய்தாள். கடைசியில் கயவன் கரத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொண்டாள். ஆனால் கதை வேறு விதமாகத் திரித்துக் கூறப்பட்டு விட்டது. அவள் சின்ன டாக்டருடன் சல்லாபித்துக் கிடந்தாள் என்று கதை கட்டிவிட்டனர். இதனை நம்பித்தான் பெரிய டாக்டர் அவளைச் சிறைக்கே பழையபடியும் அனுப்பி வைத்துவிட்டார். இதுதான் உண்மை!

சேகர் இந்தக் கற்பனைக் கதையை நம்பிக் கடுமையாக நடந்து கொண்டானே என்று ஆத்திரப்படவில்லை—ஆவி சோர்ந்தாள். தன்னை வைத்து வாழ்

வதற்கு அவன் இன்னும் பக்குவப் படவில்லை என்றே தீர்மானித்தாள்.

இல்லையெனில் தன்னுடன் சிறையிலிருந்து—இன்று தீவுக்கு வந்திருக்கும் திருட்டுக் கைதியோடு இப்படித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வாளா?

அவன் பெயர் **சைமன்** — அவனுடைய தந்தை ஒரு சர்க்கார் ஆபீசில் சம்பளப் பட்டுவாடாச் செய்யும் அதிகாரியாக இருந்தார்.

கூலிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தில் கூட தனக்குக் கமிஷன் கேட்பார். வாங்கியும் விடுவார். எவனாவது ஒரு சிப்பந்தி அவருக்கு லஞ்சம் கொடுக்க முனங்கினால் போதும், உடனே அவனுக்குச் சம்பளம் போடுவதை ஒருவாரத்திற்காகவது நிறுத்தி வைப்பார். இன்னமும் சம்பளப்பணம் பாசாக வில்லை என்பார். ஒரு வாரம் தாமதமானால் அந்தத் தொழிலாளி பாடு என்னவாகும்?—பட்டினி தானே!

இதனால் தான் அந்த மனித பூதத்திற்குப் பூஜை போட்டுத் திருப்திப் படுத்தி விடுவார்கள். தன் தந்தையார் இப்படி ஏழை எளியவர்களைக் கசக்கிப் பிழிவதைக் கண்டான் சைமன். அயோக்கியத் தனமான முறையில் வருமானம் தேட வேண்டாமெனத் தன் தந்தையாருக்கு தர்மோபதேசம் செய்தான். அவரா கேட்பார்? அவனைத் திட்டினார். தந்தைக்கும்—மகனுக்கும் சச்சரவு முற்றியது. சைமன் வீட்டை விட்டுத் துரத்தப் பட்டான்.

இதற்கெல்லாம் காரணம் மக்களிடையே படிந்து விட்ட அறியாமை தான் என்ற முடிவுக்கு வந்தான்.

சீர்திருத்த இயக்கத்தில் சேர்ந்தான். அயராது பணி புரிந்தான். பட்டணம் முதல் பட்டி தொட்டிவரை பேசிப் பேசிப் பாடுபட்டான். ஆனல் கிடைத்த பலனே? "கோவில் நகையைத் திருடினுன்-விக்ரகங்களை உடைத் தெறிந்தான்", என்ற குற்றச் சாட்டுகள்.

நீதி மன்றத்திலே நிறுத்தப் பட்டான்—"திருட னல்ல" என்று தீனக்குரல் எழுப்பினுன்—"திருடன் மட்டுமல்ல—**சமூகத்திலே** நடமாடக் கூடாத தீமைக் காரன்—தீவுக்கு அனுப்பினுல் தான் தீராத தொல்லை ஒழியும்", என்று தீர்ப்பு வழங்கியது சட்டம்!

அவனும் தீவுக்குக் கொண்டு வந்து விடப் பட் டான்—**சிறை வாழ்வு** — அங்கே ஏற்பட்ட பழக்கம்— சைமன், மேரியின் இதயத்திலே இடம் பெற்ருன். "சீர்திருத்தச் செம்மல்!—மாணவப் பிராயத்திலேயே மோசத்தையும்—நாசத்தையும்—எதிர்த்துப் போரிட்ட **மகா மேதை!"** என்று அவனைக் கருதினுள் மேரி.

"அன்போடு பழகுகிருர்—அறிவோடு பேசுகிருர்- ஆறுதலாக நடக்கிருர்—எவ்வித பிரதி பிரயோஜனத் தையும் நினைக்காமல் சேவை புரிகிருர்"—இவ்வாறு எண்ணத் தொடங்கிய நாள் முதல்—இன்று பரியந்தம் "சைமன்" தனி ஸ்தானத்தைப் பெற்ருன் அவளிடம்.

**சைமன்—சேகர்**—இவ்விரண்டு பேரையும் மனக் கண் முன்னிலையில் நிறுத்தினுள் — நிறை போட்டு அளந்தாள் மேரி. இவர்களிலே எனக்கேற்றவர் எவர்?— எந்த வகையில்?—என்று எண்ணிப் பார்த்தாள்.

"சேகர்—தியாக சீலர்—தன் குற்றத்தை உணர்ந்து திருந்திய தகைமையாளர்—வாழப்பிறந்தவர்—என் வாழ்

வில் இணைத்துக் கொண்டு இன்னல்களுக்கு மத்தியிலே இவரைத் திண்டாட வைப்பதே தவறு—புதுமையாக இருக்கும்போது தீண்டினார் என்னை!—**பழமை**யான பின்னர் என்னை அவர் தீண்டவே கூடாது!—அவரது தூய்மை—தியாக சீலம்—என் தொடர்பால் தீய்ந்து விடும்—அது பாவம்!—**அவர் வாழ வேண்டும்—என்னை மணந்து மாளவேண்டாம்**".

இது சேகரைக் குறித்து அவள் சிந்தனை உதிர்த்த சொற்றொடர்.

"**சைமன்**—சீர்திருத்தச் செம்மல் — பெண்மையை இதுவரைத் தீண்டாத புண்ய சீலர்—**சாகப் பிறந்தவர்!—சமுதாயத்தால் விரட்டப்பட்டவர். அவரும் கைதி—நானும் கைதி—**எங்களைச் **சமூகம்** என்றென்றும் **ஏற்றுக் கொள்ளப்போவதில்லை**—ஆகவே சைமன் என்னை மணந்து கொள்வது தவறல்ல—நிராதரவான நாங்கள் இருவரும் இணைவதால் **எவருக்கும்** நட்டமில்லை".

சைமனைப் பற்றி அவளது கருத்தொளி காட்டிய சிறப்போவியம் இப்படி.

இதற்குப் பின்பு—சேகரின் படை எடுப்புக்காகப் பரிதாபம் காட்டவோ—அன்றி—பயப்படவோ மேரி விரும்பவில்லை.

அவன் தன்னை வந்து காணுகிற சமயங்களிலெல்லாம் சைமனின் விடுதலையைப் பற்றியே வலியுறுத்திப் பேசினாள். அவனுக்காகவும் ஒரு கருணை மனு தயாரித்து ஜனாதிபதிக்கு அனுப்புமாறு முன்பே சேகரிடம் கேட்டுக் கொண்டாள்.

சேகர் தான் அவளுக்காக எந்தவிதமான சேவையும் செய்யச் சித்தமாயிருக்கிறானே!—சைமனுக்காகவும் கருணை மனு எழுதி ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தான்.

ஒருவனை நிர்ப்பந்தித்து வேலை வாங்கலாம்—ஆனால் நிர்ப்பந்தத்தின் மூலம் அவனது அன்பைப் பெற முடியாது—**அனுபவத்தின் வழி வந்த முடிவு இது.**

மனத்தே அன்பைப் பிறக்கச் செய்யவும் வேண்டும்—பெறவும் வேண்டும்-இதற்காகப் பொறுமையுடன்—தியாக உணர்ச்சியோடு செயலாற்ற வேண்டும்.

இனி அன்பு கிடைக்காத பொருளாகாது. கிச்சிலிப் பழத்தோலை உரித்து விட்டால் சுளையைப் புட்டு விடுவது எவ்வளவு சுலபம்.

இந்த மேலான எண்ணத்தினால், சேகர்—மேரிக்காக—அவளின் அன்பைப் பெறுவதற்காக—பணி புரிந்தான். பலவந்தத்தால் அவளது பாசத்தைப் பெற அவன் விரும்பவுமில்லை!—வேண்டவுமில்லை.

"என்னை நேசிக்கத்தான் செய்கிறாள்—ஆனால் மணம் புரிந்து கொள்ள மாத்திரம் மறுக்கிறாள்—இது ஏனோ?—எல்லாம் இன்னும் சில நாட்களில் சரிப்பட்டு விடும்".

இம்மாதிரியாகத் தானே அலை பெருக்கும் ஆவலுக்கு ஆறுதலாக அணைபோட்டு வைத்தான்.

ஒருநாள்!—அன்று தான் இன்பச் செய்தி ஒன்றைக் கேள்வியுற்றான் சேகர்!

மேரிக்கும்—சைமனுக்கும் விடுதலை. ஜனாதிபதி கருணை கூர்ந்து விட்டார். சோபை மலர்ந்து விட்டது சோகம் நிறைந்த இடத்திலே சேகருக்குத் தந்தி மூலம் கிடைத்தது இது.

இரும்பூ தெய்தினன்—ஏறு நடை போட்டான்—இன்ப உணர்வால் எழுச்சி மயமாயிருந்தது அவனது இதயம்.

சிக்கல் சிதறிவிட்டது—விருப்பம் நிறைவேறி விட்டது இப்போது.

அவள் கைதியாக இருக்கும்போது விவாகம் செய்து கொள்வதில் அர்த்தமில்லை. இது நடந்தால் இயல்பாக இருக்காது—காரியத்திற்கும் ஒத்துவராது. இனி அவள் விடுதலை பெற்று விடுவாள்—சேர்ந்து வாழ்வதைச் செய்கைக்கு விரோதமென்று யாரும் தடுக்க முடியாதல்லவா?

ஆனல் அதே வினடி அவள் சைமனேடு கொண்டுள்ள உறவு நினைவுக்கு வந்து விட்டது.

“மேரி ஏன் இப்படி அர்த்த மற்று நடந்து கொள்கிருள்!—என்னை ஏற்க மறுப்பானேன்?—எல்லோராலும் ஏசப்பட்ட—நசுக்கப்பட்ட—அவனை ஏற்கத் துணிவானேன்?” இந்த வினக்களுக் கெல்லாம் விடை காண அவனல் முடியவில்லை, இதனல் வேதனை தான் மிகுந்து நின்றது. சிந்திப்பதையே நிறுத்தி விட்டான். “போகப் போக எல்லாம் தாமாகவே சீர்பட்டு விடும்—சீர்தித்தம் பெறும்”—என்று மனதை ஆசுவாசப் படுத்திக் கொண்டான்.

நேராகக் கைதிகளின் முகாமுக்கு நடந்தான்.

“இந்த நற்செய்தியைக் கேட்டு மேரி சிரிப்பாள் பூரிப்பாள்—குதிப்பாள்—அதைக் கண்டு நான் சிந்தை மகிழ்வேன்”—இப்படிக்கான கற்பனைகளுக் கிடையே நடையை ஓட்டினன்.

கைதிகள் அனைவரும் தங்கள் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். இங்குமங்கும் திரும்பிக் கூடப் பார்க்க முடியாதவாறு கடினமாக உழைத்தனர்—கட்டளை பிறப்பித்துக் கொண்டேயிருக்கும் காவற்காரர்களின் கண் காணிப்பிலே.

மேரி—சைமன்—இவர்களின் விடுதலை உத்தரவு தங்கட்கு இன்னும் கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் அறிவித்தனர்.

“உத்தரவு தாமதமாக வரலாம்—‘**சிவப்பு நாடா**’ வேகம் ஆமை ஓட்டத்தில் தானே இருக்கும்!—அது வரை இவ் இனிய செய்தியை அவள் அறியாமல் இருப்பதா?—நானே அவளிடம் இதை முன்னறிவிப்பாகக் கூறினால் எவ்வளவு நல்லது—அவளது அபிமானம் என் பால் அதிகரிக்குமே”—என்று நினைத்தான்.

மேரியைக் கண்டுபேச அனுமதிக்குமாறு அதிகாரியிடம் வேண்டினான்—அனுமதித்தார் அவரும்.

கூட்டிவர ஆள் அனுப்பி விட்டார் அதிகாரி. என்றாலும் சேகர் வழிமேல் விழி வைத்து நின்றான்—கைகாட்டி மரம் இறங்கிய பிறகும், துடி துடிப்போடு ‘டிரெயின்’ வரும் திக்கைப் பார்த்தவாறே நிற்கும் பிரயாணியைப்போல்.

நடந்துவரும் காலடியோசை கேட்டது—கதவைத் திறந்து கொண்டு அவள் வந்தாள். வழக்கம் போல எளிய உடை அணிந்து தலையில் ஒரு வெள்ளைக் கைக் குட்டையைக் கட்டிக் கொண்டு இருந்தவள், பூமியை நோக்கியவாறு வந்து நின்றாள்.

"நான் வாழவேண்டும் — குழந்தை குட்டிகளோடு குடும்பமாக இருக்க வேண்டும் — மேரி என் மனைவி!"— உறுதியான எண்ணம் உதித்தது, அவள் உள்ளே நுழைந்தபோது.

அவன் எழுந்து இரண்டடி முன்னே சென்று வரவேற்றான்.

அவள் முகத்தில் ஏதாவது கலவரம் கூத்தாடுகிறதா?—குறு குறுப்பான நினைவோடு உன்னிப்பாகப் பார்த்தான்.

அவளைக் கெடுத்தானே அன்றைக்கு அவள் தோற்றம் எப்படியிருந்ததோ அப்படி இருந்தது இப்பொழுது அவனைப் பொறுத்த மட்டில். ஆனால் உடையணிமட்டும் வேறே!—முகமும் வெளுத்து போயிருந்தது!

சேலை முன்தானையின் மூலையைப்பிடித்து முறுக்கிக் கொண்டிருந்தாள்!—இந்த வேலை அவளுக்கு இப்போது பெரிதாகவும் — அவசியமாகவும் — தெரிந்தது! மின்னல் இடி என்றவுடன் படக்கென்று தன்னையறியாமல் கண்களை மூடிக் கொள்ளுகிறவனைப் போன்று — அவள் கவனம் அதில் தனிக் கவனம் கொண்டிருந்தது.

"வாங்க சேகர்!" உதடுகள் திறந்து மூடின. ஒரு முறை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"உன் தண்டனை ரத்தாகி விட்டது மேரி! இது உனக்குத் தெரியுமா?"—ஆனந்தப் பெருக்கில் தட்டுத் தடுமாறினன்.

"தெரியும்—ஜெயிலர் சொன்னார்—தந்தி வந்ததாம்".

"இவர்களுக்கு இன்னும் விடுதலை உத்தரவு வரவில்லை. வந்தவுடனே உன்னை விடுதலை செய்து விடுவார்கள். எங்கு குடியேறுவது என்பதைப்பற்றி...?"

சேகர் உணர்ச்சி வசமாகிப் பேசிக் கொண்டிருக்கும்போது, மேரி பரபரப்புடன் இடை மறித்து "**சைமன்** சார்பில் அனுப்பிய கருணை மனு........!" என்றவாறு பேச்சை இழுத்தாள்.

"அதுவும் வெற்றியே!—சைமனுக்கும் விடுதலை." படபடப்போடு பதிலளித்தான் சேகர்.

தனக்கு நன்ருக விடை தெரிந்த வினவை ஆசிரியர் கேட்டுவிட்டால், துடி துடித்துத் தாவாத மாணவன் எவன் இருப்பான்?

"அப்பாடா...........!"

இந்த ஒரு வார்த்தையில் எவ்வளவு பெரிய பிரச்சினை தீர்க்கப்பட்ட அர்த்தம்—அமைதி—ஆனந்தம் அடங்கியிருக்கிறது தெரியுமா?

"மேரி! உனக்கு விடுதலையும் வாங்கித் தந்து விட்டேன். இப்போது நமக்கிடையே எந்தச் சட்டமும் சரி—சம்பிரதாயமும் சரி — குறுக்கே நிற்காது—மறுக்கவே மறுக்காது. நீயும் — நானும்.........!"

"விடுதலை என்ற இனிப்பு வார்த்தை கேட்டதும் நான் வேறு வழி கூறவேண்டும் என்று விரும்புகிறீர்களா? ஐயோ! இருக்கிற நிலையில் என் — துயரம்— தொல்லை—மழை விட்டும் தூவானம் நிற்காத கதை தானே?—நான் அறுதியிட்டுக் கூறுகிறேன் சேகர்!— முன்பு கூறிய முடிவிலிருந்து மாறவே மாட்டேன்."

"நிஜமாகவா? — நிச்சயமாகவா?" — "ஆமாம் சேகர்!—அமைதியாக நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

"ஒரு விபச்சாரியோடு வாழ்வதற்கு **விரிந்த இதயமிருக்கலாம்** உங்களுக்கு.

"ஆனல் அந்த விரிந்த இதயத்திலே விஷமாக நான் கலந்துவிடக் கூடாதல்லவா!

**"மதிக்கு ஏற்பட்டு விட்ட மாசும்—வழுக்கி விழுந்தவளுக்குக் கிடைத்த விபச்சாரப் பட்டமும் — என்றைக்கும் மாருது.**

"சமூகத்தில் நல்லவர்களாக உள்ளவர்கள் நல்லவர்களாகவே வாழவேண்டும்—அவர்களுக்குத் துணை சேர்கிறவர்களும் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தூய்மை மிக்கவர்களாகவே இருக்கவேண்டும்.

"ஆனால்.........நானே சமூகத் துரோகி — எனக்கு வாய்ப்பவனும் சமூகத் துரோகியாகத்தான் இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் எவரையும் இலட்சியம் பண்ணாமல் இடரின்றி வாழ முடியும்.

"சைமன்! சமூகக் குற்றவாளி — நானே சமூக வைரி — இருவரும் இணையாகிறோம் இதுவே **பொருத்தமுங்கூட.**

"அவரோடு நான் வசிக்க வேண்டுமென்கிறார் — இல்லை—அவர் அருகிலே இருக்க வேண்டுமென்கிறார். நான் வேறு எதை எதிர் பார்க்க முடியும் ?—இதைக் காட்டிலும் உயரிய இன்பம் எனக்கு எங்கே கிடைக்கும்?

"இதனால் உங்கள் அன்பை அலட்சியம் பண்ணுவதாக எண்ணாதீர்கள் — அந்தச் சிறந்த **அன்புக்கு** நான் சிரம் தாழ்த்துகிறேன் — வாழ்த்துகிறேன் உங்களை."

சேகர் திடுக்கிட்டான்—இதயம் இரண்டாகக் கீறி விடுவது போலக் குமுறியது—கொந்தளித்தது—குடைச்சல் எடுத்தது.

இதனைக் கேட்கவா — சிறைச்சாலையைச் சுற்றிச் சுற்றி வந்தான்? பிறந்தகத்தைத் துறந்தான்?—பித்தன் என்று தூற்றப் பட்டான்? — கடல் கடந்தான்? — தீவிலே துன்பத்துடன் உழன்றான் ?

யோசித்தான் சற்று நேரம். "ஒன்று இவள் சைமனைக் காதலிக்க வேண்டும் — அல்லது — என்னைக்

கஷ்டப்பட விடக்கூடாது என்ற தியாக **உ**ணர்ச்சியால் மறுக்க வேண்டும்.''

வேறு காரணத்திற்கு இடமில்லை யல்லவா ?—ஏன் விவரமாகவே கேட்டு விட்டால்......?

அவள் முகத்திற்கு குபீரென இரத்தம் பாய்வது அவனுக்கே தெரிந்தது. எப்படியும் இதைக் கேட்கா விடில் இதயத் துடிப்பு மட்டுப் படாது போலத் தோன்றியது.

விவரம் தெரியாத சிறுவன் "**கூட்ஸ் வண்டி**"யைப் பார்த்துத் தன் அப்பாவிடம் இதென்ன என்று எவ்வளவு துடி துடிப்போடு கேட்பான்?—அதற்குச் சற்று அதிகமான........!

"நீ அவனைக் காதலிக்கிறாயா........?" மெல்லிய குரலில் மென்று விழுங்கியபடி கேட்டான்.

"**காதலா?** அது என்னளவில் செத்த வார்த்தையாச்சே!—**அது பிறந்ததும் ஒரே ஒரு நாள்—இறந்ததும் அதே நாளில்**—அதற்குப் பிறகு அது பிறக்கவேயில்லை. **அது என்னிடம் பல பிறவிகள் எடுப்பதில்லை—அவதாரம் எடுக்கும் அற்புதம் தெரியாதது அது !**—இழந்தது மீளாது—இறந்தது பிழைக்காது--**காதல் ஒரு முறை தான் தோன்றும்**—சைமனை

ஏற்றுக் கொள்கிறேன் — அவ்வளவுதான் !— அதற்குக் “ **காதல்** ” என்று கூறுவது சரியல்ல.”

“உன்னை எப்படிப்பட்டவள் என்று தீர்மானிக்கவே என் அறிவு திணறுகிறது—காதலில்லா வாழ்க்கை குயில் கூவா மாஞ்சோலை.”

“பூஞ்சோலையில் உலாவ நினைக்கிறவர்களுக்குத் தானே குயில்—மயில்—குளுமைத் தென்றல்—எல்லாம் தேவை!—குடிசையில் வாழ்வோருக்கு நிம்மதியான வாழ்வு போதுமே—போதையூட்டும் மகிழ்ச்சி தேவையில்லை—மன அமைதி—அந்திம காலம் வரை எனக்கொரு பாதுகாப்பு—போதும்! வ ா ழ வகை மட்டும் தேவை—வசதியல்ல.”

“இதை நான் எதிர்பார்க்கவில்லை”.

“உண்மை தான். நானும் இதை உணர்கிறேன். என்றாலும் கூட.........ஏற்கனவே நீங்கள் எனக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டு விட்டீர்கள். இனியும் கஷ்டப்படக் கூடாது.”

“இல்லை மேரி! நான் எதையும் கஷ்டமாக அல்ல— கடமையாகவே கருதுகிறேன், முடிந்தால் மட்டுமல்ல— முடியாத நிலையிலும்—கடைசி வரை உனக்குச் சேவை செய்ய விரும்புகிறேன்.”

"எனக்கு இனி ஒன்றும் வேண்டாம்—இதுவரை எனக்காகச் செய்த உபகாரத்திற்கு நன்றி செலுத்துகிறேன்—உளமார நேசிப்பது உண்மையானால், என்னை மறந்து விடுங்கள்—நீங்கள் வாழவேண்டும் —அதுவே எனக்கு ஆனந்தம் — அமைதி — ஆத்ம திருப்தி—எல்லாம்."

"மேரி! உன்னைப் போன்ற சுயநலமற்ற மனித ஜீவனைக் காணவே முடியாது. சுகவாழ்வை 'தூ' வென்று உதறித் தள்ளும் உன் மாதிரிப் பெண்ணை நான் மட்டுமல்ல, இந்தப் பாருலகமே பார்த்திருக்காது. நீ எவ்வளவு நல்ல பெண் தெரியுமா?"

"நானா?—நல்லவளா? ............", என்று கண்ணீரோடு கேட்டாள்.

அவள் முகத்தில் பரிதாபச் சிரிப்புப் படர்ந்தது. அதற்கு மேலே அவளால் நிற்கமுடியவில்லை அங்கே. கால் நரம்புகள் துடித்தன. தள்ளாடினாள். மேரி—அழுகை அரவணைத்த குரலில் "நான் போய் வரட்டுமா?" என்றாள்.

"கடைசிச் சந்திப்பல்ல இது. இப்போது விடை கொடுத்து அனுப்ப விருப்பமில்லை எனக்கு. மீண்டும் உன்னைச் சந்திக்கிறேன். அப்போதாவது..........?" பேச்சை முடிக்கவில்லை அவன்—அதற்கிடையில்......

"மன்னியுங்கள்.......", என்று கூறி 'ஓ'வென்று வாய்விட்டு அலறினாள். திரும்பிக்கூடப் பார்க்காமல் தள்ளாடும் நடையுடன் வேகமாகச் சென்றாள்.

கண்ணீர் மல்கிய கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டே கிளம்பினான் சேகர் அங்கிருந்து.

---

# 11

அன்று அதிகாலையிலேயே எழுந்துவிட்டான் சேகர்.

புத்தாடை புனைந்தான். நன்றாக முடியை வாரி விட்டான். எத்தனையோ நாட்களுக்குப் பின்னர்— இன்று தான் இப்படி விசேடமாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டான். ஏதோவொரு "**புத்துணர்ச்சி**" அவனை இவ்வாறு அழகு செய்து கொள்ளும்படி தூண்டியது. காரணமில்லாமலா இவ்வளவு கவனம் செலுத்துகிறான்?—கடைசி முயற்சி, காரியம் கைகூடும் என்று கருதுகிறான் போலும்!

அன்றுதான் மேரி விடுதலை செய்யப்படுகிறாள். அவளை வரவேற்கச் செல்கிறான். அதற்காகத்தான் இத்தனை ஏற்பாடுகளும் !

மணி என்ன ஆகிறது என்று பார்த்தான். ஒன்பது தான் ஆகி இருந்தது. பதினொரு மணிக்கே மேரி விடுவிக்கப்படுகிறாள் என்று அதிகாரி விவரம் கூறியிருந்தான். இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறதே !

அதுவரை......இதய ஆவலின் அலை ஓசை ஓங்கார மிட்டு என்னென்ன பாடு செய்யப் போகிறதோ!—என்ன செய்வது....?

மேஜையிலே கிடந்த "**பைபிளை**" எடுத்துப் புரட்டினான்.

உலகத்தில் அற்புதமான — புதிய — சமூகத்தைச் சமைக்கக் கூடிய அனுபவ சாத்தியமான உன்னத விதிகள் அதில் அடங்கியிருப்பதாக உணர்ந்திருந்தான் அவன்.

**இவற்றை அப்படியே அமுலுக்குக் கொண்டுவந்தால், உலகம் சுவர்க்க பூமி யாகிவிடும்! வானமண்டலத்துக் கற்பனைச் சுவர்க்கமே தேவையில்லை யல்லவா?**

பைபிளில் இரண்டு மொழிகள் அவன் கண் பார்வையிலே படர்ந்தன—மனதிலே பதிந்தன இப்போது.

"**விபச்சாரம் செய்யக்கூடாது—பெண்களின் அழகை அனுபவிக்க விரும்புவது குற்றமாகும்—ஒரு பெண்ணோடு சேர்ந்து விட்டுப் பின் அவளுக்குத் துரோகம் இழைப்பது தவறு**"-இதனைப் படித்து உணர்ந்த போது, மேரியின் உருவம் சோகத்தின் சாயலாய் அவனுடைய இதயத் தளத்தில் விழுந்தது.

“ **விரோதிகளின் மீது துவேஷம் கொள்ளக்கூடாது—அவர்களோடு சண்டையிடாமல் நேச பாவத்துடன் நெருங்கிச் சேவை செய்யவேண்டும்** ”—இதன் பொருள் அவனுக்கு “**சைமன்**” உருவாகத் தோன்றியது.

“மேரி என்னை மோசம் செய்யமாட்டாள்—இன்று மனம் திருந்தியிருப்பாள்—கண்டிப்பாக என்னை மணந்து கொள்வாள்—ஒரு வேளை இதற்கு இடையூறாக சைமன் வருவானோ?—அப்படி நேர்ந்தால்—அந்த **விரோதியை** நான் நேசிக்கத்தான் வேண்டுமா?”—இப்படி முணு முணுத்தான்.

உடனே எழுந்து மேரியிடம் ஓடுமாறு அவனை யாரோ துரிதப்படுத்திய மாதிரி உணர்வால் உந்தப்பட்டான்—எழுந்தவன் ஓட்டமும் நடையுமாக.........!

கைதிகள் முகாமை நெருங்கிவிட்டான் — கையில் மலர்ச்செண்டு—கண்களில் ஏக்கம்—இதயத்தில் கொந்தளிப்பு—உள்ளே நுழைந்தான் சேகர்.

“அவர்களிருவரும் ஒரு மணி நேரத்திற்கு முன்பே **விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள்**—காலையிலிருந்து சர்வ சதா வெளியே போக வேண்டுமென்று **நச்சரித்தார்கள்—அனுப்பிவிட்டோம்**— ஒரே தொல்லையாய்ப் போய்விட்டது சார்!”—விவரம் கூறினார் அதிகாரி.

பேரிடி விழுந்தாற்போன்ற அதிர்ச்சி! — உடம்பு சிலிர்த்தது—பேந்தப் பேந்த விழித்தான்—உலகமே இருண்டு விட்டதா?— **பித்தம் தலைக்கேறிச் சித்தம் தவறிய நிலையில் தலை தெறிக்க ஓடுகிற பைத்தியக்காரனைப் போல— ஓடினன் சேகர்.**

அன்று அந்தி சாய்கிற நேரம் வரைத் தீவு பூராவும் தேடி அலைந்தான். ஆசைக்கிளி—**மேரி** — கூண்டைத் திறந்து விட்டவுடனே மாயமாய்த் தன் இணையுடன் எங்கே பறந்து ஓடிவிட்டதோ? கால் கடுத்து—கருத் தோய்ந்த நேரத்தில் கடற்கரை வந்து சேர்ந்தான்

நீண்டு கிடக்கும் கடல் வெளியை நோக்கினன் சேகர்!

**புதுமை மணக்கும் "புத்துணர்ச்சி" பூத்தது!**

"**என் புதிய வாழ்க்கை உதயமாகிவிட்டது**" வாய்விட்டுக் கூறினன்.

அங்கே கரை சார்ந்து நின்ற படகில் ஏறினன்— துடுப்பை அசைத்தான் — நகர்ந்தது — தவழ்ந்தது — சென்றது படகு.

**"வந்த காரியம் முடிந்தது! — நான் வருகிறேன் — ஒரு செயலைச் செய்து முடித்தும் முடிக்காததுமாக மற்ருென்றை ஆரம்பித்துவிட்டேன் அல்லவா?"—**

EXTENSION

என்று பல முறை தனக்குள்ளாகவே கூறினன். தெம்பும்—தெளிவும் — அவனது சோர்ந்த முகத்தைப் பசுமையில் மலர வைத்தன.

நடுக் கடலில் படகு லாவகமாய் மிதந்து போயிற்று!—

"**புத்துணர்ச்சி**" வீசும் பார்வையுடன் இருள் கவிந்த கடல் வெளியைக் கூர்ந்து நோக்கினன்!—

தன்னலமற்ற இந்தத் தயாளனைத் தாங்கிச் செல்வ தில் அந்தப் படகுக்குக் கூட எவ்வளவு பெருமிதம்!—

அவ்வளவு லளிதமாய் அலைகளைத் தழுவித் தழுவிப் போய்க்கொண்டே இருந்தது! — அந்தப் படகு போகிறது..........! இன்னும் போகிறது!! முடிவற்றுப் போகிறது....!!!

அவனுடைய வாழ்க்கையின் புதிய கட்டம் — புதுமை நிலை— "**புத்துணர்ச்சி**" — **எவ்வாறு எங்கு போய் முடியுமோ!**—புத்துயிர் பெற்று விட்டானே!

**இதைக் காலமும் கடலும் தான் நிரூபிக்க வேண்டும்!— நிர்ணயிக்க வேண்டும்!**

1346

UNIVERSITY LIBRARY MADRAS. 31 MAY 1957

UNIVERSITY EXTENSION LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY Univ. Grants Commission

1346

O142:3M26
J5

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1